லியோனார்டோ டா வின்ஸி	 மோனா லிசா - லியோனார்டோடா வின்ஸி

@KTBS NOT TO BE REPUBLISHED

லியோனார்டோ டா வின்ஸி ஒரு அற்புதமான ஓவியர், சிற்பி, விஞ்ஞானி, பொறியாளர், கட்டிடக் கலைஞர் மற்றும் கணிதவியலாளர் ஆவார். ‘வர்ஜின் ஆன் தி ராக்ஸ்’, ‘தி லாஸ்ட் சப்பர்’ மற்றும் ‘மோனாலிசா’ ஆகியவை இவரது புகழ்பெற்ற ஓவியங்கள் ஆகும்.

> டா வின்ஸி அனைத்து துறைகளிலும் தனது சமக்காலத்தவர்களை மிஞ்சினார். அவர் பறக்கும் இயந்திரம், நீர்மூழ்கிக் கப்பல், பாராசூட் மற்றும் டேங்கர் மாதிரிகளைத் தயாரித்திருந்தார் இருப்பினும் அவரது அறிவியல் சாதனைகளைப் பற்றி நீண்ட காலமாக மக்களுக்குத் தெரியவில்லை. அவர் ஒரு சிறந்த கட்டிடக் கலைஞராகவும் இருந்தார், மேலும் இத்தாலியில் கால்வாய்கள் மற்றும் கோட்டைகளைக் கட்டினார். இசையிலும் தத்துவத்திலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். ஒரே நேரத்தில் இரண்டு கைகளாலும் அவரால் எழுத முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதித்யா : ஐயா, மறுமலர்ச்சிக் காலத்தில் அறிவியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பற்றி கூறவும்.

ஆசிரியர் : மறுமலர்ச்சி காலத்திலேயே நவீன அறிவியலின் வளர்ச்சி தொடங்கியது எனக் கூறலாம். வானவியலில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டது. சூரியனைச் சுற்றி வரும் பல கோள்களில் பூமியும் ஒன்று என்று போலந்து நாட்டைச் சேர்ந்த கோப்பர்நிக்கஸ் அறிந்திருந்தார். இவரது ஆராய்ச்சி தேவாலயத்தின் நம்பிக்கைகளுக்கு முரணாக இருந்ததால், அவரது கண்டுபிடிப்புக்களை நூல் வடிவத்திலும் வெளியிட முடியவில்லை.



கோபர்நிகஸ்

> கோப்பர்நிக்கஸின் காலத்தில் சூரியன் பூமீயைச் சுற்றி வருகிறது என்ற டால்மியின் கூற்றை தேவாலயம் நம்பியது.

பின்னர் ஜெர்மானியக் கணிதவியலாளரான கெப்லர், கோபர்நிக்கஸின் கண்டுபிடிப்புகள் உண்மை என்று நிரூபித்தார்.

இத்தாலிய வானவியலாளர் கலிலியோ தொலை நோக்கியைக் கண்டு பிடித்தார். அவர் கோப்பர்நிக்கஸின் விவாதத்தை உறுதியாக முன்மொழிந்தார். ஆகவே அக்கால்த்திய தேவாலயம் அவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியது (இன்குவிஜிஷன்) அவர் தனது அறிக்கையைத் திரும்பப் பெற்று, தனது தவறினை ஏற்றுக் கொண்ட பிறகு, கலிலியோ விடுதலை செய்யப்பட்டார்.



கலிலியோ

இங்கிலாந்தின் சர் ஐசக் நியூட்டன் காற்றில் வீசப்பட்ட பொருட்கள் கீழே விழுவதற்கு புவி ஈர்ப்பு விசையே காரணம் என்று நிரூபித்தார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

வில்லியம் ஹார்வே (பொ.ச.1478 - 1557) மனித உடலில் இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தார். வெஸெலியஸ் என்ற பெல்ஜிய விஞ்ஞானி உடலின் இரத்த ஓட்டத்தைப் பற்றி ஒரு விலைமதிப்பற்ற நூலை வெளியிட்டார். தேவாலயத்தின் நம்பிக்கைகளை கேள்விகளுக்கு உட்படுத்தியதற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

வெவ்வேறு எடை கொண்ட இரண்டு பொருள்கள் ஒரே உயரத்திலிருந்து கீழே விழும் போது, அவை ஒரே நேரத்தில் தரையைத் தொடும் என்பதை கலிலியோ தனது சோதனைகளின் மூலம் நிரூபித்தார். பீசா கோபுரத்தில் இருந்து பல்வேறு எடைகள் கொண்ட பீரங்கி பந்துகளை கீழே போட்டு இதை செயல்முறையாக செய்து நிரூபித்தார்.

நவீன மறுபலர்ச்சி ஆனது சமூகத்தின் மீதும் நாகரீகங்களின் மீதும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

NOT TO BE REPUBLISHED @KTBS

2.2 மத சீர்திருத்தம்

ஞாயிறு காலைத் வழிப்பாட்டிற்குப் பிறகு சர்ச்சில் இருந்து வெளியே வந்த பீட்டரும் லில்லியும் மிகுந்த ஆர்வத்துடன் பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர்.

பீட்டர்: கிறித்துவத்தில் பல பிரிவுகள் உண்டா?

ஜான்: ஆம், கிறித்துவத்தில் பல பிரிவுகள் உள்ளன. கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டன்ட் ஆகிய இரண்டும் அவைகளில் இரண்டு முக்கியமான பிரிவுகள் ஆகும்

பீட்டர்: கிறித்துவர்களிடையே இந்த பிரிவுகள் தோன்றுவதற்கான காரணங்கள் என்ன?

ஜான்: இடைக்காலத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் பல ஒழுங்கற்ற செயல்கள் நடைபெற்று வந்தன. ஒரு எளிமையான, சமய வாழ்க்கைக்குப் பதிலாக பாப்பரசரும், சர்ச் அதிகாரிகளும் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்தினர்.

மன்னர்களுக்கும் பாப்பரசருக்கும் இடையே பல மோதல்கள் ஏற்பட்டதால், சமூகத்தில் பாப்பரசர் மீதான மரியாதை குறைந்தது. அரசியல் விஷயங்களில் பாப்பரசர் தலையிடுவதை

மன்னர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பாப்பரசர் தேவாலயத்தின் பல பதவிகளை விற்று ஏராளமான சொத்துக்களை குவித்ததால் தான் ஜான் வைக்லிஃப், ஜான் ஹஸ், மார்டின் லூதர் மற்றும் பலர் தேவாலயத்தின் தவறுகளை வெவ்வேறு காலகட்டங்களில் வெளிப்படுத்தத் தொடங்கினர்.

ஜான் விக்கிளிஃப் (1324-84): ஜான் விக்கிளிஃப் மத சீர்திருத்தத்தின் ''விடிவெள்ளி'' (Morning Star) என்று அழைக்கப்படுகிறார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தார். தேவாலயத்தின் சட்ட விரோத செயல்களை அவர் வெளிப்படுத்தினார்.

ஜான் ஹஸ் (1367-1415): இவர் தேவாலயத்தின் ஒழுக்கக்கேடான செயல்களைக் கடுமையாக கண்டித்தார். தேவாலயத்தின் நீதிமன்றம் (Court of the Church) அவரை வரவழைத்து, தேவாலயத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி வலியுறுத்தியது. அதற்கு ஜான் ஹஸ், ''எனது மனசாட்சிக்கு விரோதமான எந்த கருத்தையும் என்னால் ஏற்க முடியாது'', என்றார். அவர் தேவாலயத்தையும் அதன் நீதிமன்றத்தையும் எதிர்த்ததால் அவர் ஒரு துரோகியாகக் கருதப்பட்டார். மேலும் அவர் உயிருடன் எரிக்கப்பட்டார்.

கத்தோலிக்க நம்பிக்கையில் விரிசல் ஏற்பட்டதற்கான மற்றொரு காரணம் 'மன்னிப்புப் பத்திரங்கள்'. விற்பனை. பாப்பரசரான பத்தாம் லியோவுக்கு 'ரோம்' புனித பேதுரு (St. Peter) தேவாலயத்தை புனரமைக்க பணம் தேவைப்பட்டது. அதனால் மன்னிப்பு பத்திரங்களை வாங்கியவர்கள் அனைவரும் பாவத்திலிருந்து விடுபட்டு விண்ணுலகம் செல்வார்கள் இவை பரலோகம் செல்வதற்கான பயணச் சீட்டுகள் என்ற மூட நம்பிக்கைகள் வளர்க்கப்பட்டன. இவற்றை எல்லாம் புரிந்துக் கொண்ட மார்டின் லூதர், பணத்தைப்பெற்று மக்களின் பாவங்களைக் கழுவ முடியுமானால் பாப்பரசர் ஏன் அதை இலவசமாகச் செய்யவில்லை என்று கேள்வி எழுப்பினார். இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில் லூதர் தாமே ஒரு கிறித்துவராக இருந்து அக்காலத்து சர்ச்சின் எல்லை மீரிய செயல்பாடுகளைப் பற்றி கேள்வி கேட்கும் மனப்பான்மை உடையவராக இருந்தார் என்பதேயாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

லில்லி: மார்டின் லூதர் யார்?

ஜான்: மார்டின் லூதர் ஜெர்மனியில் மதச் சீர்த்திருத்த இயக்கத்தை வழிநடத்திய தலைவர் ஆவார். புனித அகஸ்டின் தேவாலயத்தில் பாதிரியாராக இருந்தார்.

மார்டின் லூதர்

ரோம் நகரத்தில் பாப்பரசர் மற்றும் மதகுருமார்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கண்ட மார்டின் லூதர் அதற்கு எதிராக கிளர்ச்சி செய்தார். அவர் 95 ஆய்வறிக்கைகள் அல்லது பாவமன்னிப்புக் கடிதங்களுக்கு எதிராக எழுதி விட்டன் பர்க் தேவாலயத்தின் பிரதான வாசலின் மீது பொருத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஊட்டினார்.

லூதர் விவிலியத்தை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். இதன் மூலம் சாதாரண மக்களும் விவியியத்தைப் (Bible) படிக்க உதவினார். அவர் திருப்பலியை (Religious service) இலித்தீன் மொழிக்கு பதிலாக ஜெர்மன் மொழியில் நிறைவேற்றினார்.

பாப்பரசர் லூதரை தண்டிக்க ரோம் அரசருக்கு கட்டளையிட்டார். பல மன்னர்கள் லூதருக்கு ஆதரவாக இருந்ததால் அவரை தண்டிக்க முடியவில்லை. லூதரை பின்பற்றுபவர்களை கத்தோலிக்க திருச்சபை புராடெஸ்டன்ட்கள் (கலகம் செய்பவர்கள்) என்று குறிப்பிட்டது. படிப்படியாக, புராடெஸ்டன்ட்கள் கிறித்துவத்தின் ஒரு பிரிவாகத் தோன்றி உலகம் முழுவதும் பரவினர். இந்த வளர்ச்சி தாராள விவாதம் என்ற அரசியல் கோட்பாட்டிற்கு காரணமானது.

பீட்டர் : கத்தோலிக்க திருச்சபையின் மீது மறுமலர்ச்சி ஏற்படுத்திய விளைவுகள் என்ன?

ஜான்: கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் மனதில் பல சந்தேகங்கள் எழ ஆரம்பித்தன. அவர்கள் தேவாலயத்தை விட்டு விலக ஆரம்பித்தனர். இதைப் பார்த்த ரோமன் கத்தோலிக்கர்கள் தங்கள் தேவாலயத்தில் சில சீர்திருத்தங்கள் தேவை என்பதை உணர்ந்தனர். இந்த நோக்கில்

©KTBS NOT TO BE REPUBLISHED

கத்தோலிக்க திருச்சபையை தூய்மைபடுத்தி அதை வலுவாக்க ‘எதிர் மறுமலர்ச்சி’ என்ற இயக்கம் துவக்கப்பட்டது.

லில்லி: எதிர்-சீர்திருத்தம் (Counter Reformation) என்றால் என்ன?

ஜான் : கத்தோலிக்க திருச்சபையை சீர்திருத்தும் முயற்சியே எதிர்-சிர்திருத்தம் அல்லது கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தம் ஆகும்.

லில்லி: எதிர்-சீர்திருத்த இயக்கத்தின் தலைவர் யார்?

ஜான்: எதிர்-சீர்திதத்தத்தின் தலைவர் இக்னேஷியஸ் லயோலா. இவர் **1541** ஆம் ஆண்டு இயேசு சபையை நிறுவினார்.

இக்னேஷியஸ் லயோலா

இக்னேஷியஸ் லயோலா : லயோலா ஸ்பெய்னில் இராணுவ ஜெனரலாக இருந்தார் கத்தோலிக்க திருச்சபையை விட புராட்டெஸ்டன்ட் சபை வேகமாக வளர்ந்து வருவதை அவர் கண்டார். நேர்மையாளராகவும், ஆர்வமுள்ளவராகவும் இருந்த லயோலா, கிறித்துவத்தின் மீது மீண்டும் நம்பிக்கை உண்டாகும் வகையில் கிறித்துவத்தில் பல சீர்த்துத்தங்களைக் கொண்டு வர முடிவு செய்தார். கத்தோலிக்க உபதேசம், பிரச்சாரம், கல்வி பிரச்சாரம் முதலியவை ‘ஜிசஸ் சபை’ (இயேசு சபை) இன் சீடர்களான ஜெசு விட்டரின் பணி என்று அவர் பறைசாட்டினார்.

இயேசு சபை உறுப்பினர்கள் ஜெசுவிட் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் மதத்துடன், கல்வி மற்றும் சுகாதார வசதிகளை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தினர். அவர்களின் முயற்சியின் பலனாக, கத்தோலிக்க திருச்சபை மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற்றது.

பீட்டர்: மத சீர்திருத்த இயத்தத்தின் விளைவுகள் என்ன?

ஜான்: இயேசுவை பின்பற்றியவர்கள் கத்தோலிக்கர் மற்றும் புரோடெஸ்டன்ட்டினர் என இருபிரிவுகளாக பிரிந்தனர். கத்தோலிக்க திருச்சபை மதத்தின் பெயரால் செய்து வந்த சட்டவிரோதமான செயல்கள் முடிவுக்கு

©KTBS NOT TO BE REPUBLISHED

வந்தன. பாப்பரசர் மற்றும் மன்னர்களுக்கு இடையே அதிகாரத்துக்காக நடந்த போராட்டத்தில் மன்னர்கள் வலுவடைந்தனர்.

செயல்பாடு: மார்டின் லூதர் கிங் பற்றிய கூடுதல் தகவல்களை சேகரிக்கவும்.

2.3 புவியியல் ஆய்வுகள்

நாகரத்னா: ஐயா, புவியியல் ஆய்வு என்றால் என்ன?

ஆசிரியர் : 15 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பியர்கள் உலகிலுள்ள இடங்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை. பூமி தட்டையானது என்ற நம்பிக்கையுடன், ஐரோப்பாவின் கடலோர பகுதிகளில் மட்டும் அவர்கள் வர்த்தகம் செய்து வந்தனர். படிப்படியாக ஐரோப்பியர்கள் தமது ஆர்வம், வர்த்தகம் மற்றும் சாகச மனப்பான்மையினால் பூமியின் புதிய பகுதிகளை ஆராய்ந்தறிந்தனர். இந்த கண்டுபிடிப்புகள் 'புவியியல் ஆய்வுகள்' என்று அழைக்கப்பட்டன.

பூமி தட்டையானது என்றும் பூமியின் விளிம்பில் செங்குத்தான பள்ளம் இருப்பதாகவும் சர்ச் தலைவர்கள் நம்பினர். இதனால்தான் மாலுமிகள் கடல் பயணத்தை மேற்கொள்ள அஞ்சினார்கள்.

சந்தோஷ்: புவியியல் ஆய்வுக்கான காரணங்கள் என்ன?

ஆசிரியர்: புவியியல் ஆய்வுக்கான காரணங்கள் பின்வருமாறு.

- **கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தின் மீதான தாக்குதல்:** பொ.ச.1453 இல் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தை தன் வசப் படுத்திக்கொண்டனர். இதனால் இந்த நகரத்தின் வழியாக நடைபெற்றுக்கொண்டிருந்த ஐரோப்பியர்களின் வர்த்தகத்திற்கு தடை ஏற்பட்டது. எனவே கிழக்கு ஆசிய நாடுகளுக்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பது ஐரோப்பியர்களுக்கு இன்றியமையாததாகிவிட்டது.
- **மார்க்கோ போலோவின் அறிக்கை:** ஆசிய நாடுகளைப் (இந்தியா, சீனா) பார்வையிட வருகை தந்த மார்கோ போலோ, தனது அறிக்கையில் ஆசிய நாடுகள் மிகவும் செல்வச்

@KTBS NOT TO BE REPUBLISHED

செழிப்புடன் இருந்ததாகக் குறிப்பிட்டார். அவருடைய அறிக்கை ஐரோப்பிய வர்த்தகர்களின் புவியியல் ஆய்வுகளின் மீது ஆர்வத்தைக் தூண்டியது.

- **ஆசிய பொருட்களுக்கான தேவை:** ஐரோப்பாவில் வாசனைப் பொருட்கள் மற்றும் ஆசிய நாட்டின் பொருட்களுக்கு அதிக தேவை இருந்தது.

குங்குமப்பூ, தேக்கு, பருத்தி, ஜவுளி, புளி, கருப்பு மிளகு, கிராம்பு, இலவங்கப்பட்டை, சந்தனம், கஸ்தூரி, ஏலக்காய், வைரம் மற்றும் ஜாதிக்காய் முதலிய இந்தியப் பொருட்களுக்கு ஐரோப்பாவில் பெரும் தேவை இருந்தது.

- **அறிவியல் கண்டுபிடிப்புகள்:** திசைகாட்டி, ஆஸ்ட்ரோலேப்கள் (கோள் காண் வட்டு) மற்றும் கேரவெல் எனப்படும் பெரிய பாய்மர கப்பல்கள் போன்ற புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் கடல் பயணத்தில் ஈடுபட்டுள்ள கடல் வழி மாலுமிகளுக்கு (Navigator) ஒரு வரப் பிரசாதமாக விளங்கின.

திசைக்காட்டி

ஆஸ்ட்ரோலேப்கள்

கேரவெல்

செயல்பாடு: திசைகாட்டி மற்றும் ஆஸ்ட்ரோலேப் மாலுமிகளுக்கு (Navigators) எவ்வகையில் வரப்பிரசாதமாக திகழ்ந்தன என்பதை அறியவும்.

- **மத உந்துதல்:** கிறித்துவ சமய பரப்பாளர்கள் தங்கள் மதத்தை பரப்புவதற்காக அவர்களுடைய பார்வை ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் பக்கம் திரும்பியது.

ஜஹனாரா : கடல் பயணத்தை மேற் கொண்ட முதல் மாலுமி (Navigator) யார்?

NOT TO BE REPUBLISHED



@KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் : கடல் பயணத்தை முதன் முதலில் மேற்கொண்டவர்கள் போர்ச்சுகீசியர்கள். இந்தியாவிற்கும் சீனாவிற்கும் கடல் வழியைக் கண்டுபிடிப்பது போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றியினுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. அதற்காக ஒரு கடற்படை பள்ளி (School of Navigation) யை திறந்தார். எனவே, அவர் ''ஹென்றி தி நேவிகேட்டர்' என்று அறியப்பட்டார். அவருடைய ஊக்கம் கண்டுபிடிப்புகளுக்கு தூண்டுதலாயிருந்தது.

''கடற்படை பள்ளி'யை (School of Navigation) நிறுவியவர் ஹென்றி ஆவார். இப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஆண்டுதோறும் ஆப்பிரிக்காவின் 'மேற்கு கடற்கரைப் பகுதிக்கு சுற்றுலா செல்வது வழக்கம். 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், மாலுமிகள் காற்று : அலைகள், உயர் அலைகள் பற்றிய போதுமான தகவல்களை, சேகரித்து இருந்தனர். பல முக்கியமான ஐரோப்பிய மாலுமிகள் வானியலாளர்கள், புவியியலாளர்கள் இப்பள்ளிக்கான தகவல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

ரமேஷ்: மாலுமிகள் எந்தெந்த நிலப்பகுதிகளை கண்டு பிடித்தனர்?

ஆசிரியர்: போர்ச்சுகீசிய மாலுமி, பர்தோலோமியோ டயஸ், அரசு ஆதரவின் கீழ் ஒரு பயணத்தை மேற்கொண்டார் மற்றும் 1488 ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவின் தெற்கு முனை (Cape Of Africa) யை வந்தடைந்தார். அங்கு அவருடைய கப்பல்கள் புயல் காற்றினால் தாக்கப்பட்டன. அதனால் அந்த இடத்திற்கு 'புயலின் முனை' (Cape Of Storm) எனப் பெயரிட்டார். எனினும் இந்தப் பயணம் எதிர்கால பயணங்களுக்கு நம்பிக்கை அளித்ததால் அரசர் இரண்டாம் ஜான் இவ்விடத்திற்கு ''நன்னம்பிக்கை முனை' (Cape Of Good Hope) என்று பெயரிட்டார்.

- **வாஸ்கோ டா காமா :** மற்றொரு போர்ச்சுகீசிய மாலுமியான வாஸ்கோ டா காமா, டயாஸின் பாதையில் சென்று "நன்னம்பிக்கை முனையை" அடைந்தார். அங்கிருந்து அவர் ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரையில் உள்ள மெலின்தா தீவை அடைந்தார். அரபிக்கடலையும், இந்தியப் பெருங்கடலையும் கடந்து 1498ல் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள கோழிக்கோடு (கள்ளிக் கோட்டை) வந்தடைந்தார். இவ்வாறு இந்தியாவிற்கு ஒரு புதிய கடல் வழி கண்டுபிடிக்கப்பட்டது.

வாஸ்கோ டா காமா

வாஸ்கோடா காமா உண்மையில் வந்தடைந்தது கோழிக்கோட்டில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'கப்பாட்' என்ற இடம் ஆகும். அப்போது ஜாமோரின் மன்னர்கள் கோழிகோடை ஆட்சி செய்து வந்தனர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

- **கிறிஸ்டோபர் கொலம்பஸ் :** ஸ்பானிய மாலுமி, கிறிஸ்டோபர் கொலம்பஸ் 'பூமி உருண்டை' என்ற நம்பிக்கையுடன் மேற்கு நோக்கி கடல் பயணத்தை மேற் கொண்டார். இதற்காக அவர் ஸ்பெயின் மன்னர் ஃபெர்டினாண்ட் மற்றும் ராணி இசபெல்லா ஆகியோரின் உதவியைப் பெற்றார். அவர் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து பஹாமா தீவுகளை அடைந்தார். அந்தப் பகுதியே இந்தியா என்று அவர் நினைத்தார். அதனால் அங்குள்ள மக்களை "ரெட் இண்டியன்ஸ்' என்று அழைத்தார். உண்மையில் அந்த இடம் வெஸ்ட் இண்டீஸ் என்று அழைக்கப்படும் தீவுகளின் கூட்டமாகும். கொலம்பஸ் இறக்கும் வரையிலும் அவர் ஒரு புதிய பூமிப்பகுதியைக் கண்டுபிடித்தார் என்பதை அவர் அறிந்திராதது வியக்கத்தக்கது.

கிற்டோபர் கொலம்பஸ்

கிறிஸ்டோபர் கொலம்பஸ்: மேற்கு நோக்கிப் பயணம் செய்து அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து இந்தியாவை அடைய வேண்டும் என்ற இலட்சியம் அவருக்கு இருந்தது. ஆகஸ்ட் பொ.ச.1492 இல், கொலம்பஸ் மூன்று கப்பல்களில் 88 மாலுமிகளுடன் பவுலோஸ் துறைமுகத்திலிருந்து அட்லாண்டிக் பெருங்கடலை நோக்கி தனது கடல் பயணத்தை மேற்கொண்டார். ஏறக்குறைய இரண்டு மாதங்கள் கடற்பயணம் செய்தும் அவரால் நிலத்தைக் காண முடியவில்லை. அவரது மாலுமிகள் அவருக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அடுத்த மூன்று நாட்களில் முதலில் தரையிறங்கிய மாலுமிக்கு ஓராண்டு சம்பளத்துடன் சிறப்புப் பரிசு வழங்குவதாதக் கூறி கொலம்பஸ் அவர்களை உற்சாகப்படுத்தினார். இந்த வாக்குறுதியால் உற்சாகமடைந்த மாலுமிகள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். 1492 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதி காலை நிலத்தைக் கண்டனர்.

தென் அமெரிக்காவின் கண்டு பிடிப்பு : கேப்டன் பெத்ரோ கப்ரால் தலைமையில் போர்ச்சுகீசிய கடற்படை இந்தியாவை நோக்கி ஒரு பயணத்தைத் மேற்கொண்டது. வழியில், பலத்த பெருங் காற்று கப்பல்களைத் தாக்கியதால் கப்பல்கள் வழித்தவறி மேற்கு நோக்கி நகர்ந்து, தென் அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையை அடைந்தன. இவ்வாறு தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாடு கப்ரால் என்பவரால் கண்டு பிடிக்கப் பட்டது.

இத்தாலியின் அமெரிகோ வெஸ்புசி, கொலம்பஸ் சென்ற அதே பாதையில் சென்று தென் அமெரிக்கா கண்டத்தை அடைந்தார். கொலம்பஸ் கண்டுபிடித்த பூமிப்பகுதி இந்தியா அல்ல, அது ஒரு 'புதிய உலகம்' என்று உலகிற்கு அறிமுகப்படுத்தினார் எனவே ஜெர்மன் புவியியலாளர் மார்டின் வால்ட் சிமுல்லர், இந்தப் புதிய உலகத்திற்கு 'அமெரிகோ' வெஸ்பூசியின் பெயரை வைத்து 'அமெரிக்கா' என்று பெயரிட வேண்டும் என்று ஆலோசித்தார். அவரது பரிந்துரையின்படி அப்பெயரே அங்கீகரிக்கப்பட்டது.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஃபெர்டினன்ட் மெகலன்: ஃபெர்டினான்ட் மெகலன்' ஒரு சாகசப் போர்ச்சுகீசிய மாலுமி ஆவார். உலகை முதன் முதலில் சுற்றி வந்த பெருமை இவரையே சாரும். 5 கப்பல்களுடன் ஸ்பெயினில் இருந்து புறப்பட்ட மெகலன், 267 கூட்டாளிகளுடன் தென் அமெரிக்காவின் தெற்கு முனையின் வழியே பசிபிக் பெருங்கடலைக் கடந்து பிலிப்பைன்ஸை அடைந்தனர். ஆனால் அங்கு இருந்த பூர்வீக குடிமக்களுடன் ஏற்பட்ட மோதலில் அவர் கொல்லப்பட்டார். மற்றவர்கள் 'விக்டோரியா' என்ற கப்பலில் தாய்நாடான ஸ்பெயினுக்குத் திரும்பினர்(பொ.ச.1522).இதனால்தான் 'பூமி உருண்டையாக உள்ளது' என்பது தெளிவானது. பூமி முழுவதையும் சுற்றிமுடித்த முதல் கப்பல் விக்டோரியா எனலாம்.

பெர்டினான்ட் மெக்கலன்

ஃபெர்டினான்ட் மெக்கலன் பூமி உருண்டை என்று நம்பினார். அவர் மேற்கு திசைக்கு எதிராகப் பயணித்து கிழக்கு நாடுகளுக்கு ஒரு வழியைக் கண்டறிய விரும்பினார். அவர் அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக பயணம் செய்து தென் அமெரிக்காவின் தென்பகுதியில் உள்ள குறுகலான ஜலசந்தியைக் கடந்த பிறகு, ஒரு அமைதியான கடலுக்குள் நுழைந்தார். அவர் கடந்து வந்த ஜலசந்தி மெகலன் 'ஜலசந்தி' என்றும் கடல் 'பசிபிக் பெருங்கடல்' என்றும் அழைக்கப்பட்டது.

மைக்கேல்: புவியியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் என்ன?

ஆசிரியர்: புவியியல் கண்டுபிடிப்புகள் ஐரோப்பிய நாகரிகத்தின் மீது மட்டுமல்ல, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா மக்கள் மற்றும் கலாச்சாரத்தின் மீதும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியது.

© KTBS NOT TO BE REPUBLISHED

- **வர்த்தகத்தின் விரிவாக்கம் :** ஐரோப்பியர்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நிலங்களைத் தங்கள் வணிகக் காலனிகளாக மாற்றினர். இதன் விளைவாக உலக வர்த்தகம் பரவலாக விரிவடைந்தது. ஆசிய பொருட்கள் ஐரோப்பாவில் ஒரு பெரிய சந்தையைக் கைப்பற்றியது. இவ்வனைத்து வணிக நடவடிக்கைகளால் கிடைத்த லாபம் ஐரோப்பியர்களுடையது ஆகும்.
- **அடிமைகளின் வியாபாரம் :** ஐரோப்பியர்கள் மேற்கிந்திய தீவுகள், மெக்சிகோ, பெரு மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் பூர்விக குடிமக்களை தங்கள் அடிமைகளாக ஆக்கிக் கொண்டனர். காலப்போக்கில், அவர்கள் அடிமைகளை பொருட்களைப் போல விற்கத் தொடங்கினர். இந்த அடிமை வியாபாரம் காலப்போக்கில் மனிதாபிமானமற்றதாக மாறியது. அடிமைகளைக் கடினமாக உழைக்கச் செய்வித்து கொடூரமாக நடந்தினர்.
- **கிறித்துவக் கொள்கைகளைப் பரப்பல் :** இந்த வளர்ச்சி கிறித்துவ கொள்கைகளை உலகமெங்கும் பரவ காரணமானது. காலனித்துவ முறை உருவாகுவதில் இவ்வளர்ச்சி பெரும்பங்கு வகித்தது.
- **அரசியல் விளைவு :** காலனிகள் மற்றும் அவற்றின் செல்வங்களைக் கைப்பற்றிக் கொள்வதில் ஐரோப்பிய நாடுகளிடையே கடுமையான போட்டி நடந்தது. ஐரோப்பிய நாடுகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் தமது காலனிகளை நிறுவின.

@KTBS NOT TO BE REPUBLISHED

> ‘காலனித்துவம்’ என்பது ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது மேற்கொள்ளும் அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாட்டைக் குறிப்பிடுகிறது. சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா இங்கிலாந்தால் காலனித்துவப்படுத்தப்பட்டது.

முக்கிய வருடங்கள் :

1488 : பர்தலோமியோ டயஸ் ஆப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்தார்.

1498 : வாஸ்கோடாகாமா கோழிக்கோடை அடைந்தார்.

1492 : கொலம்பஸ் அமெரிக்காவை அடைந்தார்.

1519- 1522 : மெக்கலன் - கடற் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. மறுமலர்ச்சி __________ இல் தொடங்கியது.
2. மறுமலர்ச்சி காலத்திய புகழ்பெற்ற ஓவியர்கள் __________ மற்றும் __________.
3. கொலம்பஸ் அமெரிக்காவின் பழங்குடியினரை __________ என்று அழைப்பர்.
4. பூமியை சுற்றி வந்த முதல் கப்பல் __________.
5. ஜெர்மனியில் மத சீர்த்திருத்த இயக்கத்தைத் தொடங்கியவர் __________.

@KTBS NOT TO BE REPUBLISHED

II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வார்த்தை அல்லது வாக்கியத்தில் விடையளிக்க :

6. மறுமலர்ச்சியின் இரண்டு அம்சங்கள் யாவை?
7. அச்சு இயந்திரம் மறுமலர்ச்சியை எவ்வாறு தூண்டியது?
8. மறுமலர்ச்சி காலத்தின் மூன்று புகழ்பெற்ற எழுத்தாளர்கள் யாவர்?
9. வில்லியம் ஷேக்ஸ்பியர் யார்?
10. மறுமலர்ச்சி காலத்தின் நன்கு அறியப்பட்ட இரண்டு விஞ்ஞானிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. எதிர் சீர்திருத்தம் என்றால் என்ன?
12. மார்கோ போலோ யார்?
13. காப்பர் நிக்கஸின் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

III. விவாதிக்கவும் :

14. கலை, இலக்கியம் மற்றும் அறிவியல் துறைகளுக்கு மறுமலர்ச்சி இயக்கத்தின் பங்களிப்புகளை விளக்குக.

15. மத சீர்திருத்த இயக்கத்தில் மார்டின் லூதரின் பங்கு என்ன?

16. புவியியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகளை விவாதிக்கவும்.

செயல் பாடுகள்:

1. மறுமலர்ச்சி காலத்தின் கட்டிடக்கலை, சிற்பக்கலை மற்றும் ஓவியங்களின் புகைப்படங்களை சேகரித்து, அவற்றை ஒரு புத்தகத்தில் ஒட்டி, சிறுகுறிப்பு எழுதி ஆல்பம் தயாரிக்கவும்?
2. கீழ்கண்ட மதச் சீர்திருத்தத் தலைவர்களைப் பற்றிய கூடுதல் தகவல்களை சேகரிக்கவும்- ஜான் விக்லிஃப், இக்னேஷியஸ் லயோலா.
3. புதிய நிலங்களைக் கண்டுபிடித்த மாலுமிகளைப் பற்றிய தகவல்களை சேகரிக்கவும்.
4. பி.ஜி.எல் சுவாமி அவர்களின் 'நம் வயிற்றில் தென் அமெரிக்கா' என்ற புத்தகத்தைப் படித்து ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு அறிமுகப் படுத்திய பழங்கள் மற்றும் காய்கறிகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம்-3

இந்தியாவிற்கு ஐரோப்பியர்களின் வருகை

J2S9V3

பாட அறிமுகம்:

பொ.ச. 1498 மே 17 அன்று வாஸ்கோ டா காமா கேரளாவின் கல்லிக்கோட்டையை வந்தடைந்து இந்தியாவிற்கு ஒரு புதிய கடல்வழியைக் கண்டு பிடித்தார். இது ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வரக்காரணமானது. இக்கடல் வழியின் கண்டுபிடிப்பினால் போர்ச்சுகீசியர்கள் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் வணிகத்திற்காக இந்தியாவிற்கு வந்தனர்.

திறன்கள்:

1. இந்தியாவில் ஐரோப்பியர்களின் ஆரம்பகால செயல்பாடுகளை அறிந்துகொள்ளுதல்.
2. இந்தியாவில் ஐரோப்பியர்களின் இடையில் நடந்த மோதல்களைப் புரிந்துகொள்ளுதல்.
3. இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய வணிகக் கம்பனிகளை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்.
4. முடிவில் ஆங்கிலேயர்கள் வலுவாக நிலைக்க காரணமான அம்சங்களை பட்டியலிடுதல்.
5. இந்திய வரைபடத்தில் ஐரோப்பியர்களின் வியாபார இடங்களை அடையாளப்படுத்துதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

போர்ச்சுக்கீசியர்கள்: (பொ.ச. 1498-1961)

பொ.ச. 1498 மே 17 அன்று வாஸ்கோடகாமா கேரளத்துக் கள்ளிக்கோட்டையை வந்தடைந்து இந்தியாவிற்கு புதிய கடல் வழியை கண்டுபிடித்தார். இந்த கடல்வழி மூலமாக இந்தியாவிற்குள் நுழைந்த ஐரோப்பியர்களில் போர்ச்சுக்கீசியர்கள் முதலாமவர்கள். கிழக்கு நாடுகளுடன் வியாபாரத்தில் தனித்த உரிமையை சாதித்தனர். காலனி சாம்ராஜ்ஜியத்தை அமைப்பது, கிறித்துவ மதத்தை பிரச்சாரம் செய்வது இவர்களுடைய அடிப்படைக் குறிக்கோள்கள்.

போர்ச்சுக்கீசியர்கள் வளர்ச்சிக்குக் காரணங்கள் :

- கள்ளிக்கோட்டையின் அரசர் ஜாமொரின் போர்ச்சுகீசிய மாலுமியான வாஸ்கோடகாமாவிற்கு வணிக அனுமதி கொடுத்தார்.

- பொ.ச. 1509இல் அல்புகர்க் இந்திய ஆளுநராக (வைசராய்) நியமிக்கப்பட்டார். இவர் பொ.ச 1510 இல் விஜயபுரத்து சுல்தானிடமிருந்து கோவாவை கைப்பற்றினார். போர்ச்சுகீசியர்கள் இந்தியாவை விட்டு போகும்வரை, கோவா போர்ச்சுகீசியர்களின் தலைநகரமாக இருந்தது.
- அல்புகரக்கிற்குப் பிறகு வந்த கவர்னர் டியூ, தமன், சால்செட், பெஸ்ஸீன், சௌல், மும்பை, சாந்தோம் மற்றும் வங்காளத்தின் ஹூக்லி முதலான இடங்களில் தமது காலனிகளைத் தொடங்கினார்.

போர்ச்சுக்கீசியர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் :

- பலமான கப்பற்படையை வைத்திருந்த டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள், போர்ச்சுகீசியர்களின் முக்கிய போட்டியாளர்களாக இருந்தனர்.
- போர்ச்சுகீஸ் அரசுப் பணியாளர்கள் ஊழல் செய்ததால் நம்பிக்கையை இழந்தார்கள். பிறகு அவர்களின் அரசாங்கம் இழிவு நிலையை அடைந்தது.
- மதவெறி போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. அவர்கள் இங்குள்ள வெவ்வேறு மதத்தை சார்ந்தவர்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்தனர்.
- விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்களுடைய வியாபாரம் நொடிந்துபோனது.

©KTBS NOT TO BE REPUBLISHED

போர்ச்சுகீசியரின் பிரான்சிஸ்கோ-டி-அல்மேடா இந்தியாவின் முதல் வைஸ்ராய் (கவர்னர்) ஆவார். இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் முதன்மையானவர்கள் மற்றும் இந்தியாவைத் துறந்த ஐரோப்பியர்களில் கடைசியானவர்கள் போர்ச்சுக்கீசியர்கள் ஆவர். கடைசிவரை கோவா, டையூ மற்றும் தமன் மட்டுமே போர்ச்சுகீசியர்களின் வசம் இருந்தது. ஆங்கிலேயர்களின் ஆட்சி பொ.ச. 1947இல் முடிவடைந்தாலும் போர்ச்சுகீசியர்கள் நமது நிலத்திலிருந்து வெளியேறவில்லை. கோவாவின் விடுதலைக்காக அங்கிருந்த இந்தியர்கள் அகிம்சைப் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் போராட்டக்காரர்களை கொடுமையாக இம்சைக்கு உள்ளாக்கினார்கள். கடைசியில் பொ.ச 1961இல் இந்தியப் படை போர்ச்சுகீசியர்களை அடித்துத் துரத்தியதால் கோவா விடுதலை அடைந்தது.

டச்சுக்காரர்கள்: (பொ.ச. 1596-1792)

போர்ச்சுகீசியர்களுக்குப் பிறகு இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் நெதெர்லாண்ட் நாட்டு டச்சுக்காரரகள் முக்கியமானவர்கள். பொ.ச. 1602இல் டச் ஈஸ்ட் இந்தியா கம்பனி தொடங்கப்பட்டது. இந்த கம்பனி கிழக்கத்திய நாடுகளுடன் வியாபாரம் செய்யும் தனி உரிமையைப் பெற்றது. இந்த நிலப்பரப்புக்களில் போர் நடத்தும், சமாதான ஒப்பந்தங்களை ஏற்பாடு செய்யும் அதிகாரத்தைப் பெற்றது. புலிகாட் டச்சு க்காரர்களின் தலைநகரமாக இருந்தது.

டச்சுக்காரர்களின் வியாபார மையங்கள் : இந்தியாவின் ஆக்ரா, மசூலிப்பட்டினம், சூரத், காரைக்கால், நாகபட்டினம், கொச்சி போன்ற இடங்கள் வியாபார மையங்களாக இருந்தன.

டச்சுக்காரர்களின் வீழ்ச்சி : டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களுடன் மோதலில் இறங்கினார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களைத் தோற்கடித்தார்கள். இந்தியாவில் ஆங்கிலேயர்களின் போட்டியை எதிர்க்க முடியாத டச்சுக்காரர்கள் தங்கள் வியாபாரத்தை தென்கிழக்கு ஆசியாவின் தீவு நாடுகளின் பக்கம் திருப்பினார்கள்.

தென்கிழக்கு ஆசியாவின் தீவுகள்: இந்தோனேஷியா, மலயா, தாய்லாந்து, பிலிபைன்ஸ், காம்போடியா.

ஆங்கிலேயர்கள் : (பொ.ச. 1600-1947)

ஆங்கிலேயர்கள் அமைதியான வணிகமே தங்கள் கொள்கையாகக் கொண்டிருந்தனர். ஆனால் இந்தியாவின் சீர்கெட்ட அரசியலின் நிலைமையைச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

இங்கிலாந்தின் வணிகர்கள் கிழக்கு நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள விரும்பி பொ.ச. 1600இல் ஈஸ்ட் இந்தியா கம்பனி யை (கிழக்கு இந்தியா குழுமம்) ஆரம்பித்தனர். எலிசபத் ராணியின் அனுமதியைப் பெற்று இந்தியாவுடன் வியாபாரத் தொடர்பை வளர்த்துக்கொண்டார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆரம்பத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பனியின் கப்பல்கள் சூரத் துறைமுகத்தில் தங்கின. சர் தாமஸ் ரோ பொ.ச. 1615இல் முகலாய சக்ரவர்த்தி ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை தந்து சூரத்தில் வியாபாரம் தொடங்க அனுமதி வாங்கினார். பிறகு ஆக்ரா, அகமதாபாத் மற்றும் ப்ரோச் இங்கெல்லாம் வியாபார மையங்களை நிறுவினார். பிறகு மதராஸ், கோல்கத்தா மற்றும் மும்பைகளில் தங்கள் வியாபார கிடங்குகளை நிறுவினார். கோல்கத்தா ஆங்கிலேயரின் முதலாவது தலைநகரமாக இருந்தது.

காலப்போக்கில் ஈஸ்ட் இந்தியக் கம்பனியின் இலாபம் அதிகமான அளவில் அதிகரித்துக்கொண்டே போனது. முகலாய சக்ரவர்த்தி பரூக் சியாவிடமிருந்து வங்காள மாநிலம் (இப்போதைய வங்காளம், பீகார், மற்றும் ஒரிஸா) மற்றும் சூரத்தில் வரி செலுத்தாமல் வியாபாரம் செய்யும் ''தஸ்தக்'' என்னும் உரிமம் பெற்றனர். இவைகளின் உதவியால் ஆங்கிலேயர்கள் உள்நாட்டு வியாபாரிகளை விடவும் பலசாலியானார்கள்.

வரி இல்லாத வியாபாரம் நடத்த ஆங்கிலேயர்களுக்கு அளித்த சிறப்பு உரிமப் பத்திரங்களே (பாஸ்) தஸ்தக் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆங்கிலேயர்கள் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள தங்கள் வசிப்பிடத்தைச் (நிலப்பரப்பைச்) சுற்றி கோட்டைகளைக் கட்டினார்கள். கோட்டையின் பாதுகாப்பிற்காக சிப்பாய்கள், வெடிமருந்துகளை வைத்துக்கொள்ள தொடங்கினார்கள். வெகு விரைவில் ஆங்கிலேயர்களின் படைபலம் பலமாக வளர்ந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் : (பொ.ச. 1664-1954)

வியாபாரத்திற்காக இந்தியா வந்த ஐரோப்பியர்களில் கடைசியானவர்கள் பிரெஞ்சுக்காரர்கள் ஆவர். இவர்கள் பொ.ச. 1664 இல் பிரெஞ்ச் ஈஸ்ட் இந்தியா கம்பனியை தொடங்கினார்கள். இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் தங்களது வியாபாரத்தின் முதல் கிடங்கை பொ.ச. 1668 இல் சூரத்தில்

திறந்தார்கள். பிறகு சில காலங்களிலேயே இந்தியாவின் பல இடங்களில் தங்கள் வியாபார மையங்களை நிறுவினார்கள்.

பிரஞ்சுக்காரர்களின் வியாபார மையங்கள்: பாண்டிச்சேரி, மசூலிப்பட்டினம், கள்ளிக்கோட்டை, மாஹே, காரைக்கால் மற்றும் சந்திராநாகூர் இங்கெல்லாம் தங்கள் வியாபார மையங்களை திறந்தார்கள். பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்களின் தலைநகரமாக இருந்தது.

பிரஞ்சுக்காரர்களின் கவர்னராக வந்த டூப்லே தந்திரத்தால் ஹைதராபாத் மற்றும் கர்நாடகா (தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதி) இராஜ்ஜியங்களில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை அதிகரித்தார். இந்தியாவிற்கு வியாபாரத்திற்கென்று வந்த ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் இடையே அரசியல் மற்றும் வணிக வளர்ச்சிக்காக பல போர்கள் நடந்தன. அவைகள் கர்நாடகப் போர் என்றே அழைக்கப்படுகின்றன.

பிரெஞ்சுக்காரர்களின் வீழ்ச்சிக்குக் காரணம்:

- இந்தியாவில் பிரஞ்சு படைத்தலைவருக்கு பிரான்ஸ் அரசு முழுமையான ஒத்துழைப்பு அளிக்கவில்லை.
- பிரான்சில் அரசியல் குழப்பம் மற்றும் போராட்டங்கள் இருந்தன. இது இந்தியாவில் அவர்களின் வீழ்ச்சிக்கு காரணமானது.
- பிரஞ்சு கப்பற்படை ஆங்கிலேயரின் கப்பற்படையைவிட சிறந்ததாக இருக்கவில்லை.

கால கட்டம் : (பொ.ச)

- ஆங்கிலேய ஈஸ்ட் இந்திய கம்பனி - *1600*
- டச் ஈஸ்ட் இந்தியா கம்பனி - *1602*
- பிரஞ்ச் ஈஸ்ட் இந்தியா கம்பனி - *1664*

©KTBS NOT TO BE REPUBLISHED

இந்தியா 1765 -
ஐரோப்பியர்களின் நிலைகள்
தில்லி
யமுனா
கங்கா
கோரா
அலகாபாத்
பக்சார்
பாட்னா
பிளாசி
(Br)
முர்ஷீராபாத்
சந்த்ரா நகர் (F)
(Br) கல்கத்தா
டியூ (P)
சூரத் (Br)
நர்மதா
தப்தி
தாமன் (P)
மகாநதி
பாலசோர் (Br)
மும்பை (Br)
கோதாவரி
ஹைதராபாத்
நர்தர்ன் சர்க்கார்
கோவா (P)
கிருஷ்ணா
மசூலிபட்டினம்
ஐரோப்பிய நிலைகள்
P = போர்சுகீஸ்
Fr = பிரஞ்ச்
Du : டச்
Br = பிரிட்டீஷ்
புலிகாட்
மதராஸ் (Br)
வாண்டிவாஷ்
காவேரி
பாண்டிசேரி (Fr)
மாஹே (Fr)
திருச்சிராப்பள்ளி
போர்ட் நோவோ (Du)
காரைக்கால் (Fr)
கொச்சி (Du)
நாகபட்டினம் (Du)
தஞ்சாவூர்
ஹிந்துமகாசாகர்

பயிற்சிகள் :

I. கீழ்காணும் கேள்விகளுக்கு ஒரு வரியில் விடையளிக்க:

1. இந்தியாவிற்கு வியாபாரத்திற்காக கடல் வழியாக முதலில் வந்த ஐரோப்பியர் யார்?
2. இந்தியாவிற்கு கடல் வழியைக் கண்டுபிடித்தவர் யார்?
3. டச்சுக்காரர்களின் தலைநகரம் எது ?
4. ஆங்கிலேய ஈஸ்ட் இந்திய கம்பனி எப்போது தொடங்கப்பட்டது?
5. பிரெஞ்ச்சுக்காரர்களின் வியாபார மையங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. ஆங்கிலேயருக்கு தஸ்தக் கொடுத்த முகலாய அரசர் யார்?

II. கீழ்காணும் வினாக்களைப் பற்றி குழுமத்தில் விவாதித்து விடையளிக்க:

7. இந்தியாவில் போர்ச்சுகீசியரின் வீழ்ச்சிக்கான காரணங்களை பட்டியலிடுக.
8. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் யாவை?

III. இந்தக் கீழ்க்காணும் ஏ பட்டியலில் கொடுக்கப்பட்ட அம்சங்களை பி பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்ற அம்சங்களுடன் பொருத்துக:

ஏ	பி
போர்ச்சுகீசியர்கள்	பாண்டிச்சேரி
டச்சுக்காரர்கள்	கொல்கத்தா
பிரெஞ்சுக்காரர்கள்	புலிகாட்
ஆங்கிலேயர்கள்	கோவா

செயல்பாடு :

* இந்தியாவின் வரைபடத்தை வரைந்து ஐரோப்பியர்களின் ஆரம்ப நிலைகளை குறிக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 4

18ஆம் நூற்றாண்டில் இந்தியா (பொ.ச.1707 -1757)

C9P1H5

பாட அறிமுகம்

18 ஆம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் மாறுமைக்கான காலமாகும். இந்தியா பல குறிப்பிடத்தக்க அரசியல் பொருளாதார சமூக மற்றும் கலாச்சார மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தது. அரசியல் ரீதியாக முகலாயர்கள் பலவீனமடைந்ததால், உள்ளூர் அரசியல் குழுக்கள் தங்களை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவும், தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்தவும் தொடங்கினர். மராத்தியர்கள், ஹைதர் அலி, திப்பு சீக்கியர் முதலானோர் தம்மைத் தாமே நிலைநாட்டிக் கொள்வதற்கு முன் வந்தனர். இருப்பினும், ஆங்கிலேயர்கள் பூர்வீக மன்னர்களின் சுயநலத்தை தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்தி அவர்களை தாழ்த்தினார்கள். பொருளநார ரீதியாக, நிரந்தர நில உடைமை, மஹால்வாரி மற்றும் விவசாயச் சட்டங்கள் போன்ற பல தொலைநோக்கு எதிர்மறையான கொள்கைகளை ஆங்கிலேயர்கள் நடைமுறைக்கு கொண்டு வந்து இந்தியாவை ஒடுக்கத் தொடங்கினர். சுருக்கமாக இது பல மோதல்களைக் கண்ட ஒரு காலக்கட்டம் ஆகும்.

திறன்கள் :

1. இந்தியாவில் அரசியல் மாற்றத்தின் தன்மையை அறிதல்.
2. மாணவர்கள் முகலாயர்களின் வீழ்ச்சிக்கும் மராட்டியர்களின் மேலாதிக்கத்திற்குமான காரணங்களைப் பட்டியலிடுதல்.
3. இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு நிறுவப்படுவதற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்த பிளாசி போரின் காரணங்களையும் விளைவுகளையும், கர்நாடகப் போர்களின் பின்னணியையும் புரிந்துக் கொள்ளுதல்.

© KTBS NOT TO BE REPUBLISHED

மாணவர்களே 18 ஆம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களின் காலமாக இருந்தது. ஔரங்கசீப்பிற்குப் பிறகு (பொ.ச.1707) முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. முகலாய வீழ்ச்சிக்கான காரணங்கள் பின்வருமாறு: ஔரங்கசீப்பிற்குப் பிறகு வந்த மன்னர்கள் பலவீனமானவர்களாகவும், ஆடம்பரமான வாழ்க்கையை நடத்தியவர்களாகவும் இருந்தனர். பாரசீக

மன்னர் நாதிர் ஷா முகலாயப் பேரரசின் மீது கடுமையான தாக்குதலை நடத்தினார் மற்றும் அவர்கள் செல்வத்துடன் தனது நாட்டிற்குத் திரும்பினார் (பொ.ச 1739). அவர் கொள்ளையடித்த பொருட்களில் புகழ்பெற்ற மயில் சிம்மாசனம் மற்றும் மிகவும் விலையுயர்ந்த கோஹினூர் வைரம் ஆகியவை அடங்கும். அதே போல, அகமது ஷா அப்தாலியின் தாக்குதலும் பேராசையும் அவரை ஏழ்மையில் ஆழ்த்தியது. இந்த நிகழ்வுகளின் விளைவாக முகலாயப் பேரரசு தான் இழந்த சக்தியை ஒருபோதும் மீட்டெடுக்க முடியவில்லை.

செயல்பாடு : முகலாயர்களுக்கு கோஹினூர் வைரம் எங்கிருந்து கிடைத்தது? நாதிர்ஷாவிடமிருந்து யாருடைய கைக்கு சென்றது? இப்போது எங்கே இருக்கிறது? உங்கள் ஆசிரியரின் உதவியுடன், கோஹினூர் வைரத்தின் அனைத்து கேள்விகளுக்குமான விடைகளை, சேகரிக்கவும்.

மராட்டியர்களின் மேலாதிக்கம்

சிவாஜி மராட்டியப் பேரரசை நிறுவியவர். முகலாயப் பேரரசும், பஹமனி பேரரசும் புகழின் உச்சத்தில் இருந்த போது சுதந்திரமான தனி அரசை நிறுவுவதில் வெற்றி பெற்றார். அவரது நல்லாட்சிக்கு 'அஷ்ட பிரதான்கள்' என்று அழைக்கப்படும் எட்டு அமைச்சர்கள் உதவினர். இவர்களில் பேஷ்வா (பிரதம மந்திரி) மிக முக்கியமானவர்.

வரலாற்றாசிரியர்கள் 18ஆம் நூற்றாண்டினை மராட்டிய மேலாதிகத்தின் சகாப்தம் என்றழைக்கின்றனர். இந்த காலக்கட்டத்தில் பேஷ்வாக்களின் தலைமையின் கீழ் மராத்தியர்கள் இந்தியாவின் சக்திவாய்ந்த அரசியல் மற்றும் இராணுவ சக்தியாக உருவெடுத்தனர்.

மராட்டிய பிரதமர் பேஷ்வா என்று அழைக்கபடுகிறார். மன்னர்கள் பலவீனமாக இருந்ததால் பேஷ்வாக்களே நிர்வாகத்தை மேற்கொண்டனர். சுமார் 100 ஆண்டுகள் (பொ.ச 1713-1818) வரை ஏழு பேஷ்வாக்கள் தக்காணத்தையும் வட இந்தியாவின் சில பகுதிகளையும் ஆண்டனர்.

மூன்று முக்கிய மராட்டிய பேஷ்வாக்கள்.

- **பாலாஜி விஷ்வநாத் (பொ.ச 1713-1720):** இவர் முகலாயப் பேரரசருடன் தில்லி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

இதன் விளைவாக தக்காணத்தின் ஆறு சுபாக்காக்களிடம் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றார்.

- **முதலாம் பாஜிராவ் (பொ.ச 1720-1740) :** பாஜிராவ் ஆட்சிக்கு வரும்போது அவருக்கு வயது 20. அவர் வலுவானவர் மற்றும் இராஜதந்திரம் மிகுந்தவராக இருந்தார். முகலாயப் பேரரசின் அரசியல் அவலநிலையைப் பயன்படுத்தி, இந்தியாவில் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கத் திட்டமிட்டார். அவர் ஆரம்பத்தில் ஹைதராபாத், பின்னர் மால்வா குஜராத் மற்றும் பந்தேல்கண்ட் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார்.

  தனது படையுடன் தென் இந்தியாவை நோக்கி முன் சென்று தில்லியை தாக்கியது பாஜிராவின் மிக முக்கியமான சாதனையாகும். இவர் இரண்டாம் சிவாஜி என்று மக்களால் போற்றப்பட்டார்.

- **பாலாஜிபாஜிராவ்(பொ.ச1740-1761):**இவர் தென்னிந்தியா மட்டுமின்றி வட இந்தியாவிலும் மராட்டிய அரசை விரிவுபடுத்த முயன்றார், மராத்திய இராணுவம் வடமேற்கில் பஞ்சாபை வெற்றிகரமாக கைப்பற்றியது. அவர் கிழக்கில் ஒடிசாவையும் தெற்கில் தமிழகத்தின் சில பகுதிகளை கைப்பற்றினார். இதனால் மராட்டியர்கள் இந்தியாவில் ஒரு முக்கிய அரசியல் சக்தியாக மாறினார்கள்.

பாலாஜி பாஜிராவ்

வட இந்தியாவில் தனது அரசை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டிருந்த மராட்டியர்கள், ஆப்கானிய மன்னர் அகமதுஷா அப்தாலியின் படையை எதிர்க்க வேண்டியிருந்தது. பொ.ச **1761** ஜனவரி **14** அன்று அவர்களுக்கு இடையே நீண்ட போர் நடந்தது. இது மூன்றாவது பானிபட் போர். மராட்டியர்கள் போரில் தோற்றனர். இதனால் மராட்டிய ராணுவ பலம் குறைந்து கொண்டே வந்தது. மராட்டியர்களின் வீழ்ச்சி பிரிட்டிஷ் வணிகர்களுக்கு இந்தியாவில் நமது அரசியல் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்பபை உருவாக்கியது.

@KTBS NOT TO BE REPUBLISHED

கர்நாட்டிக் போர்கள் (பொ.ச 1746-1763)

முகலாயப் பேரரசின் ஒரு மாகாணமாக 'கர்நாட்டிக்'. இருந்தது. கோரமண்டல் கடற்கரை (இன்றைய தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசத்தின் கடலோர பகுதி) மற்றும் அதன் பின்னிலத்தை ஐரோப்பியர்கள் 'கர்நாட்டிக்' (Carnatic) என்று அழத்தனர்.

ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே தென்னிந்தியாவின் வர்த்தகத்தை கட்டுப்படுத்த நடந்த போட்டி விரைவில் போருக்கு வழிவகுத்தது. இந்த பின்னனியில் நடந்த மூன்று போர்களுக்கான முக்கியப் பகுதியாக கர்நாட்டிக் மாறியது. எனவே இந்தப் போர்கள் வரலாற்றில் ''கர்நாட்டிக் போர்கள்'' என்று குறிப்பிடப்படுகின்றன.

போர்களுக்கான காரணங்கள்: ஆற்காடு(தமிழ்நாடு) கர்நாட்டிக்கின் தலைநகரமாக இருந்தது. ஆற்காடு நவாபின் மரணத்திற்குப் பிறகு, ஆற்காட்டின் அரியணையைக் கைப்பற்றுவதில் சந்தாசாகேபிற்கும் முகமது அலிக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. முகமது அலி ஆங்கிலேயர்களின் உதவியையும், சந்தாசாஹேப் பிரஞ்சுகாரர்களின் உதவியையும் நாடினர். ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரர்களும் சண்டையில் தலையிட்டனர். அவர்களின் தொலைநோக்கு அரசியல் நலன்களே இத்தலையீட்டிற்கான காரணமாக இருந்தது.

புத்திசாலியான ராபர்ட் கிலைவ் ஆங்கிலப் படையின் தலைவராக இருந்தார். லட்சியவாதியான ஆளுநர் டூப்லே, பிரெஞ்சு படைத் தலைவர் ஆனார். இறுதியில் மூன்றாம் கர்நாட்டிக் போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். இதன் விளைவாக இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் கடைநிலைக்குத் தள்ளப்பட்டனர்.

முதல் கர்நாட்டிக் போரில் பிரைஞ்ச்சுக்காரர்கள் வெற்றி பெற்றனர். இது 'எக்ஸ் லா சேப்பல், என்ற ஒப்பந்தத்தைக் கையெழித்திடுவதில் முடிந்தது.

இரண்டாம் கர்னாட்டிக் போரின் முடிவில் ஆங்கிலேயர்கள் ஆற்காட்டிலும் பிரஞ்சுக்காரர்கள் ஹைதராபாதிலும் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தினர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பிரஞ்சுக் காரர்களின் தோல்விக்கான காரணங்கள்:

டூப்லே

- பிரஞ்சுக்காரர்கள் வர்த்தகத்தை விடுத்து அரசியலில் அதிக ஆர்வம் காட்டினர். ஆனால் ஆங்கிலேயர்கள் வணிகத்தில் அதிக கவனம் செலுத்தி வணிக நலன்களைப் பாதுகாப்பதற்காக அரசியலில் நுழைந்தனர்.
- பிரெஞ்சு கடற்படையை விட ஆங்கிலேய கடற்படை ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது.
- ஆங்கிலேயே அதிகாரிகள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து நிறுவனத்தின் நலன்களில் கவனம் செலுத்தினர், பிரஞ்சு அதிகாரிகள் ஒத்துழைக்காமல் சண்டை போட்டனர்.
- ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் தனியார் நிறுவனமாயிருந்தது. பிரஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் அரசுக்கு சொந்தமாக இருந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

வங்காளத்தில் ஆங்கிலேய நிர்வாகத்தின் ஆரம்பம்

கருநாடக போர்களின் மூலம் தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்கள் அரசியல் சக்தியாக உருவெடுத்து வங்காளத்தில் தங்கள் ஆட்சியை நிறுவினர். வங்காளம் முகலாயப் பேரரசின் வளமான மாகாணமாக இருந்தது. அதன் முன்னோடியான அலிவர்தி கான், முகலாயப் பேரரசின் வீழ்ச்சியின் போது சுதந்திரமாக இருந்தார். அவருக்கு பிறகு சிராஜ்-உத்-தவுலா வங்காளத்தின் நவாபானார்.

சிராஜ் உத்-தவுலா

சிராஜ் நவாப் இளைஞராக இருந்ததால், ஆங்கிலேயர் அவரைப் பொருட்படுத்தாமல் அவருடைய அனுமதியும் இல்லாமல் கல்கத்தாவில் உள்ள போர்ட் வில்லியம் கோட்டையை பலப்படுத்தினார்கள். அதுமட்டுமல்லாமல் வர்த்தக சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்தினார்கள். தனது கட்டளைகளைப் பின்பற்றாமல் தனது எதிரிகளுடன் தந்திரமாக ஆங்கிலேயேர்கள் சதி செய்வதை அவர் உணர்ந்தார். அதனால் கோபமடைந்து

ஆங்கிலேயர்களின் கிடங்குகளைக் கைப்பற்றினார். இதுவே பிளாசி போருக்கு வழிவகுத்தது.

பிளாசி போர் (பொ.ச 1757) : நவாப் சிரா்ஜ - உத்-தவுலாவின் தாக்குதலின் செய்தியைக் கேட்ட மதராஸ் கம்பெனியின் அதிகாரிகள், ராபர்ட் கிலைவ் தலைமையில் கல்கத்தாவுக்கு ஒரு படையை அனுப்பினர். வங்காளத்தின் சூழ்நிலையை அறிந்த கிலைவ், நவாபுக்கு எதிராக சூழ்ச்சி செய்தார். சிராஜின் படைத் தளபதியான மீர் ஜாபரை நவாப் ஆக்குவதாக ஆசை காட்டி அவருடன் ரகசிய ஒப்பந்தம் செய்தார்.

ராபர்ட் கிலைவ்

மீர் ஜாபர்

@KTBS NOT TO BE REPUBLISHED

நவாபின் தளபதியான மீர் ஜாபர் நவாப் ஆக வேண்டும் என்பதற்காக அங்கிலேயருடன் கூட்டணி வைத்தார். அதன்படி நவாப் ஆன பிறகு 17 கோடி 70 லட்சம் ருபாயை ஆங்கிலேயருக்கு கொடுக்க வேண்டி இருந்தது. இந்த இரகசிய விவகாரத்தில் அமின்சந்த் என்ற வியாபாரி நடுவராக இருந்தார்.

ஆங்கிலேயர்கள் மற்றும் சிராஜ்-உத்-தவுலாவின் படைகளிடையே ப்ளாசியில் பொ.ச 1757 ஆம் ஆண்டில் போர் மூண்டது. போரில் மீர் ஜாபர் ஆங்கிலேயருக்கு உதவினார். இறுதியில் சிராஜ்-உத்-தவுலா தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். மீர் ஜாபர் செய்த துரோகத்தால் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர்.

விளைவுகள்: ஆங்கிலேயர்களின் தயவால், மீர்ஜாபர் வங்காளத்தின் நவாப் ஆனார். ஆனால் அவர் ஆங்கிலேயர்களுடைய கைப்பொம்மையாக இருந்தார். கம்பெனி ஏராளமான பணத்தையும் ‘இருபத்தி நான்கு பாராகானா’ என்று சொல்லப்படும் மாவட்டங்களின் ஜமீன்தாரி அதிகாரத்தையும் பெற்றது. இதுவே முதன்முதலாக கம்பெனியால் கைப்பற்றப்பட்ட

பிரதேசமாகும். பிளாசி போர், பின்னால் நடந்த பக்சார் போருக்கும் காரணமாயிற்று. வணிகர்களாக வந்த ஆங்கிலேயர்கள் திடீரென ஆட்சி செய்யும் தகுதி பெற்றவர்கள் ஆனார்கள். பிளாசியின் வெற்றி இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்கு வழி வகுத்தது.

முக்கிய வருடங்கள்

1711 - 1761 இந்தியாவில் மராட்டியர்களின் ஆட்சிக் காலம்.

1739 - நாதிர்ஷா முகலாய அரசின் மீது படையெடுத்தார்

1757 - பிளாசி போர்

1761 - மூன்றாம் பானிபட் போர்.

பயிற்சிகள்

I. காலியான இடங்களில் பொருத்தமான சொற்களினால் நிரப்புக.

1. இரண்டாம் சிவாஜி என்ற புகழுக்குரிய பேஷ்வா ______
2. கர்நாடிக்கின் தலைநகரம் ______ ஆக இருந்தது.
3. பிளாசி போர் ______ இல் நடந்தது.
4. மூன்றாம் பானிபட் போர் ______ இல் நடந்தது.

II. ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியத்தில் விடையளிக்க:

5. வரலாற்றாசிரியர்கள் எந்த நூற்றாண்டை ''மராட்டியர் மேலாதிக்கத்தின் சகாப்தம்'' என்றழைத்தனர்?
6. மூன்றாவது பானிபட் போர் யாருக்கு இடையே நடந்தது?
7. கர்னாடிக் போரில் கடைசியாக வென்றது யார்?
8. பிளாசி போர் யாருக்கு இடையே நடந்தது.

III. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க:

9. பேஷ்வா முதலாம் பாலாஜியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
10. பிளாசி போருக்கான காரணங்கள் யாவை?

செயல்பாடு

ராபர்ட் கிலைவ் மற்றும் டூபலே இவர்களைப் பற்றி கூடுதல் தகவல்களைச் சேகரிக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 5

பிரிட்டிஷ் மேலாதிக்கத்தின் வளர்ச்சி (பொ.ச. 1758-1856)

F8U8N4

பாட அறிமுகம்.

பொ.ச. 1758-1856 ஆம் காலகட்டத்தில் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக உருவெடுத்த விதம் இந்த பாடத்தின் முக்கிய தலைப்பு ஆகும். இந்த நோக்கத்திற்காக பக்ஸார் போர், திவானி உரிமையின் அடைவு, ஆங்கிலோ-மைசூர், ஆங்கிலோ - சீக்கிய மற்றும் ஆங்கிலோ மராத்தியப் போர்கள் விளக்கப்பட்டுள்ளன. ஒழுங்கு முறை சட்டம் வாரிசு இழுப்பு சட்டம் ஆகியவை ஆங்கிலேயர்களின் தந்திரமான திட்டங்கள் என தெரிய வந்தது. ஆங்கிலேயர்களால் வெறுப்பு அடைந்த இந்தியர்கள் 1857 ல் அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்கள் என்பதற்கான பின்னணியை இந்தப் பாடம் வழங்குகிறது.

திறன்கள் :

1. திவானி உரிமைகளை அடைவதற்கான அரசியல் மற்றும் பொருளாதார அம்சங்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
2. மைசூர், சீக்கியர் மற்றும் மராட்டியப் போர்களின் விளைவுகளைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ளுதல்.
3. வெல்லஸ்லி மற்றும் டல்ஹௌசியின் இரண்டு முக்கியமான கொள்கைகளுக்குப் பின்னால் இருந்த நோக்கத்தை அவர்கள் புரிந்து கொள்ளுதல்.
4. அவர்கள் இந்திய வரைபடத்தில் 1805 மற்றும் 1856 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை அடையாளம் கண்டு ஒப்பிடுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

கிழக்கிந்திய கம்பெனி ராபர்ட் கிளைவை வங்காளத்தின் முதல் ஆளுநராக நியமித்தது (பொ.ச 1758). இந்தியாவில் பிரிட்டிஷ் மேலாதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்த பெருமை அவரைச் சேரும். இரண்டு வருடங்களுக்குப் பிறகு கிளைவ் தனது சொந்த நாட்டிற்கு திரும்பிய போது, இந்தியாவிலிருந்து அபகரித்துக் கொண்டு சென்ற செல்வத்தின் மூலம் பெரியபணக்காரர் ஆனார்.

ஆங்கிலேயர்களின் தவறான நிர்வாகம்.

கிளைவ் வெளியேறிய பிறகு, கம்பெனியின் ஊழியர்கள் முன்பை விட அதிகமாக தனியார் வர்த்தகத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பெரும் இலாபம் ஈட்டினர். அவர்களின் பேராசைக்கு முடிவு இல்லாமல் இருந்தது.

> பிரிட்டிஷ் கவர்னர் உள்பட கம்பெனி ஊழியர்கள் ஊழல் செய்தார்கள். நிர்வாகச் சீர்கேடால் பொது மக்கள் விரக்தியடைந்தனர். ஒரு பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் இக்காலத்தை, 'வெளிப்படையான மற்றும் வெட்கமில்லாக் கொள்ளையின் காலம்' என்று விவரித்தார். எனவே வங்காளத்தின் செழிப்பு மிக வேகமாக குறையத் தொடங்கியது.

நவாப் மீர் ஜாபரிடமிருந்து இனி பணமோ, செல்வமோ கிடைக்காது என்பதை ஆங்கிலேயர்கள் விரைவில் உணர்ந்தனர். எனவே அவர்கள் அவரை அரியணையில் இருந்து இறக்கி அவரது மருமகனான மீர் காசிமை அரியணைக்கு கொண்டு வந்தனர். பதிலுக்கு, மீர் காசிம் ஆங்கிலேயர்களுக்கு மூன்று மாவட்டங்களின் ஜமீன்தாரி உரிமைகளை வழங்கினார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பக்சார் போர் (1764)-காரணங்கள் மற்றும் முடிவுகள்

மீர் காசிம் ஒரு சுதந்திர மனப்பான்மை உடையவர் ஆங்கிலேயர்கள் ''தஸ்தக்கை' தவறாகப் பயன்படுத்துவதை அவர் கவனித்தார். எனவே வங்காளத்தில் அனைத்து வர்த்தகங்களுக்கும் வரியை ரத்து செய்தார். இதனால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள் அவரை நவாப் பதவியில் இருந்து நீக்கினர். அவர்களை பழிவாங்கும் நோக்கத்துடன் மீர் காசிம், ஔத் நவாப் மற்றும் முகலாய அரசருடன் இராணுவக் கூட்டணியை வைத்துக் கொண்டார். பக்சார் என்ற இடத்தில் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் இந்த கூட்டணியை தோற்கடித்தனர். அவர்களின் வெற்றிக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் மேலும் வலிமை பெற்றனர். பலவீனமான முகலாய அரசர் ஆங்கிலேயர்களிடம் தஞ்சம் புகுந்தார்.

திவானி உரிமைகளை அடைதல் (பொ.ச.1765)

நிறுவனத்தின் விவகாரங்களைச் சரிசெய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கிளைவை மீண்டும் இந்தியாவுக்கு ஆளுநராக அனுப்பியது. இங்கு வந்தவுடன் கிளைவ், நிறுவனத்தின் அதிகாரத்தை சட்டபூர்வமாக்கத் தொடங்கினார். மேலும் இரண்டாம் ஷா ஆலம் (1765) உடன் ஒப்பந்தம் செய்தார். ஒப்பந்தத்தின்படி, ஆண்டுதோரும் முகலாய மன்னருக்கு 26 லட்ச ரூபாயை நிறுவனம் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பதிலுக்கு ஆங்கிலேயர்கள் வங்காளம் (அஸ்ஸாம் உட்பட), பீகார் மற்றும் ஒரிசா மாகாணங்களில் 'திவானி' உரிமைகளைப் பெற்றனர், 'திவானி' என்றால் நில வரி வசூலிக்கும் உரிமை என்பதாகும்.



NOT TO BE REPUBLISHED
© KTBS

திவானி உரிமையின் விளைவு

திவானி உரிமையின் மூலம், கிழக்கிந்திய கம்பெனி வங்காளத்தில் அதிகாரப்பூர்வ இறையாண்மையைப் பெற்றது. வரி விதிப்பது மற்றும் வரிவசூலிப்பது போன்ற விஷயங்களிலும் சுதந்திரம் பெற்றது. இதன் விளைவாக, வங்காளம் கடுமையான பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆளானது. இந்நிறுவனம் நில வரியாக கோடிக் கணக்கான ரூபாய்களை வசூல் செய்து கருவூலத்தை நிரப்பியது.

ராபர்ட் கிளைவ் பொ.ச 1767 இல் இங்கிலாந்து திரும்பினார். வங்காளத்தில் மோசமான ஆட்சி முறை நிலவியது. இந்த நேரத்தில் பயங்கரமான பஞ்சம் ஒன்று தாக்கியது. வங்காளத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பட்டினியால் இறந்தனர். இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, கம்பனி சந்தையில் இருந்த அவ்வளவு அரிசியையும் வாங்கி, அதிகபட்ச விலைக்கு விற்று, அபரிதமான லாபத்தை ஈட்டியது. இது பிரிட்டிஷ் பொருளாதார சுரண்டலின் இன்னொரு முகம் ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஒழுங்கு முறை சட்டம் (ரெகுலேட்டிங் ஆக்ட்) (பொ.ச.1773)

கிழக்கிந்திய கம்பெனியில் பணிபுரியும் பிரிட்டிஷ் அதிகாரிகள் கம்பெனியின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், நிறுவனத்தின் செயல்பாடுகளை முறையாக ஒழுங்குபடுத்தவும், கட்டுபாட்டில் வைத்திருக்கவும், பிரிட்டிஷ் அரசு முடிவு செய்தது. இந்த திசையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் ''ஒழுங்குமுறை சட்டத்தை'' நடைமுறைப்படுத்தியது. இந்த சட்டத்தின்படி வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவருக்கு பின் கவர்னர் ஜெனரல் பதவியில், 20 க்கும் மேற்பட்டோர் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த காலக் கட்டத்தில் ஆங்கிலேயர்கள் கல்கத்தாவை தங்கள் அதிகார மையமாக மாற்றி மாகாண அரசாங்கங்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தினர்.

ஒழுங்கு முறைச் சட்டத்தின் குறைபாடுகளைச் சரிசெய்ய, பிரிட்டிஷ் அரசாங்கம் 1784 இல் பிட்ஸ் இந்தியா சட்டத்தை அமலுக்கு கொண்டு வந்தது.

ஆங்கிலோ-மைசூர் போர்கள் (பொ.ச.1767-1799)

மாணவர்களே! ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்திய நான்கு போர்களைப் பற்றி அடுத்து வரும் பாடங்களில் அறிவீர்கள். இந்தப் போர்களின் விளைவாக ஆங்கிலேயர்கள், திப்புவின் ராஜ்ஜியத்தை கைப்பற்றி நான்கு பிரிவுகளாகப் பிரித்தனர். ஆங்கிலேயர்கள் தங்களுக்காக ஒரு பிரிவை வைத்துக கொண்டனர். அவர்கள் ஒரு பிரிவை நிஜாமுக்கும், மற்றொரு பிரிவை மராத்தியருக்கும், மீதியுள்ள பிரிவை மைசூர் உடையார் குடும்பத்திற்கும் வழங்கினர். இதன் காரணமாக தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்களின் பலம் படிப்படியாக மேம்பட்டது.

ஆங்கிலோ- மராத்தா போர்கள் (பொ.ச.1775-1818)

மூன்றாம் பானிபட் போரில் தோற்கடிக்கப்பட்ட மராத்தியர்கள் விரைவில் மீண்டு வந்தனர். இருப்பினும் குறுகிய காலத்தில் உள்நாட்டு கலகங்கள் தொடங்கின - இதனால் இலாபமடைய ஆங்கிலேயர்கள் பல தந்திரமான வழிகளில் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். அது மட்டுமல்லாமல் அவர்கள் மராத்தியர்களுடன் மூன்று போர்களை நடத்தினர். இப்போர்கள் ஆங்கிலோ-மராத்தா போர்கள் என்று அழைக்கப்படுகின்றன. இறுதியில் பேஷ்வா ஆங்கிலேயர்களிடம் சரணடைந்தனர். போர்களின் விளைவாக மராட்டியர்களுக்குச் சொந்தமான அனைத்து பகுதிகளும் ஆங்கிலேயர்களின் வசம் வந்தன. ஆங்கிலேயர்கள் பேஷ்வா பதவியையும் நீக்கினர்.

NOT TO BE REPUBLISHED @KTBS



ஆங்கிலேய ஆட்சியின் கீழுள்ள பிரதேசங்ள், பொ.ச.1856

ஆங்கிலோ- சீக்கியப் போர்கள்

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீக்கியர்களிடையே பல பிரிவுகள் இருந்தன, இப்பிரிவுகள் ''மிசல்'' (Misl) என்று

அழைக்கப்பட்டன. ரஞ்சித் சிங் என்ற சாகச இளைஞர் மிசல் (Misl) ஒன்றின் தலைவராக இருந்தார். 18 வயதில் அவர் லாகூர் (பஞ்சாப்) மன்னரானார். அனைத்து சீக்கியர்களையும் ஒருங்கிணைத்து வலுவான அரசியல் சக்தியாக மாற்றிய பெருமை அவரைச் சேரும். அவர் பஞ்சாபை நான்கு தசாப்தங்களுக்கு மேல் ஆட்சி செய்தார். இவர் நவீன இந்தியாவின் மறக்க முடியாத மன்னர்களில் ஒருவராவார்.

ரஞ்சித்சிங்

ரஞ்சித்சிங் (பொ.ச.1839) இறந்த பிறகு, மாநிலத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இப்படி ஒரு காலத்திற்காகத் தான் ஆங்கிலேயர்கள் காத்திருந்தனர். சீக்கியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே நான்கு போர்கள் நடந்தன. இறுதியில் சீக்கியர்கள் தோற்றுப் போயினர். பஞ்சாப் பொ.ச.1849 இல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்வந்தது.

ஆப்கான் மன்னர் ரஞ்சித் சிங்கிடம் இருந்து அரசியல் ஆதரவைப் பெற்று, ரஞ்சித் சிங்கிற்கு கோஹினூர் வைரத்தை பரிசாக அளித்தார்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

தந்திரமான பிரிட்டிஷ் கொள்கைகள்

துணைக் கூட்டணிக் கோட்பாடு


லார்ட் வெல்லஸ்லி

லார்ட் வெல்லஸ்லி (பொ.ச.1799-1805) இந்தியாவில் ஆங்கிலேயர்களின் உச்ச கட்ட அதிகாரத்தை நிறுவ ஒரு திட்டத்தை வகுத்தார். அண்டை அரசர்களின் தாக்குதல்களை தவிர்க்க, பிரிட்டிஷ் இராணுவத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறு மன்னர்களை ஊக்குவித்தார். இந்நிலையில் சில மன்னர்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த மன்னர்கள் பிரிட்டிஷ் இராணுவத்தை தங்கள் ராஜ்ஜியங்களில் வைத்துக்கொண்டு, அவர்ளுக்கான செலவுகளை பணமாக செலுத்த வேண்டியிருந்தது. தவறினால் அவர்கள் நிலத்தின் ஒரு

பகுதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது. ஆங்கிலேயர்கள் இதை ''துணை கூட்டணியின் கோட்பாடு'' என்று அழைந்தனர்.

துணை கூட்டணிக் கோட்பாட்டின் விளைவுகள்.

- இராணுவ செலவுகளின் பெரும் சுமை ராஜ்ஜியங்களின் பொருளாதார நிலைமையை பலவீனமாக்கியது.
- ஆங்கிலேயர்கள் அதிகப்படியான நிலப்பரப்பை தங்கள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இந்த முறைக்கு கட்டுப்பட்ட மன்னர்கள் மறைமுகமாக ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தனர்.
- இந்த முறைக்கு கட்டுப்பட்ட அரசுகள் தங்கள் இறையாண்மையையே இழந்தன.

வாரிசு இழப்புச் சட்டம்

''வாரிசு இழப்புச்சட்டம்'' லார்ட் டெல்ஹௌசி (பொ.ச. *1848 -1856*) என்ற கவர்னர் ஜெனரல் நடைமுறைக்குக் கொண்டுவந்த ஒரு வினோத கொள்கையாகும். எந்த இந்திய அரசருக்கு குழந்தை இல்லையோ அவர்கள் தத்தெடுத்த பிள்ளைகளுக்கு அரியணை ஏறும் உரிமை இல்லை என்று அவர் கூறினார். இதனால் வாரிசு இல்லாமல் காலமான அரசர்களின் ராஜ்ஜியங்கள் ஆங்கிலேயரின் வசமாயின. இந்த கொள்கை இந்தியாவில் பழங்காலத்தில் இருந்தே நடைமுறையில் இருந்த தத்தெடுப்பு வழக்கத்திற்கு எதிரானது. இந்த தந்திரமான சட்டத்தின் விளைவாக, ஔத், சதாரா, நாக்பூர் மற்றும் ஜான்சி போன்ற பதினொரு மாநிலங்கள் நேரடியாக ஆங்கிலேயர்களின் வசமாயின. பொ.ச. 1856 இல் டல்ஹௌசி இங்கிலாந்துக்குத் திரும்பிய போது இந்தியாவின் மூன்றில் இரண்டு பங்கு ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

இந்தியாவில் ஆங்கிலேயரின் வெற்றியானது, அவர்களுடைய அரசியல் புத்திசாலித்தனம் மற்றும் இராணுவ வலிமையின் வெற்றியாக இருந்தது. உள்ளூர் அரசர்களிடையே ஏற்பட்ட சண்டையும், ஒற்றுமையின்மையும் இதற்கு சாதகமாக அமைந்தது. இந்திய மக்களின் நலன் ஆங்கிலேயர்களின் மனதில் இருந்ததில்லை. பெருமளவு செல்வத்தை ஈட்டுவது, அதிகாரம் செலுத்துவது மட்டுமே அவர்களது குறிக்கோளாக இருந்தது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இதனால் விரக்தியடைந்த மக்கள் 1857 இல் கிளர்ச்சி செய்தனர். சில எழுத்தாளர்கள் இதை ''இந்திய சுதந்திரத்தின் முதல் போர்'' என்று அழைத்துள்ளனர்.

முக்கிய வருடங்கள் :

1764	-	பக்சார் போர்
1765	-	திவானி உரிமைகளின் அடைவு
1799 - 1805	-	வெல்லஸ்லியின் நிர்வாகம் - துணை கூட்டணிக் கோட்பாடு
1848	-	டல்ஹௌசியின் நிர்வாகம் - வாரிசு இழப்புச் சட்டம்.

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. துணை கூட்டணிக் கோட்பாட்டை நடைமுறைப் படுத்தியவர்________ .
2. இராபர்ட் கிளைவ் ________ உடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டார்.
3. ரெகுலேட்டிங் சட்டம் அமலுக்கு வந்த வருடம் ________.
4. வாரிசு இழப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியவர் ________.

@KTBS NOT TO BE REPUBLISHED

II. பின் வரும் வினாக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்க.

5. பக்சார் போர் யாருக்கு இடையே நடந்தது?
6. திவானி உரிமை என்றால் என்ன ?
7. ரஞ்சித் சிங் யார் ?

III. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க :

8. ஆங்கிலேயர்களுக்கு திவானி உரிமை எப்படி கிடைத்தது? அதன் விளைவுகள் யாவை?
9. துணை கூட்டணிக் கோட்பாட்டின் விளைவுகள் யாவை?
10. வாரிசு இழப்பு சட்டம் நியாயமற்றது. ஏன் ?

பாடம் 6

ஆங்கிலேய ஆட்சியின் விளைவுகள்

I6F5J7

பாட அறிமுகம்:

பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி பொ.ச. 1600 லிருந்து பொ.ச. 1757 வரை வியாபாரக் கம்பெனியாக மட்டுமே இருந்தது. வியாபார நோக்கத்துடன் வந்த ஆங்கிலேயர்கள் படிப்படியாக அரசியலில் தங்களது ஈடுபாட்டை வளர்த்துக் கொண்டனர். ஆரம்பத்தில் இந்தியாவின் பல வல்லரசுகளிடம் விண்ணப்பித்து தங்கள் வியாபாரத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். படிப்படியாக வேண்டுகோள்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதிலாக இராணுவ பலத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதன் விளைவாக அவர்கள் அரசியல் ரீதியாக வலிமை பெற்றனர். போரினால் வசப்படுத்திக்கொண்ட இந்தியாவை இயல்பாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பல்வேறு தொலை நோக்குத் திட்டங்களை வகுத்தனர். தமது அரசியல் கனவுகளை நினைவாக்க, நிர்வாக சீர்த்திருத்தங்களைக் கருவியாகப் பயன்படுத்தினர். அரசியல், பொருளாதாரம் மற்றும் சமுதாயாத் துறைகளில் பல சட்டங்களைக் கொண்டுவந்தார்கள். தமது பன்முக நன்மைகள் மட்டுமே அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது. அமலுக்குக் கொண்டு வந்த சட்டங்களை சீர்த்திருத்தம் என்றழைத்தார்கள். ஆரம்பத்தில் இந்தியர்களும் அப்படியே நம்பத் தொடங்கினார்கள். அவர்கள் கொண்டுவந்த சீர்த்திருத்தங்களால் இந்திய சமுதாயத்திற்கு ஏதாவது நற்பயன் ஏற்பட்டிருந்தால் அது தற்செயலாக நடந்தது என்று நாம் எண்ணலாம் - இப் பாடத்தில், சீர்த்திருத்தத்திற்குத் தொடர்புடைய நான்கு துறைகளில் பகுப்பாய்வு கொடுக்கப்பட்டுள்ளது. வருவாய் ஆங்கிலக்கல்வி, பொருளாதார தாக்கம் சட்டமன்ற வளர்ச்சி இந்த நான்கு துறைகளாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

திறன்கள்:

1. வரி அமைப்பு முறையில் நடைமுறைப்படுத்திய விதிகளான நிரந்தர நில உரிமை வழக்கம், மகல்வாரி வழக்கம் மற்றும் வேளாண்மை வழக்கம் இவைகளில் நன்மை தீமைகளைப் பற்றி அறிந்துக்கொள்ளுதல்.
2. இந்தியாவிற்கு வந்த ஆங்கிலக் கல்வி முறையைக் குறித்து விவரம் அறிதல்.
3. பொருளாதார தாக்கத்தைப் பட்டிய லிடுதல்.
4. சட்டமன்ற வளர்ச்சிகளை அறிந்துக் கொள்ளுதல்.

நிலவரிச் சட்டம்

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒரு குறிப்பிட்ட நிதித்தொகையை (வருவாய்) அரசு கருவூலத்திற்கு வருமாறு செய்வதற்கு, ஆங்கிலேயர் நில வரிச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தனர். அதுமட்டுமல்லாமல், இந்தியாவில் நடந்த போர்களால் ஏற்பட்ட செலவினங்களைச் சமாளிக்கவும், பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிகமான ஊதியம் கொடுக்கவும், இன்ன பிற நோக்கங்களை நிறைவேற்றவும் ஆங்கிலேயருக்கு அதிக வருவாய் தேவைப்பட்டது. இதனால் விவசாயிகளிடம் நில வரியாக பெருந்தொகையை வசூலிக்க முற்பட்டனர்.

கவர்னர் ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் தனது பதவிக் காலத்தில் வருவாயை ஈட்ட ஏலமிடும் முறையை அறிமுகப்படுத்தினார். ஏலம் நடைபெறும் போது நிலக்கிழார்கள் (landlords) தங்களுக்குள் நிலவிய போட்டியினால் அதிக வரி செலுத்த இசைந்தாலும், பின்னர் அவ்வரியை செலுத்துவதில் அவர்கள் தவறினார்கள். இதனால் வரி வசூலிப்பதில் பல முறைகேடுகள் நடந்தன. வருவாய் ஏற்ற இறக்கமாக இருந்தது. இந்த முரண்பாட்டைப் போக்க ஆங்கிலேயர்கள் மூன்று வருவாய் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர்.

(i) நிரந்தர ஜமீன்தாரி முறை (பொ.ச 1793)

கவர்னர் ஜெனரல் கார்ன்வாலிஸ் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸாவில் நிலவரியினை நிரந்தரமாகவும் முறையாகவும் வசூலிக்கத் தீர்மானித்தார். நிலவரி வசூலிக்க, ஜமீன்தாரர்களுடன்

அவர் செய்துக்கொண்ட ஒப்புந்தத்தினை 'நிரந்தர ஜமீன்தாரி முறை' என்பர். நிரந்தர ஜமீன்தாரி முறையில் ஜமீன்தாரர்கள் பிரிட்டிஷ் அரசின் முகவராக செயல்பட்டனர். கம்பெனியின் குத்தகைத் தொகை நிலையானதாக இருந்தது. இதனால் அரசுக்கு குறிப்பிட்ட அளவில் வருவாய் கிடைத்தது. பிரபல நிலக்கிழார்கள் பல்வேறு கடினமான சூழ்நிலைகளில் அரசுக்கு ஆதரவளித்தனர். இத்தகைய பிரபலர்களிடமிருந்து தங்களுக்கு ஆதரவு கிடைக்க ஆங்கிலேயர் பல்வேறு புதிய பிரிவுகளை உருவாக்கினர்.

விவசாயிகள் மீது ஏற்பட்ட விளைவுகள் :

அதிகமான வரி வசூலிப்பதன் மூலம் ஜமீன்தாரர்கள் விவசாயிகளின் மீது ஆதிக்கம் செலுத்தினர். நிலக்கிழார்கள் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதில் ஆர்வமற்றவர்களாக இருந்தார்கள். பயிர் நாசமானாலும் விவசாயிகள் வரி செலுத்த வேண்டியிருந்தது. மொத்தத்தில் நிரந்தர ஜமீன்தாரி முறையினால் பயிர்த்தொழில் நலிவடைந்தது. தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான வணிகப் பயிர்களை விளைவிக்க விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி, அவர்களை மேலும் ஏழ்மைக்குள் தள்ளினர். இதனால் கூலி முறை தீவிரமாக வளர்ந்தது.

(ii) ரைத்வாரி முறை (பொ.ச 1820)

முகவர்களின் உதவியின்றி விவசாயிகள் நேரடியாக அரசுக்கு வரியினை செலுத்துவதே ரைத்வாரி முறையாகும்.

அரசாங்கம் மற்றும் விவசாயிகளுக்கு இடையே நேரடி உறவுவை ஏற்படுத்துவதே ரைத்வாரி முறையின் முக்கியக் கொள்கையாகும். இம்முறையினை மேற்கிந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். ஆயினும் இந்த முறையானது நிரந்தர ஜமீன்தாரி முறைக்கு மாறுபட்டதாக விளங்கவில்லை.

இம்முறையில், நிலத்தின் அளவு, செழிப்பு மற்றும் சாகுபடி வசதிகளின் அடிப்படையில் வரித் தொகை

© KTBS NOT TO BE REPUBLISHED

நிர்ணயிக்கப்பட்டது. உற்பத்தியில் அரைபாகம் வரியாக செலுத்த வேண்டி இருந்தது. வரித்தொகை ஒவ்வொரு காலத்திலும் தீர்மானிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட நிலவரி மிக அதிகமாக இருந்தது. வறட்சி, அதிக மழைப்பொழிவு, வெள்ளம் காரணமாக விளைசசல் முழுமையாக அழிந்து போனாலும் விவசாயிகள் வரியினைத் தவறாமல் செலுத்த வேண்டியிருந்தது. இவ்வரி முறையை மதராஸ் பகுதி முழுவதும் சர். தாமஸ் மன்ரோ அவர்கள் பொ.ச. 1820 இல் நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

(iii) மகல்வாரி முறை (பொ.ச. 1833) :

'மகல்' என்றால் கிராமம் அல்லது பண்ணை (எஸ்டேட்) என்று பொருள். மகலுக்கு நிலவரி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் ஜமீன்தாரர்கள், அனைத்து நிலவரிகளுக்கும் பொறுப்பு ஏற்க வேண்டியிருந்தது. இச்சட்டம் உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் பஞ்சாபில் 19 ஆம் நூற்றாண்டில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

நிலவரி முறையினால் உண்டான திரளான விளைவுகள் :

- நிலத்தை விற்பனைப் பொருளாக ஆங்கிலேயர் மாற்றினர்.
- நிலத்தை ஏலமிடும் மற்றும் விற்கும் நிகழ்வுகள் அதிகமாயின.
- ரொக்கமாக நிலவரி செலுத்தப்பட வேண்டியதால் பணத் தேவை அதிகமானது.
- வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ள ஜமீன்தாரர்கள் உணவு தானியங்களுக்கு பதிலாக பருத்தி, சணல், நிலக்கடலை, புகையிலை, கரும்பு போன்ற வணிகப் பயிர்களை விளைவிக்க விவசாயிகளைக் கட்டாயப் படுத்தினர். வணிகப் பயிர்கள் ஏற்றுமதிக்கு உகந்தவையாக இருந்ததால், பிரிட்டிஷருக்கு மிகுந்த இலாபம் கிடைத்தது. இதனால் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்பட்டது.
- ஜமீன்தாரி முறையிலேயே பல புதிய விவசாய இனப் பிரிவுகள் தோன்றின.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆங்கிலக் கல்விமுறை

கல்வி மனிதர்களை சுதந்திரமடையச் செய்யும் கருவியாகும். கல்வியால் கிடைக்கும் அறிவு, வாழ்க்கையை அழகாக உருவாக்கிக் கொள்ள உதவுகிறது. ஆங்கிலேயர்கள் ஆங்கில மொழியை உலகமயமாக்கியதால் இந்தியர்கள் அதன் இலாபத்தைப் பெற்றுக்கொண்டனர். அனைத்து வகையினருக்கும் கல்வி கிடைத்தது.

பொ.ச.1813 இல், சார்ட்டர் சட்டத்தின் கீழ் இந்தியர்களின் கல்விக்காக ஒரு இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டது. ஆனால் அத்தொகையிலிருந்து அரசாங்கம் 1823 வரை ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை. இந்திய சிந்தனையாளர்கள் மற்றும் வெளிநாட்டு கிறித்துவ மதப் பரப்பாளர்கள் நவீன முறைக் கல்வியளிக்கப் போராடினார்கள். ஈஸ்ட் இன்டியா கம்பெனியின் திட்டம் வேறொன்றாக இருந்தது. தங்கள் ஆட்சியில் அரசாங்கத்தின் கீழ்தட்டு வேலைகளை செய்ய குறைந்த ஊதியத்திற்கு ஆங்கிலம் தெரிந்த, இந்தியப் பணியாளர்கள் தேவைப்பட்டனர். ‘தங்களுக்கு விசுவாசமாக இருக்கக்கூடிய படித்த இந்தியர்களை உருவாக்குவது அவர்களின் நோக்கமாக இருந்தது’. புதிய கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்த பெருமை லார்ட் மெக்கலே மற்றும் சார்ல்ஸ் வுட் அவர்களை சாரும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

லார்ட் மெக்கலே

சார்ல்ஸ் வுட்

கல்வி முறையைப் பற்றிய கருத்து முரண்பாடு :

சில ஆங்கில அறிஞர்கள், இந்தியாவிற்குத் தொடர்பான தகவல்களை இந்திய மொழிகளின் வழியாக கற்பிக்க வேண்டும்

என்று வாதாடினார்கள் இன்னும் சிலர் மேற்கத்திய விஞ்ஞானம் மற்றும் இலக்கியத்தை ஆங்கில மொழியில் கற்பிக்க வேண்டும் என்று வாதாடினார்கள். முடிவில் 1835 இல் கவர்னர் ஜென்ரல் வில்லியம் பென்டிங்க் மேற்கத்திய விஞ்ஞானம் மற்றும் ஆங்கில வழிக் கல்வி முறைக்கு ஆதரவாக கல்வித் திட்டத்தை அறிவித்தார்.

சில ஐரோப்பிய அறிஞர்கள் பழமையான இந்திய கலாச்சார செழிப்பை மேற்கத்திய உலகிற்கு அறிமுகம் செய்தார்கள். பொ.ச.1784 இல் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த சர். வில்லியம் ஜோன்ஸ் கல்கத்தாவில் 'ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால்' என்ற அமைப்பை நிறுவினார். சமஸ்கிருத மொழியின் பெருமைமைப் பரப்பினார். சர். சார்ல்ஸ் வில்கின்ஸ் பொ.ச 1785 இல் பகவத் கீதையை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார். மாக்ஸ் முல்லர் ரிக்வேதம் மற்றும் இன்ன பிற நூல்களையும் மொழி பெயர்த்தார்.

பென்டிங்கின் அறிவிப்பிற்கு அவருடைய செயற்குழுவின் உறுப்பினரான மெக்கலேயின் குறிப்பு ஆதாரமாக இருந்தது. மெக்கலே கடுமையான ஆங்கிலவாதியாக இருத்தார். இந்திய அறிவு கீழ்த்தரமானது என்பது அவருடைய வாதமாக இருந்தது. சமஸ்கிருத இலக்கணத்தை அவர் கடுமையாக கேலி செய்தார். இந்தியர்களைத் தமது கலாச்சார வேரிலிருந்து அகற்றுவதே அவருடைய நோக்கமாக இருந்தது. "ஒரு நல்ல ஐரோப்பிய நூலகத்தின் ஒரு அலமாரியின் ஒரு வரிசைப் புத்தகங்களுக்கு கிழக்கின் முழு அறிவும் சமமல்ல" என்ற அவருடைய கூற்று அவருக்குள் இருந்த பாரபட்சம் வெளிப்படுகிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

பொ.ச.1854 இல் ஆங்கிலேயர்கள் புதிய கல்வித் திட்டத்தை அமைத்தார்கள். இது சார்ல்ஸ் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டதாக இருந்தது. குறுகிய காலத்திலேயே கல்கத்தா, மும்பை மற்றும் மதராசில் பல்கலைக் கழகங்கள் (பொ.ச.1857) நிறுவப்பட்டன. ஆரம்பக் கல்வி, உயர் கல்வி, கல்லூரி, பல்கலைக் கழகம் இப்படிப் படிப்படியாக கல்வி முறை நடைமுறைக்கு வந்தது. கல்வித் துறையின் மேற்பார்வைக்கு ஏற்ப மாநிலங்களில் கல்வி அலுவலகங்கள் நிறுவப்பட்டன. பொ.ச.1844 இல் ஆங்கில மொழி அதிகாரப்பூர்வமாக ஆட்சி மொழியானது.

பம்பாய் (பாம்பே) பல்கலைக்கழகம்

மதராஸ் பல்கலைக்கழகம்

மேற்கத்திய கல்வி முறையின் விளைவுகள் :

மரபுமுறையாகப் பெற்ற கல்வி முறை படிப்படியாக வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. புதிய கல்வி முறையினால் வெவ்வேறு இந்திய மொழியினர் ஒருவரோடு ஒருவர் ஆங்கில மொழியில் உரையாட முடிந்தது. தேசிய மனப்பான்மை மக்களில் வளர உதவி செய்தது. ஐரோப்பாவின் அறிவு சிந்தனைகள் படிப்படியாக இந்திய சமுதாயத்திற்குள் நுழைந்து தொலை நோக்கு விளைவுகளை உண்டாக்கியது. இந்திய இலக்கியத்தின் மீது கம்பீரமான விளைவுகளை உண்டாக்கி புதிய இலக்கிய வளர்ச்சிக்கு இக்கல்விமுறை காரணமானது. இதனால் பல வகுப்பினர் புதிய சமுதாய விழிப்புணர்வைப் பெற்றனர். இக் கல்விக் கண்ணோட்டம் உருவாக்கிய அறிவு, இந்தியாவின் சமுதாய மற்றும் அரசியல் நிலைமைகளை அறிவியல் ரீதியாக அடையாளம் காண்பதற்கு ஒரு தடையாகவும் உள்ளது என்ற விவாதங்களை வரலாற்றாசிரியர்கள் வளர்த்துள்ளனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பொருளாதார விளைவு :

பொ.ச. 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டில் உண்டான இங்கிலாந்தின் தொழில்துறை புரட்சி, இந்தியாவின் தொழில் மற்றும் வணிகத்தின் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியது. பொ.ச.1600 இலிந்து 1757 வரை கம்பெனி ஒரு வணிகக் கம்பெனியாக மட்டுமே இருந்தது. பிளாசி போருக்குப் பிறகு அது இந்தியாவின் தொழில் மற்றும் உற்பத்தியின் மீது ஏகபோகத்தை நிலைநாட்ட வங்காளத்தில்

தனது அரசியல் அதிகாரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டது. அதே சமயம் கச்சா பருத்தி விற்பனையின் மீதும் அது தனது ஏகபோகத்துவத்தை நிலைநாட்டியது. இதன் விளைவாக நெசவாளர்கள் கச்சாப் பொருட்களை அதிக விலைக்கு வாங்கவேண்டியதாயிற்று. மொத்தத்தில் ஆங்கிலேய வணிக சட்டத்தின் நோக்கம், ஆங்கிலேய தொழில் துறைத் தேவையை நிறைவேற்றவேத் தவிர வேறெதுவும் இல்லை. பிரிட்டனின் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி மற்றும் பிரிட்டனுக்குத் தேவையான கச்சாப் பொருட்களின் ஏற்றுமதி மட்டுமே அதன் முக்கிய குறிக்கோளாக இருந்தது. தடையில்லாத வணிக சட்டத்தை நடைமுறைப்படுத்கியது இந்தியாவின் குடிசைத் தொழிற்சாலைகளின் வீழ்ச்க்கு வழி வகுத்தது.

தாதாபாய் நௌரோஜி

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்தியா ஒரு ஏழை நாடாக மாறியதன் முக்கிய காரணம் நாட்டின் செல்வம் இங்கிலாந்திற்கு வடிந்தோடியதே ஆகும். தாதாபாய் நௌரோஜி அவர்கள் கூறியது போல 'செல்வக் கசிவுதல்' (Drain of wealth) இதன் முக்கிய காரணமாக இருந்தது. இந்தியாவில் இருந்த ஆங்கிலேய குடிமக்கள் வெவ்வேறு துறைகளில் முதலீடு செய்ததால் கிடைத்த இலாபமும் செல்வக் கசிவிற்கான மற்றொரு முக்கிய ஆதாரமாக இருந்தது.

செல்வம் கசிந்ததன் விளைவாக இந்தியா ஒரு ஏழை நாடானது. அதுமட்டுமல்லாமல் நாட்டிற்கு முதலீட்டின் குறைபாடு ஏற்பட்டது. இதனால் இங்கிருந்த தொழில்துறை வளர்ச்சிக்குக் குன்று ஏற்பட்டது. 'பொருளாதாரத்தின் தந்தை' ஆடம் ஸ்மித் இந்தியாவில் ஆட்சி நடத்திய ஆங்கிலேயரை 'அச்சுறுத்திப் பறிப்பவர்கள்' என்று சித்தரித்தார்.

சட்டமன்ற வளர்ச்சி :

ஒழுங்குபடுத்தும் சட்டம் (பொ.ச. 1773)

இந்தியாவின் சட்டமன்ற சீர்த்திருத்தம் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலிருந்தே தொடங்கியது என்று கூறலாம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

இந்நாட்டின் சட்டமன்ற வரலாற்றில் ஒழுங்குபடுத்தும் சட்டம் ஒரு முக்கிய காலகட்டமாகும். இந்தியாவில் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங் இந்த சட்டத்தை **1773** இல் நடைமுறைக்கு கொண்டுவந்தார். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு இந்த சட்டமே அடிதளமாக இருந்தது. இது ஈஸ்ட் இந்திய கம்பெனிக்கு அரசியலமைப்பைப் பெற்றுத் தந்தது.

பிட்ஸ் இன்டியா சட்டம் (பொ.ச. 1784)

இந்திய ஆட்சி முறை இங்கிலாந்து அரசுக்கு திருப்திகரமாக இல்லை. அதற்கு இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனத் தீர்மானித்தது. இதற்காக பிரதமர் வில்லியம் பிட் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். இச்சட்டம் ஈஸ்ட் இன்டியா கம்பெனியை பிரிட்டிஷ் அரசின் ஆட்சிக்கு உட்படுத்தி, அதை ஒரு பிரிவு எனக் கருதியது. பின்னர் ஆங்கிலேயர்கள் பல சட்டங்களை இயற்றினர்.

மார்லே - மின்டோ சீர்த்திருத்தங்கள் (பொ.ச. 1909)

லார்ட் மின்டோ இந்தியாவில் வைஸ்ராய் ஆக இருந்தார். அச்சமயத்தில் லார்ட் மார்லே செக்ரெட்டரி ஆஃப் ஸ்டேட் ஆக இருந்தார். லார்ட் கர்ஜனின் மோசமான ஆட்சி, இந்திய புரட்சியாளர்கள் நடத்திய வன்மையான இயக்கங்கள் முதலிய காரணங்களினால் மார்லே-மின்டோ சீர்த்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. இச்சட்டம் அரசாங்கத்திட்டங்களில் தகுதியுள்ள இந்தியரை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பளித்தது. மத்திய சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க முடிவு செய்தது. மாகாண சட்டப் பேரவை விரிவாக்கப்பட்டது.

மார்லே மின்டோ சீர்த்திருத்தங்கள் இந்தியாவின் மாநில நிகழ்வுகளில் எத்தகைய புரட்சிகரமான மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. மக்கள் பிரதிநிதிகளுக்கு எந்த பொறுப்பையும் கொடுக்கவில்லை.

மான்டெகோ - செமஸ்ஃபோர்ட் சீர்த்திருத்தங்கள் (பொ.ச. 1919)

மார்லே மின்டோ சீர்த்திருத்தங்கள் இந்தியர்களுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. **1917** இல் செக்ரெட்டரி ஆஃப் ஸ்டேட் ஆக

©KTBS NOT TO BE RE-PUBLISHED

இருந்த மான்டெகோ அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார். இந்தியர்களுக்கு நிர்வாகத்தில் அதிகப் பங்கு கொடுத்து சுயாட்சி நிறுவனங்கள் வளரச்செய்வதே ஆங்கில அரசின் கொள்கையாகும். என்பதை இவ்வறிக்கையில் தெளிவுபடுத்தினார். அன்று இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லார்ட் மின்டோ இந்தியாவில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். செக்ரெட்டரி ஆஃப் ஸ்டேட்டின் இந்திய கௌன்சிலில் உறுப்பினர் எண்ணிக்கை அன்று அதிகரிக்கப்பட்டது. இவருடைய பதவிக்காலம் 5 வருடங்களென்று முடிவு செய்யப்பட்டது. இந்திய உயர் ஆணையர் ஒருவர் லண்டனில் நியமனம் செய்யப்பட்டார்.

1935ன் சட்டம்.

மார்லே மின்டோ சீர்த்திருத்தம் இந்தியர்களுக்கு திருப்திகரமாக இல்லை. மக்களைத் திருப்தி படுத்த 1935 இன் இந்திய அரசு சட்டம் மகத்துவமான மாற்றங்களைக் கொண்டு வந்தது. மாகாணங்கள் மற்றும் மாநில ஒன்றியங்களால் இந்திய ஒன்றியம் உருவாகியது. மத்திய அரசியலில் இரட்டை ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண அரசுகளில் பொறுப்பான அரசுகள் நடைமுறைக்கு வந்தன. இச்சட்டம் இந்தியாவின் நிகழ்வுப்பூர்வ வரலாற்றின் மைல் கல்லாக அமைந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்க.

1. நிரந்தர ஜமீன்தாரி முறையை நடைமுறைப்படுத்தியவர் யார்?
2. ரைத்வாரி முறை என்றால் என்ன?
3. 1813 இன் சார்ட்டர் சட்டத்தில் இந்திய கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை என்ன?
4. இந்தியாவில் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை யார், எப்பொழுது செயல்படுத்தினார்?
5. 1857 இல் நிறுவப்பட்ட இந்திய பல்கலைக்கழகங்கள் யாவை?

II. கீழ்காணும் வினாக்களுக்கு குழுவில் கலந்துரையாடி விடையளிக்க.

6. நிரந்தர ஜமீன்தாரி முறை விவசாயிகளின் மீது ஏற்படுத்திய விளைவுகள் யாவை?
7. மேற்கத்திய கல்வியின் விளைவுகளைக் குறிப்பிடுக.
8. இந்தியாவில் முக்கிய அரசமைப்பு சீர்த்திருத்தங்களைக் குறிப்பிடுக.

III. கீழ்காணும் 'எ' பட்டியலில் இருப்பனவற்றை 'பி' பட்டியலுக்குத் தொடர்பான விவரங்களுடன் பொருத்துக.

அ	ஆ
1. வாரன் ஹேஸ்டிங்க்ஸ்	அ) நிரந்தர ஜமீன்தாரி முறை
2. கார்ன் வாலிஸ்	ஆ) ஆங்கில கல்வி முறை
3. தாமஸ் மன்ரோ	இ) வரி வசூலிப்பின் ஏலமிடும் முறை
4. வில்லியம் பென்டிங்க்	ஈ) செல்வ கசிவு கொள்கை
5. தாதாபாய் நௌரோஜி	உ) ரைத்வாரி முறை

@KTBS NOT TO BE REPUBLISHED

II. விவாதிக்க.

1. ஆங்லேயர் ஆட்சியில் வரி வசூலிப்பு முறை மற்றும் நடைமுறையில் உள்ள வரிவசூலிப்பு முறை.

பாடம் 7

மைசூர் மற்றும் பிற மாகாணங்கள்

Z6J3K3

பாட அறிமுகம்:

இப்பாடம் மைசூர் உடையார்களின் வரலாற்றை அறிமுகப் படுத்துகிறது மற்றும் ஆரம்பகால உடையார்களிடையே நன்கு அறியப்பட்ட ஆட்சியாளரான சிக்கதேவராஜ உடையார் மேற்கொண்ட சீர்த்திருத்தங்களைக் குறிப்பிடுகிறது. இப்பாடம் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தானின் இடைக்கால ஆட்சிப் போர்கள் மற்றும் சாதனைகளை விளக்குகிறது.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு கருநாடகம் சில தசாப்தங்களுக்குள், முக்கியமாக விஜயபுரா, கெளதி (Keladi) மற்றும் மைசூர் நிர்வாகத்தின் கீழ் வந்தது. சில காலத்திற்குப் பிறகு விஜயபுரா ஆட்சி முடிவுக்கு வந்ததும் கருநாடகத்தின் பெரும்பாலான பகுதிகளில் முகலாயர்களும் மராத்தியர்களும் ஆட்சி நடத்தினர். இத்தகைய கடினமான சூழ்சிலைகளிலும் கெளதி மற்றும் மைசூர் மாநிலங்கள் தங்கள் சுதந்திரத்தை தக்கவைத்துக்கொண்டு, விஜயநகர மரபுகளைத் தமது பிரதேசங்களில் தொடர்ந்து பின்பற்றின. இது தவிர சித்ரதுர்கா, எலஹங்கா (பெங்களூர்) சுரபுரா, குடகு கித்தூர், துளுநாடு போன்ற சில (பாளைய பட்டுகள்) உள்ளூர் பகுதிகள், நாயக்கர் என்னும் தலைவர்களால் ஆளப்பட்டு வந்தன. இப்பாடத்தில் கெளதி மற்றம் சித்ரதுர்காவின் நாயக்கர் மற்றும் எலஹங்கா பிரபுக்களின் சாதனைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

கருநாடகத்தை ஆண்ட பேரரசுகளின் வளமான வரலாற்றைப் பற்றி அறிந்துக்கொள்வது எவ்வளவு முக்கியமோ, கருநாடகத்தின் சிறு பகுதிகளின் வரலாற்றினைப் பற்றி அறிந்துக்கொள்வதும் அவ்வளவே முக்கியம். ஏனென்றால் பிராந்திய வரலாறு உண்மை நிறைந்ததாக உள்ளது. கருநாடகத்தின் முழுமையான வரலாற்றைப் புரிந்துக் கொள்வதற்கும் ஏதுவாகிறது. இக்கண்ணோட்டத்தில் குடகு, கித்தூர், துளுநாடு மற்றும் ஹைத்ராபாத் கருநாடகத்தின் சரித்திர முகங்கள் இப்பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

© KTBS NOT TO BE REPUBLISHED

திறன்கள்:

1. *சிக்கதேவராயரின் சீர்த்திருத்தத் திட்டங்களைப் போற்றுதல்.*
2. *ஆங்கிலேயரை எதிர்த்து ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் நடத்திய போராட்டங்களுக்கான காரணம் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி புரித்துக் கொள்ளுதல்.*

3. ஹைதர் மற்றும் திப்புவின் சாதனைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
4. மைசூர் மாநிலத்தின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களை நிலவரைப்படத்தில் குறிப்பிடுதல்.
5. மூத்த வெங்கடப்ப நாயக்கர் மற்றும் சிவப்ப நாயக்கரின் சாதனைகளைப் புரிந்துக்கொள்ளுதல்.
6. இராணி சென்னம்மாஜி அவர்களுடைய வீரக் கதையைப் போற்றுதல்.
7. கெளதி நாயக்கரின் மத மனப்பானமைமைப் போற்றுதல்.
8. சித்ரதுர்காவின் ஐந்தாம் மதகரி நாயக்கரின் வீரம் மற்றும் சாதனைகளைப் பற்றி அறிந்து போற்றுதல்.
9. எலஹங்கா அரசர்களான முதலாம் கெம்பேகௌடா மற்றும் இரண்டாம் கெம்பேகௌடா இவர்களின் சாதனைகளை அறிந்துக் கொள்ளுதல்.
10. குடகு வரலாற்றின் சிறப்பு நிகழ்வுகளைப் புரிந்துக் கொள்ளுதல்.
11. கித்தூர் இராணி சென்னம்மா மற்றும் அவரது ஆதரவாளரான சங்கொள்ளி இராயண்ணா அவர்களின் ஆங்கிலேயருக்கு எதிரான வீரப் போரைப் பாராட்டுதல்.
12. துளுநாட்டின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் கொடைகளைப் புரிந்து கொள்ளுதல்.
13. ஆங்கிலேயர்கள், உள்ளூர் ஜமீன்தார்கள் மற்றும் நிஜாம் களுக்கு எதிரான ஹைத்ராபாத் மக்களின் கிளர்ச்சியைப் போற்றுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

7.1 மைசூரின் உடையார்கள்

மைசூர் நகரம் சாமுண்டி மலையின் அடிவாரத்தில் பரவியுள்ளது. மலையின் மீதுள்ள சாமுண்டேஷ்வரி தேவி மைசூர் பிரபுக்களின் தேவதை (குலதெய்வம்). உடையார் வம்ச அரசர்கள் விஜயநகர மரபுகளைத் தொடர்ந்து பின்பற்றி சமூக - கலாச்சாரத்திற்கு பெருங்கொடை அளித்துள்ளனர். நெடுங்காலமாக ஆட்சிபுரிந்து மக்களின் அன்பு மற்றும் மரியாதையைப் பெற்றுக்கொண்டனர்.

மைசூர், உடையார்களின் தலைநகரமாக இருந்தது. அவர்களுடைய அரச சின்னம் 'கந்த-பேருண்டா'. நவராத்திரி பண்டிகை (தசரா), ஒரு ஆடம்பர கொண்டாட்டமாகும். மைசூர் அரண்மனை இந்தியாவில் உள்ள அற்புதமான அரண்மனைகளில் ஒன்று. அரண்மணை மற்றும் அரச அரியணையின் படங்களைப் பாருங்கள்.

தற்போதுள்ள அரண்மனை 1912 இல் அமைக்கப்பட்டது பழங்கால மர அரண்மனை தீக்கு இரையாகி சாம்பலாகிவிட்டது. புதிய அரண்மனையை அமைப்பதற்காக, இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். அரண்மனைக் கூடத்தை (தர்பார் ஹால்) சிறந்த ஓவியரான இராஜா ரவி வர்மா அலங்கரித்தார்.


1894 க்கும் முன்பிருந்த மைசூர் அரண்மனை

1912 இல் அமைக்கப்பட்ட மைசூர் அரண்மனை

தற்கால மைசூர் அரசரின் அரண்மனை


அரியணை

சிக்க தேவராஜ உடையார்

தொடக்கக் கால உடையார்களில் புகழ்பெற்றவரான சிக்கதேவராஜா, ஒரு மாவீரரும் தமது ஆட்சிப்பகுதியை விரிவாக்கினவரும் ஆவார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

மக்கள் சார்பு சீர்த்திருத்தங்கள்

அட்டார கசேரி மைசூர்

சிக்கதேவயரின் மக்கள் சார்பு சாதனைகள் பலவாகும். மைசூரில் மைய அலுவலகம் ஒன்றை நிறுவினார். இது 18 துறைகளைக் கொண்டது. இது 'அட்டாரா கச்சேரி' என்று அழைக்கப் பட்டது. மக்கள் வஞ்சித்துப்போகாமல் இருக்க எடைகளையும், அளவைகளையும் ஒழுங்கு படுத்தினார். நிர்வாகத்தில் ஊழலைத் தடுக்க பல முன்னெடுப்புகளை எடுத்தார்.

சிக்கதேவராஜா மூன்று இலட்சம் வரகாக்களைக் கொடுத்து முகலாயர்களிடமிருந்து பெங்களூரை குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்.

வேளாண் நிலங்களுக்கு நீர்பாசனம் செய்வதற்காக சீரங்கப்பட்டிணத்திற்கு மேற்கில், காவிரி ஆற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டினார். நிர்வாக செலவைக் குறைத்து திரளான செல்வத்தைத் திரட்டியதால் 'நவகோடி நாராயணா' என்ற பட்டத்தைப் பெற்றார். அரசு கடிதங்கள் மற்றும் பொருள்களை வழங்க ''அஞ்சல்'' அமைப்பு முறையைத் துவக்கினார்.

சிக்கதேவராஜரின் ஆட்சியின் கீழ் மைசூரு மிகச் செழிப்பான நாடாகத் திகழ்ந்தது அவர் அக்கால தென்னிந்திய அரசர்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார்.

சிக்கதேவராஜரின் அவையில் இருந்த சிங்கராயர் முதல் கன்னட நாடகமான ''மித்ரவிந்தா-கோவிந்தாவை'' எழுதினார். சாஞ்சி ஹொன்னம்மா அவர்கள் ''ஹதிபதேய தர்மா''வை எழுதினார். அவர் சாஞ்சி தாம்பூலத்தை அரசருக்கு எடுத்து செல்பவராக இருந்ததால் அவர் 'சாஞ்சி ஹொன்னம்மா என்றே அழைக்கப்பட்டார்.

சிக்கதேவராஜ உடையார் மரணத்திற்குப் பிறகு திறனற்ற அரசர்கள் ஆட்சி புரிந்தனர். இதனால் **'தலவாயிகள்'** என்றழைக்கப்படும் அதிகாரிகள் அரசரின் பேரில் ஆட்சி புரிந்தனர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஹைதர் அலி :

தலவாயி நஞ்சராஜ்ஜய்யாவின் கீழ் ஹைதர் அலி ஒரு சாதாரண இராணுவ அதிகாரியாக இருந்தார். துணிச்சலுடனும், அருஞ்செயல் புரிபவர் ஆவார். போர்களில் வெற்றி பெற்று படிப்படியாக தமது படைபலத்தையும் செல்வ வளத்தையும் பெருக்கிக்கொண்டார். விரைவில் மராட்டியர்களை வீழ்த்தி பெங்களூரை மீண்டும் கைப்பற்றினார். இதற்காக அரசரிடம் நன்மதிப்பும் பெற்றார். அரசியல் நெருக்கடியில் இருந்த மைசூர் பேரரசை அவர் காப்பாற்றினார். தலைநகரில் படைவீரர்கள் கிளர்ச்சி செய்தபோது ஹைதர், நஞ்சராஜய்யாவை பதவி நீக்கம் செய்து, அனைத்து அரசியல் அதிகாரங்களையும் ஏற்று, மைசூரின் அவையில் ஆற்றல் மிகுந்த நபராகத் திகழ்ந்தார். அவரே தன்னைப் பேரரசின் 'கார்யகர்த்தா' என்று அழைத்துக் கொண்டு இரண்டாம் கிருஷ்ணராஜ உடையாரை ஒதுக்கினார்.

ஹைதர் அலி

அதிகாரத்திற்கு வந்த பிறகு ஹைதர் தம்முடைய பேரரசை விரிவாக்கினார். அவர் கெளடி பேரரசை வீழ்த்தி பெரிய செல்லவத்தைத் திரட்டியதன் மூலம் தமது நிதி சக்தியை மேலும் அதிகரித்க் கொண்டார்.

ஆங்கிலேயர்களுடன் முரண்பாடு :

வணிகர்களாக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் படிப்படியாக ஒரு அரசியல் சக்தியாக மாறி குடியேறி விட்டனர். தென்னிந்தியாவில் ஹைதரின் அரச விரிவாக்கத்தை ஆங்கிலேயரால் பொருத்துக் கொள்ள முடியவில்லை. ஆதலால் ஆங்கிலேயர் மற்றும் ஹைதருக்கு இடையே உள்ள மோதல் தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஹைதர் அலியும் அவருடைய மகன் திப்பு சுல்தானும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் புரிந்த நான்கு போர்கள் வரலாற்றில் 'மைசூர் போர்கள்' அல்லது 'ஆங்கிலோ மைசூரு போர்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

முதல் மைசூர் போரில் ஆங்கிலேயர்கள் பெரும் இழப்புக்குள்ளானார்கள் வெற்றி பெற்ற ஹைதரின் மதிப்பு மேம்பட்டது.

முதலாம் ஆங்கிலோ மைசூர் போரில் ஹைதர் அலியின் ஆக்கிரமிப்பினால் ஆங்கிலேயர் அழிவிற்குள்ளாயினர். வேறு வழியில்லாமல் ஆங்கிலேயர் மதராஸ் ஒப்பந்தத்திற்கு முற்பட்டனர். மதராஸ் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் ஹைதரலி அல்லது ஆங்கிலோயரின் மீது எந்த எதிரி நாடு முற்றுகையிட்டாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்பதாகும். இந்த ஒப்பந்தம் ஹைதரலியின் மரியாதையை அதிகமாக்கியது.

சில வருடங்களுக்குப் பிறகு மராத்தியர் மைசூரின் மீது தாக்குதல் நடத்தினர். அச்சமயத்தில் மதராஸ் ஒப்பந்தத்தின் படி ஆங்கிலேயர்கள் ஹைதரலிக்கு உதவாமல் நடுநிலை வகித்தனர். இதனால் சினம் கொண்ட ஹைதர் அலி ஆங்கிலேயரைப் போருக்கு இழுத்தார். இப்போரே இரண்டாம் ஆங்கிலோ மைசூரு போராரும். போர் நடக்கும் போதே ஹைதரலி உடல் சுகமின்றி மரணம் எய்தினார். போரை திப்பு சுல்தான் தொடர்ந்து நடத்தினார்.

ஹைதர் அலியின் சாதனைகள் : ஹைதர் அலி படிப்பறிவில்லாதவராக இருந்தாலும் அவர் கன்னடம் உள்பட பல மொழிகள் தெரிந்தவராக இருந்தார். இவருடைய ஆட்சிக்காலத்தில் மைசூரு பேரரசின் ஆட்சிப் பகுதிகள் இரட்டிப்பாயின. வல்லமையான வீரரும், திறமையான நிர்வாகியுமான ஹைதர், கருநாடக வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார். பெங்களூரிலுள்ள ‘லால் பாக்’ பூங்கா இவரால் நிறுவப்பட்டது.

திப்பு சுல்தான்

திப்பு சுல்தான் (பொ.ச. 1782-1799) : ஹைதர் அலியின் மகனே திப்பு சுல்தான் துணிவு மிகுந்த இளைஞரான திப்பு சுல்தான், தனது தந்தை நடத்திய போரில் பங்கேற்று வெற்றி பெற்று தன்னை சுல்தான் என்று அறிவித்துக் கொண்டார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தன்னுடைய தந்தையின் மறைவிற்குப் பிறகும் திப்பு தொடர்ந்து இரண்டாம் ஆங்கிலோ மைசூர் போரை நடத்தினார். யாரும் அவருக்கு உதவவில்லை. திப்பு தனியாக ஆங்கிலேயரை எதிர்த்தார். கடைசியாக ஆங்கலேயர் **'மங்களூரு அமைதி ஒப்பந்தம்'** செய்துக்கொண்டனர். **மங்களூரு ஒப்பந்தம்** இரு தரப்பினருக்கும் மனநிறைவைக் கொடுத்தது. போரின் போது கைப்பற்றிய நிலப்பகுதிகளையும் போர்க் கைதிகளையும் இருவரும் திரும்பக் கொடுத்தனர். இது திப்புவின் கௌரவத்தை உயரத்தியது.

குறுகிய காலத்திற்குள், திப்புவும் ஆங்கிலேயர்களும் மேலும் இரண்டு போர்களைப் புரிந்தனர். இருவர்களுக்குள்ளும் இருந்த பரஸ்பர வெறுப்பு மற்றும் அவநம்பிக்கையே இப்போர்களுக்கான முக்கிய காரணமாக இருந்தது.

மூன்றாவது ஆங்கிலோ மைசூர் போரின் போது ஆங்கிலேயர்கள் அவரது தலைநகரான சீரங்கப்பட்டிணத்தை முற்றுகையிட்டனர். வேறு வழியில்லாமல் திப்பு ஆங்கிலேயர்களுடன் அமைதி உடன்படிக்கை செய்துக்கொண்டார் மற்றும் தனது பேரரசின் ஒரு பாதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். பெரும் இழப்பீட்டை ஆங்கிலேயருக்கு அவர் கொடுக்க வேண்டியதாயிற்று மேலும் அவர் தனது இரண்டு மகன்களையும் ஆங்கிலேயரிடம் பணயக்கைதிகளாக ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

போரின் விளைவாக திப்பு அதிக அவமானங்களை சத்திக்க நேர்ந்தது. எனவே ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். இது நான்காம் மைசூர் போரின் தொடக்கத்தைக் குறித்தது. போரில் ஆங்கிலேயப் படைகள் சீரங்கபட்டிணத்தை முற்றுகையிட்டன.

இந்த போரில் திப்பு வீர ஆவேசத்துடன் போர் புரிந்து இறந்தார். பிறகு சில நாட்டுபுற கதையில் (ಲಾವಣಿ) திப்பு 'மைசூரின் புலி என்று மக்களால் வர்ணிக்கபட்டுள்ளார். குடகு மீதான திப்புவின் படையெடுப்பின் தன்மை வரலாற்றாசிரியர்களால் விமர்சிக்கப் பட்டுள்ளது. அவர் 'மைசூரின் புலி' என்று புகழ்பெற்றார்.

திப்புவின் மரணத்திற்குப் பிறகு மைசூர் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர்கள் இராஜ்ஜியத்தை

© KTBS NOT TO BE REPUBLISHED

மூன்றாம் கிருஷ்ண இராஜ உடையாருக்குக் கொடுத்தனர். இருப்பினும் இந்த இராஜ்ஜியம் ஆங்கிலேயர்களின் ஆதரவின் கீழுள்ள மாநிலமாகவே இருந்தது.

திப்புவின் ஆளுமையும் சாதனைகளும் :

- அறிவியல் துறையின் சாதனைகளைப் பற்றி அவருக்கு சிறந்த அறிவு இருந்தது. அவர் சிறப்பான நூலகத்தை வைத்திருந்தார். பெங்களூரு அரண்மனை, ஶ்ரீரங்கபட்டிணத்தில் கோடைக்கால அரண்மனையை (தரியா தௌலத்)திப்பு கட்டுவித்தார். கோடைக் கால அரண்மனையின் சுவர், கூரை மற்றும் கம்பங்களின் மீது வரலாற்றுச் செய்திகள் அழகாகக் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

- மாநிலத்தின் செழுமைக்காக திப்பு கடுமையாக உழைத்தார். மாநிலத்தில் பட்டு வளர்ப்பை பிரபலபடுத்தியது. அவருடை முக்கிய சாதனையாகும்.

  பிரெஞ்சு, அதிகாரிகளின் உதவியுடன் தனது இராணுவத்தை நவினமாக்கினார். ராக்கெட் தொழில் நுட்பத்தில் திப்புவின் ே தர்ச்சி தனித்துவமானது.

NOT TO KTBS BE REPUBLISHED

பெங்களூர் அரண்மனை

தரியா தௌலத்
ஶ்ரீரங்கபட்டணம்

ஜும்மா மசூதி,
ஶ்ரீரங்கபட்டணம்

- திப்பு சில இந்துக் கோயில்களுக்கு மானியம் வழங்கினார். குறிப்பாக சிருங்கேரி மடத்திற்கு நன்கொடைகள் வழங்கினார். அவர் நில உரிமையை சீர்திருத்தி, விவசாயிகளுக்கு எளிய தவணைகளில் திரும்ப செலுத்த கூடிய கடன் கிடைக்கச் செய்தார். அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு சலுகைகள் பல கிடைக்கச் பெறப் செய்தார்.

- ஶ்ரீரங்கபட்டணத்தில் இருக்கும் ஹைதரலி சமாதி மற்றும் ஜும்மா மசூதி திப்புவின் அற்புதமான கட்டுமானங்கள் ஆகும்.

பள்ளிவாயிலின் உயர்ந்த ஸ்தூபிகள் கண்ணைக் கவர்வன ஆகும். ஸ்ரீரங்கபட்டிணம் மற்றும் பெங்களூரில் நாணயச் சாலைகளை நிறுவினார்.

நிலவரைபடம் 10

© KTBS NOT TO BE REPUBLISHED

மூன்றாம் கிருஷ்ணராஜ உடையார் (பொ.ச 1799-1831)

திப்புசுல்தானின் மரணத்திற்குப் பிறகு மைசூர் வரலாற்றில் போராட்டத்தின் யுகம் முடிவடைந்தது. ஆங்கிலேயர்கள் மைசூரு சமஸ்தானத்தை வசப்படுத்திக்கொண்டு நான்கு பகுதிகளாகப் பிரித்து, ஆங்கிலேயரும் அவர்களுடைய நண்பர்களுமான மராட்டியர்கள் மற்றும் நிஜாம்கள் மூன்று பகுதிகளைப் பிரித்துக்கொண்டு மீதமிருந்த ஒரு பகுதியை மைசூரு உடையார்களுக்கு விட்டுக் கொடுத்தனர். அதுமட்டுமல்லாமல் மூன்றாம் கிருஷ்ணராஜ உடையாரை அதிகாரத்தில் அமர்த்தினர். கிருஷ்ணராஜர் அப்போது ஐந்து வருட சிறுவனாக இருந்ததால் நிர்வாகத்தை பூர்ணைய்யா என்பவரிடம் ஒப்படைத்து அவரை திவானாக நியமித்தனர்.

மூன்றாம் கிருஷ்ணதேவராஜ உடையார் சிவமொக்கா மாவட்டத்தின் நகரமான (பிதநூரு) நிலப்பரப்பின் கலகத்தை சரியாகக் கையாளவில்லை என்ற காரணத்திற்காக ஆங்கிலேயர்கள் 1831இல் அவரை அதிகாரத்திலிருந்து கீழே இறக்கினார்கள். மைசூரு சமஸ்தானத்தில் கமிஷனர் ஆட்சியைக் கொண்டுவந்தார்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

கமிஷனர்களின் ஆட்சி (பொ.ச. 1831-1881):

மார்க்கப்பன் (பொ.ச. 1834-1861)

மார்க் கப்பன் மாநிலத்தில் பல ஆட்சி சீர்திருத்தங்களை அமலுக்கு கொண்டுவந்தார். இவர் தலைநகரத்தை மைசூரிலிருந்து பெங்களூருக்கு மாற்றினார். மைசூரை பல ஆட்சிப் பகுதிகளாகப் பிரித்து, அவைகளை சூபரின்டெண்டெண்ட்களின் மேற்பார்வையில் வைத்தார். ஆட்சிப் பகுதிகள் மாவட்டங்களாகவும் தாலுக்காக்களாகவும் பிரிக்கப்பட்டன. நீதி மற்றும் காவல்துறைகள் சரியாக ஒருங்கிணைக்கப்பட்டன. கன்னடம் ஆட்சி மொழியாக அமலுக்குக் கொண்டுவரப் பட்டது.

மார்க் கப்பன்

புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. அதன் விளைவாக மாநிலத்தின் எல்லா முக்கியப் பட்டணங்களுக்கும் பெங்களூருடன் நேரடி தொடர்பு ஏற்பட்டது. பாலங்கள் நிறுவப்பட்டன மற்றும்

டெலிகிராப் தந்திகள் போடப்பட்டன. பொ.ச. 1859இல் பெங்களூரு மற்றும் ஜோலார்பேட்டையின் இடையில் இரயில் வழிப்பாதை அமைக்கப்பட்டது.இது மைசூர் முதல் இரயில்ப் பாதையானது. இவர் பொ.ச. 1861 இல் கமிஷனர் பதவியை இராஜினாமா செய்தார். இவருடைய பெயரில் பெங்களூரில் கப்பன் பூங்கா உள்ளது.

லூயி பெந்தாம் பௌரிங் (பொ.ச. 1862-1870)

லூயி பெந்தாம் பௌரிங் பொ.ச. 1862 இல் முக்கிய கமிஷனராக அதிகாரம் ஏற்றார். இவர் மைசூரு மாநிலத்தின் முழு ஆட்சியை மீண்டும் ஒழுங்குபடுத்தினார். நந்திதுர்கா நகரம் மற்றும் எட்டுக் கிராமங்கள் ஆட்சிக்கிளைகளாக இருந்தன. இந்தக் கிளைகளை கமிஷனர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார், நிலவரி சீர்படுத்தப்பட்டது. சட்டம் மற்றும் காவல்துறை இலாக்காக்கள் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டன. பொதுக் கல்வித் துறையுடன் கல்விச் சீர்திருத்தங்களும் அமலுக்குக் கொண்டுவரப்பட்டன பொ.ச. 1870இல் பௌரிங் கமிஷனர் பதவியை இராஜினாமா செய்தார். கமிஷனர்கள் மைசூர் இராஜ்ஜியத்தின் மேம்பாட்டிற்கு உறுதியான அடித்தளம் அமைத்தார்கள்.

லூயி பெந்தாம் பௌரிங்

NOT TO BE REPUBLISHED @KTBS

பத்தாவது சாமராஜ உடையார் (பொ.ச. 1881-1894)

ஆங்கிலேயர்கள் 1881இல் பத்தாவது சாமராஜ உடையாருக்கு ஆட்சியை மறுபடியும் வகித்துக்கொடுத்தார்கள். இதை புனர்தானம் என்று சொல்வார்கள். பத்தாவது சாமராஜ உடையரின் கீழ் சி. ரங்காசாருலு மற்றும் கே.ஷேசாத்ரி ஐய்யர் அவர்கள் திவான்களாக ஆட்சியை நிர்வகித்தனர். பத்தாவது சாமராஜர் காலத்தில் மக்கள் பிரதிநிதி சபை யை (1881) ஆரம்பித்தார்கள்.

பத்தாவது சாமராஜ் உடையார்

நான்காம் கிருஷ்ணராஜ உடையார் (பொ.ச. 1902-1940):

நால்வடி கிருஷ்ணராஜ உடையார்

பத்தாவது சாமராஜ உடையார் கல்கத்தாவிற்குப் சென்றிருந்தபோது உடல்நலக் குறைவால் இறந்துவிட்டார். அவருடைய வாரிசான நான்காம் கிருஷ்ணராஜ உடையார் அதிகாரத்திற்கு வந்தபோது (1895) அவருக்கு வயது பதினொன்றாக இருந்ததால் தாயார் கெம்பநஞ்சம்மன்னி ஆட்சியைப் கவனித்துக் கொண்டிருந்தார். பொ.ச. 1902 இல் நால்வடி அவர்களின் நேரடி ஆட்சி ஆரம்பமானது. சிறந்த கல்வி பெற்ற இவர் மைசூரு சமஸ்தானத்தை அவருடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் ஒரு முன்மாதிரி சமஸ்தானமாக உருவாக்கினார். தொலைநோக்குப் பார்வை கொண்டவராகவும், ஏழைமக்களிடம் அக்கரை கொண்டவராகவும் இருந்தார். சமுதாயத்தில் எல்லா வர்க மக்களுக்கும் ஆட்சியில் வாய்ப்பு ஏற்படுத்துவதற்காக சிபாரிசுகளைப் பெற மில்லர் பொருப்பாண்மைக் குழுவை அமைத்தார்.

நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் முக்கிய சாதனைகள் கிழ்வருமாறு

- ஜே.என். டாடா பெங்களூரில் அறிவியல் நிறுவனத்தைத் தொடங்க 371 ஏக்கர் நிலம் மற்றும் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான பண உதவி அளித்தார்.
- பொ.ச. 1907 இல் மைசூர் சட்டமன்றம், என்று அழைக்கப்படும் ‘நியாய விதாயக’ சட்ட சபையை தொடங்கி மக்கள் பிரதிநிதிகளின் மூலம் மக்கள் பிரச் னைகளை விவாதிக்க வாய்ப்பு உருவாக்கிக் கொடுத்தார்.
- இன்றைய மைசூர் அரண்மனையை பொ.ச. 1910 இல் முழுமையாக கட்டிமுடித்தார்.
- கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்) அணைக்கட்டை நிறுவியதன் மூலம் சமஸ்தானத்தில் விவசாயத்தை மேம்படுத்தினார்.
- பொ.ச. 1911 இல் மைசூரு பொருளாதார குழுவை (Mysore Economic Conference) ஆரம்பித்தார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

- பின்தங்கியவர்களுக்கு அரசாங்க சேவையில் சிறப்பு பிரதிநிதித்துவம் வழங்கும் கட்டளையை பிறப்பித்தார்.
- முதல் முறையாக பெண்களுக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட வழி வகை செய்தார்.

இவ்வாறாக நால்வடி அவர்கள் கல்வி, தொழில், வங்கி முதலான துறைகளின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாகவும் ஊக்கமூட்டுபவராகவும் இருந்தார். அவரது தொலைநோக்குப் பார்வையின் யோசனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் பின்னணியில் அரசாங்க வளர்ச்சிக்கு உதவியாக இருக்கக்கூடிய திறமைசாலிகளை திவான்களாக நியமனம் செய்துகொண்டார். அவர்களில் சர் எம். விஷ்வேஷ்வரய்யா மற்றும் சர் மிர்ஜா இஸ்மாயில் முக்கியமானவர்கள் ஆவர்.

நால்வடி அவர்கள் மைசூர் சமஸ்தானத்தை மகாத்மா காந்தி 'ராமராஜ்ஜியம்' என்று புகழ்ந்தார். நால்வடி அவர்களை 'ராஜர்ஷி' என்று அழைத்தார். 20வது நூற்றாண்டின் முதல்பகுதியில் நான்காம் கிருஷ்ணராஜ உடையரைப்போன்ற மற்றொரு திறமை மிக்க சமஸ்தான அரசர் இந்தியாவிலேயே இருக்கவில்லை.

© KTBS NOT TO BE REPUBLISHED

கிருஷ்ணராஜ சாகரம் (கே.ஆர். எஸ்) அணைக்கட்டை நிறுவும்போது நான்காம் கிருஷ்ணராஜா அவர்களுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது ராஜபரிவாரத்தின் தங்க ஆபரணங்களை பாம்பேயிலுள்ள சினிவாரா பேட்டையில் விற்பனை செய்து, வந்த பணத்தில் அணைக்கட்டின் வேலைகளை முழுமையடையச் செய்தார்.

மைசூர் அரண்மனை

சர். எம். விஷ்வேஷ்வரய்யா (பொ.ச. 1912-1918)

நவீன மைசூரின் சிற்பி மற்றும் நிறுவனர் என்று அழைக்கப்பட்டவர் சர் எம். விஷ்வேஷ்வரய்யா. அவர்கள் திறமை சாலியான பொறியியலாளரான (Engineer) இவர் 1909-1912வரை மைசூரு சமஸ்தானத்தின் முக்கிய பொறியியலாளராக இருந்தார். நான்காம் கிருஷ்ணராஜ உடையார் இவரை பொ.ச. 1912இல் மைசூரின் திவானாக நியமனம் செய்தார். நால்வடி கிருஷ்ணராஜரின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப இவரது காலத்தில் மைசூரு எல்லாவகையிலும் முன்னேற்றமடைந்தது.

சர் எம். விஷ்வேஷ்வரய்யா

'தொழில்மயமாக்கம் அல்லது அழிவு' என்பது சர் எம்.விஷ்வேஷ்வரய்யா அவர்களின் புகழ்பெற்ற முழுக்கமாக இருந்தது. பத்ராவதியின் இரும்புத் தொழிற்சாலை, மைசூரின் சந்தன எண்ணைத் தொழிற்சாலை, பெங்களூரின் சோப்புத் தொழிற்சாலை, மத்திய தொழில் பட்டறை, தோல் தொழிற் சாலை மற்றும் உலோகத் தொழிற் சாலைகளை ஆரம்பித்தார். வியாபாரம் மற்றும் வணிகத்திற்கு ஊக்கமளிக்க பெங்களூரில் மைசூரு சேம்பர் ஆப் காமெர்ஸ் அண்ட் இன்டஸ்ட்ரீஸ் நிறுவப்பட்டது. வியாபாரம் மற்றும் வணிகத்தை வளர்ச்சியடையச் செய்ய பொ.ச. 1913 இல் மைசூரு வங்கி ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் எல்லா வளர்ச்சியும் முக்கியமாக மக்களின் கல்வியை சார்ந்திருக்கும் என்று சர் எம். விஷ்வேஷ்வரய்யா நம்பியிருந்தார். இவர் துவக்கக் கல்வியை கட்டாயமாக்கினார். தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பெங்களூரின் ஹெப்பாளில் விவசாயக் கல்வியொன்றை நிறுவினார். பொ.ச. 1916இல் ஆரம்பித்த மைசூரு பல்கலை கழகம், கல்வித் துறைக்கு இவர் அளித்த சேவை அளப்பரிய சாதனையாகும். பொ.ச. 1915இல் பெங்களூரில் கன்னட சாகித்ய பரிஷத்தை ஆரம்பித்தார். கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டை நிறுவும் வேலைகள் விஷ்வேஷ்வரய்யா காலத்திலிருந்து தொடர்ந்து பொ.ச. 1932இல்

©KTBS NOT TO BE REPUBLISHED

முடிவடைந்தது. மைசூரு-அரிசிக்கெரே மற்றும் பௌரிங்பேட்டை கோலார் ரயில் தடங்கள் போடப்பட்டன. நான்காம் கிருஷ்ணராஜ உடையரின் பல தொலைநோக்குத் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவந்தவர் சர்.எம்.விஷ்வேஷ்வரய்யா அவர்கள் கடைசியாக பொ.ச. 1918இல் விஷ்வேஷ்வரய்யா திவான் பதவியை இராஜினாமா செய்தார். ஆங்கில அரசாங்கம் இவரது சேவைக்காக சர் என்ற விருதை வழங்கி கௌரவித்தது. பொ.ச. 1955 இல் இந்திய அரசு அவருக்கு 'பாரத ரத்னா' விருதினை அளித்து கௌரவித்தது.விஷ்வேஷ்வரய்யா இந்த விருதைப் பெற்ற முதல் கன்னடர் என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூரு

மைசூர் ஸ்டேட் வங்கி

கிருஷ்ணராஜ சாகர் அணை

சர் மிர்ஜா இஸ்மாயில் (பொ.ச. 1926-1941)

சர் மிர்ஜா இஸ்மாயில்

திவானாக சேவை செய்த சர் மிர்ஜா இஸ்மாயில் அவர்களும் புதிய மைசூரை நிறுவியவர்களில் ஒருவர் என்று குறிப்பிடப்படுகிறார். நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் ஆசைப்படி இவர் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து பல தொழில்களை ஆரம்பித்தார். பெங்களூரில் ஹிந்துஸ்தான் ஏரோனாடிக் லிமிடெட், கண்ணாடித் தொழிற்சாலை, பீங்கான் பாத்திரத் தொழிற் சாலை, பௌகொளாவில் இராசயன உரத் தொழிற்சாலை, மண்டியாவில் சக்கரைத் தொழிற்சாலை, சிவமொக்காவில் வத்திப்பெட்டித் தொழிற்சாலை மற்றும் பத்ராவதியில் எஃகு மற்றும் காகித தொழிற்சாலைகளை இவர் நிறுவினார். ஜக்கூரில் விமான நிலையத்தை

NOT TO BE REPUBLISHED

அமைந்தார். ஆகாஷவாணி (ரேடியோ) மையங்களை பெங்களூரிலும் மைசூரிலும் நிறுவினார்.

இவர் கிராமத் தொழில்களை ஊக்குவித்தார். பதனவாளத்தில் காதி உற்பத்தி மையத்தை ஆரம்பித்தார். இர்வின் கால்வாயை நிறுவி மண்டியா விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்தார். மைசூரை பூந்தோட்டங்கள் மற்றும் பூங்காக்களின் நகரமாக்கினார். கிருஷ்ணராஜ சாகர நீர்வீழ்ச்சியின் பின்புறம் பிருந்தாவன் பூங்காவை நிறுவினார்.

பிருந்தாவன் பூங்கா

பெங்களூரில் 'தேசிய மனநல மற்றும் நரம்பறிவியல் நிறுவனம்' (நிமான்ஸ்), கோலாரில் நரசிம்மராஜ மருத்துவமனை, ஷிவமொக்காவில் மெக்கான் மருத்துவமனை மற்றும் மைசூரில் வாணிவிலாஸ் மருத்துவமனை இவர் காலத்தில் தொடங்கப்பட்டவை.

கல்விக்கு ஊக்கமளிக்க தொடக்கக் கல்வி சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்து தனியார் பள்ளிகளுக்கு பண உதவி செய்யப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகளில் கன்னட வழிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. இப்படி மைசூரை வளர்ச்சிப்படுத்துவதில் மிர்ஜா இஸ்மாயில் அவர்களின் சேவை மகத்துவமானது. நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் கூட்டாளிகளான மிர்ஜா இஸ்மாயில்

நான்காம் கிருஷ்ணராஜரின் தொலைநோக்குப் பார்வையின் திட்டங்களை செயலாற்றுவதில் வெற்றியடைந்தார்.

நால்வடி கிருஷ்ணராஜ உடையாரின் மரணத்திற்குப் பின் ஜெயசாமராஜ உடையார் அதிகாரத்திற்கு வந்தார். இவர் மைசூரை ஆட்சி செய்த கடைசி அரசராவார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய ஒருங்கிணைப்பில் மைசூரு சமஸ்தானம் இணையவேண்டும் என்று கே.சி.ரெட்டி அவர்களின் தலைமையில் அரண்மனை சத்தியாகிரகம் ஆரம்பமானது. இந்த சத்தியாகிரகத்தின் பலனாக ஜெயசாமராஜ உடையார் இந்திய ஒருங்கிணைப்பில் இணைய சம்மதித்தார். இதன் விளைவாக கே.சி.ரெட்டி தலைமையில் 1947 அக்டோபர் 24அன்று பொறுப்பான அரசாங்கம் நிலைநாட்டப்பட்டது. ஜெயசாமராஜ உடையார் மைசூர் இராஜ்ஜியத்தின் முதல் ஆளுநராக (கவர்னர்) பணி புரிந்தார். கெ.சி. ரெட்டி அவர்கள் மைசூரில் முதலாவது முதல் அமைச்சராக பணி புரிந்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

முக்கிய வருடங்கள் (பொ.ச)

சிக்க தேவராய உடையார்	1673-1704
ஹைதரலி	1761-1782
திப்பு சுல்தான்	1782-1799
முதலாம் ஆங்லோ மைசூரு போர்	1767-1769
இரண்டாம் ஆங்லோ மைசூரு போர்	1780-1784
மூன்றாம் ஆங்லோ மைசூரு போர்	1790-1792
நான்காம் ஆங்லோ மைசூரு போர்	1799
மார்க் கப்பன்	1834-1861
லூயி பெந்தாம் பௌரிங்	1862-1870
பத்தாம் சாம ராஜ உடையார்	1881-1894
நான்காம் கிருஷ்ணராஜ உடையார்	1902-1940
சர் எம். விஷ்வேஷ்வரய்யா	1912-1918
சர். மிர்ஜா இஸ்மாயில்	1926-1941

பயிற்சிகள் :

I. விடுபட்ட இடங்களை பாருத்தமான சொற்களால் நிரப்புக :

1. மைசூரு உடையார்களின் ஆரம்பகாலத்து தலைநகரம் ---------------- ஆக இருந்தது.
2. இரண்டாம் ஆங்லோ மைசூரு போருக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் திப்பு சுல்தானுடன் ---------------- ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.
3. 'மைசூரு புலி' என்ற பெருமைக்குரியவர் ------------
4. மூன்றாம் கிருஷ்ணராஜ உடையாரின் திவான் ----------------
5. மைசூரு சமஸ்தானத்தின் சட்டநியமன சபை ----------------- இல் ஆரம்பிக்கப்பட்டது.
6. மைசூர் சமஸ்தானத்தை காந்தியடிகள் ----------------- என்று அழைத்தார்.
7. பாரத ரத்னா விருதைப் பெற்ற முதல் கன்னடர் ------------------
8. இர்வின் கால்வாயை நிறுவிய திவான் -----------------

II. கீழ் காணும் கேள்விகளுக்கு ஒரே வாக்கியத்தில் விடையளிக்கவும்:

9. அட்டாரா கச்சேரியை நிறுவியவர் யார்?
10. தரியா தௌலத் எங்குள்ளது ?
11. லால்பாக் பூங்கா எங்கே இருக்கிறது? அதை நிறுவியவர் யார்?
12. திப்புவின் மரணத்திற்குப் பிறகு மைசூரு சிம்மாசனம் யாரிடம் சேர்ந்தது?
13. மைசூரு சமஸ்தானத்திற்கு ஏன் கமிஷனர் ஆட்சி அமலுக்கு வந்தது?
14. மைசூரின் முக்கிய கமிஷனர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
15. 'புனர்தானம்' என்றால் என்ன?
16. மக்கள் பிரநிதி சபை எப்போது ஆரம்பமானது?
17. கன்னட சாகித்ய பரிஷத் எங்கே இருக்கிறது? இது எப்போது தொடங்கப்பட்டது?

@KTBS NOT TO BE REPUBLISHED

18. அரண்மனை சத்தியாகிரகத்திற்கு தலைமை வகித்தவர் யார்?

III. கீழ் காணும் கேள்விகளை குழுவில் விவாதித்து விடையளிக்க:

19. ஹைதரலியின் சாதனைகள் யாவை?

20. மூன்றாம் மைசூரு போரின் விளைவுகள் யாவை?

21. திப்பு சுல்தானின் சாதனைகளைக் குறிப்பிடுக.

22. நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் முக்கிய சாதனைகளை பட்டியலிடவும்.

23. சர் எம். விஷ்வேஷ்வரய்யா அவர்களின் சாதனைகள் யாவை?

IV. இந்தக்கீழ்க்காணும் ஏ பட்டியலில் கொடுக்கப்பட்ட அம்சங்களை பி பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்ற அம்சங்களுடன் பொருத்துக :

	ஏ	பி
1.	சிக்கதேவராய உடையார்	ராஜர்ஷி
2.	திப்பு சுல்தான்	பாரத ரத்னா
3.	நான்காம் கிருஷ்ணராஜ உடையார்	நவகோடி நாராயணா
4.	சர்.எம்.விஷ்வேஷ்வரய்யா	முதல் ஆளுநர்
5.	ஜெயசாமராஜ உடையார்	மைசூர் புலி

@KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு :

- நிலவரைப்படத்தில் மைசூர் இராஜ்ஜியத்தின் இடங்களைக் குறிப்பிடுக.
- திப்பு சுல்தான் இந்தியாவில் வெளிநாட்டு ஆட்சியை முறியடிக்க முயற்சிசெய்தார். ஆனால் வெற்றியடையவில்லை ஏன்? விவாதித்து விடையளிக்க.

☆ ☆ ☆

7.2 கௌதி, சித்ரதுர்கா, எலஹங்கா

கௌதியின் நாயக்கர்கள்

நாயக்கர்கள்: விஜயநகரப் பேரரசின் கீழ் பல சிற்றரசர்கள் இருந்தனர். இவர்கள் நாயக்கர்கள் அல்லது பாளையக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் கீழிருந்த சிறிய நிலப்பகுதிகளைப் 'பாளையப்பட்டு' என்று அழைத்தனர். இவர்களில் கௌதி மற்றும் சித்ரதுர்கா நாயக்கர்கள் கருநாடக வரலாற்றில் புகழ் பெற்றவர்கள் ஆவர்.

கௌதி இராச்சியம், விஜயநகர காலத்தில் சிவமொக்காவில் நிறுவப்பட்டது. சுதந்திரமடைந்த பிறகு இது மலைநாட்டையும் கடலோரக் கருநாடகத்தையும் ஆண்டது.

கௌதி பரந்த மற்றும் வளமான இராச்சியமாக இருந்தது. இது சிவமொக்கா, தென் கன்னடம், உடுப்பி, காசர்கோட் (கேரளா), குடகு, ஹாசன், துமகூரு, சித்ரதுர்கா, தார்வாட், வட கன்னடா மாநிலப் பகுதிகளை உள்ளடக்கியகௌதி இராச்சியம் இருந்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஹிரிய (மூத்த) வெங்கடப்ப நாயக்கர் : கௌதி அரசர்களில் மிகவும், திறமையானவர் ஹிரிய வெங்கடப்ப நாயக்கர். இவருடைய ஆட்சியின் போது கௌதி முழுச் சுதந்திரம் பெற்ற இராச்சியமாக மாறியது. அவர் மேற்கு கடற்கரையை சந்திரகிரி ஆறு வரை கைப்பற்றினார். அவர் உல்லாள அரசியான அப்பக்காவின் உதவியோடு, மங்களூரில் போர்ச்சுகீசியர்களை வீழ்த்தினார். மேலும் அதில்ஷாவின் படைகளை வீழ்த்தி ஹனகல்லில் வெற்றித் தூணை அமைத்தார். அனைத்து சமயப் பிரிவுகளையும் அவர் ஆதரித்தார்.

சிவப்ப நாயக்கர் : சிவப்ப நாயக்கர் கௌதியின் நன்கு அறியப்பட்ட அரசராவார். மேற்குக் கடற்கரையில் போர்ச்சுகீசியர்களின் பிடியில் இருந்த கோட்டைகளைக் கைப்பற்றி அவர்களை அங்கிருந்து விரட்டியடித்தார். இதன் நினைவாக 'மேற்குக் கடற்கரையின் இறைவன்' (படுகடளொடெயா) என்று

சிவப்ப நாயக்கர்

தன்னை அழைத்துக் கொண்டார். அரண் காவலுக்காக அவர் பேகல், சந்திரகிரி (கேரளாவில்), மங்களூரு மற்றும் இன்ன பிற இடங்களில் வலிமையான கோட்டைகளைக் கட்டினார். ஆழ்ந்த சமயப்பற்றுள்ள அவர், வைதீகச் சடங்குகளின்படி **'வாஜபேயா'** போன்ற யாகங்களை செய்தார்.

அவரது இராச்சியத்தில் வணிக நடவடிக்கைகளை மேம்படுத்த, கோவாவின் பலவணிக சமூகங்களை தலைநகருக்கு வரவழைத்து குடியேற ஊக்குவித்தார். மேலும் வேளாண்மையில் சிறந்து விளங்கியதால் கோவாவிலிருந்து கிறித்துவர்களை தனது தலைநகரத்திற்கு வந்து குடியேற ஊக்குவித்தார் மற்றும் அவர்களுக்கு பூமி காணிக்கைகளையும் வழங்கினார். அவர் தனது இராச்சியத்தில் உள்ளூர் பாதிரியாரை மட்டுமே நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சிவப்ப நாயக்கரின் அரண்மனை, சிவமொக்கா.

சிவப்ப நாயக்கரின் சிஸ்து: சிவப்ப நாயக்கர் 'சிஸ்து' என்ற புகழ்பெற்ற வருவாய் முறையை அறிமுகப்படுத்தினார். இம் முறைப்படி நிலத்தின் வகைப்பாட்டின் அடிப்படையில் நில வருவாய் நிலைப்படுத்தப்பட்டது. மண் வளம் மற்றும் நீர்பாசன வசதிகளின் இருத்தலே இதன் அடிப்படையாக இருந்தது. நிலவருவாயானது மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்காக நிலைப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வகையான வருவாய் மதிப்பீடு **'சிவப்ப நாயக்கரின் சிஸ்து'** என்று அழைக்கப்பட்டது. சிஸ்து மலைநாட்டிற்கு செழிப்பைக் கொண்டுவந்தது.

அகோரேஷ்வரர் கோயில், கெளதி

இராணி சென்னம்மாஜி: சிவப்ப நாயக்கரின் மறைவிற்குப் பிறகு அவருடைய மருமகளான சென்னம்மாஜி இராச்சியத்தை ஆண்டார். அவர் முகலாயப் படையினரால் துரத்தப்பட்ட சிவாஜியின் மகனான சத்ரபதி இராஜாராமிற்கு அடைக்கலம் கொடுத்தார். வீரம் மற்றும் தியாகத்தின் சின்னமாகத் திகழ்ந்த இவர் மைசூரு போரிலும் பங்குபெற்றார்.

கெளதி அரசர்கள் **கோயில்கள், அக்ரஹாரங்கள்** மற்றும் **வீரசைவ மடங்களைக்** கட்டுவித்தனர். கெளதியில் உள்ள அகோரேஸ்வரர் கோயில் அதனுடைய சிற்ப வளத்திற்குப் புகழ்பெற்றது. மடங்கள் கல்வி மையங்களாயின. அரசர்கள் அனைத்து மதப் பிரிவினருக்கும் பெரும் நன்கொடைகளை வழங்கினர். ஒரு கிறித்துவ ஆலயத்தைக் கட்டுவிப்பதற்காக சென்னம்மாஜி மங்களூரில் ஒரு நிலத்தை நன்கொடையாகக் கொடுத்தார்.

காலப்போக்கில் மைசூரு இராச்சியத்துடனான தொடர்ச்சியான போட்டி மற்றும் உள்நாட்டு சண்டைகளின் காரணமாக கெளதி பலவீனமடைந்தது, இறுதியாக ஹைதரால் கைப்பற்றப்பட்டது.

©KTBS NOT TO BE REPUBLISHED

சித்ரதுர்காவின் நாயக்கர்கள்

மைசூரு மற்றும் கௌதிக்கு அடுத்தபடியாக சித்ரதுர்கா நாயக்கர்களுக்கு கருநாடக வரலாற்றில் கண்ணியமான இடமுண்டு. 16 முதல் 18 ஆம் நூற்றாண்டுகள் வரை அவர்கள் பாளையக்கார்களாக ஆட்சி புரிந்தார்கள்.

மதகரி நாயக்கர்: இவர் சித்ரதுர்கா நாயக்கர்களில் மிகப் பிரபலமானவரும் புகழ்பெற்றவரும் ஆவார். அவர் பன்னிரண்டு வயதிலேயே அரியணை ஏறியவர். ஹைதரலிக்கு பல போர்களில் உதவி செய்தவர். ஆனால் மதகரியின் சாகசதத்தைக் கண்டு அவருக்குள்ளே பொறாமை இருந்தது. மதகரியை அழிக்க உறுதி பூண்டு சித்ரதுர்கா கோட்டையை முற்றுகையிட்டார். ஆயினும் ஏழு ஒருமைய மதில் சுவர்களைப் பெற்றுள்ள இக்கோட்டையைக் கைப்பற்றுவதில் தோல்வியுற்றார்.

அதனால் அவருடைய சிப்பாய்கள் கோட்டையின் இரகசிய வழியைக் கண்டுபிடித்து, காவல்காரன் இல்லாத நேரத்தில் ஒரு இரகசிய துளையின் வழியே கோட்டைக்குள் நுழைய முயற்சித்தார்கள். அதைக் கண்ட காவல்காரரின் மனைவி ஓபவ்வா தனது உலக்கையால் எதிரிகள் பலரை கொன்று குவித்தார். இன்றும் சித்ரதுர்கா கோட்டையின் மேற்கே வீரப் பெண் ஓபவ்வாவின் துளை உள்ளது.

தோல்வியை ஏற்றுக்கொள்ள விரும்பாத ஹைதர் அலி, சித்ரதுர்காவை மற்றொரு முறை முற்றுகையிட்டார். பயங்கரமான போர் நடைபெற்று மதகரி நாயக்கர் தோல்வியடைந்தார். அவர் சிறையில் அடைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். மதகரிக்குப் பிறகு சித்ரதுர்காவின் ஆட்சி முடிவடைந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஒனகே ஓபவ்வா

சித்ரதுர்கா கோட்டை

சித்ரதுர்கா ஒரு அழகிய மலைக் கோட்டையாகும். ஏழு சுற்றுக் கோட்டைகளால் சூழப்பட்டுள்ளது. மலைக் காடுகளில் கோயில்களும் குளங்களும் உள்ளன. சித்ரதுர்கா நாயக்கர்கள் பல கோயில்களைக் கட்டினார்கள். பரமசாகரா மற்றும் பீமசமுத்திரா நீர் தேக்கங்கள் இவர்களது பங்களிப்புகளாகும். இவர்கள் தமது வீரச் செயல்களால் இன்றும் நமது மனதில் நிலைபெற்றுள்ளனர். சித்ரதுர்கா நாயக்கர்களைப் பற்றிய செம்மையான நாட்டுப்புற இலக்கியமும் உண்டு.

யலஹங்கா மன்னர்கள்

கெம்பேகௌடா வம்சம் என்று பிரபலமாக அறியப்படும். யலஹங்கா நாடபிரபுக்கள் நவீன பெங்களூரை நிறுவியவர்கள் என்று வரலாற்றுப் புகழ் பெற்றவர்களாவர். விஜயநகரத்தின் கீழ் அவர்கள் பாளையக்காரர்களாக இருந்தனர். 16 இலிருந்து 18 வது நூற்றாண்டுகள் வரை பெங்களூரு மாவட்டங்களின் பெரும் பகுதிகளை ஆண்டனர். பெங்களூரு அவர்களுடைய தலைநகரமாக இருந்தது. பின்னர் மாகடி தலைநகரமாக மாற்றப்பட்டது.

முதலாம் கெம்பே கௌடா

முதலாம் கெம்பே கௌடா: முதலாம் கெம்பே கௌடா பெங்களூரு நகரத்தை நிறுவியவர் என்று புகழ் பெற்றவர். பெங்களூரில் ஒரு கோட்டையைக் கட்டி அங்கிருந்து ஆட்சி புரிந்தார். அவர் பெங்களூரில் பசவணகுடியில் பசவா கோயிலையும், ஹலசூரில் சோமேஷ்வரர் கோயிலையும் கட்டினார். கவிகங்காதரேஷ்வரா கோயிலையும் இவர் விரிவுபடுத்தினார். தலைநகரத்தில் நான்கு ஏரிகளை நிறுவிய பெருமை இவரைச் சேரும்.

கெம்பம்பூதி, தர்மம்பூதி, ஹலசூரு மற்றும் சம்பங்கி - முதலாம் கெம்பே கௌடா அமைத்த நான்கு ஏரிகளாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

காவல் கோபுரம், பெங்களூரு

முதலாம் கெம்பேகௌடா சத்திரங்களையும் அக்ரகாரங்களையும் கட்டினார். தர்ம பிரபுவாக ஆட்சி புரிந்த இவர் பிரஜா வத்சலா என்ற பட்டப்பெயரைப் பெற்றிருந்தார்.

இரண்டாம் கெம்பேகௌடா : இரண்டாம் கெம்பேகௌடா முதலாம் கெம்பேகௌடாவின் மகனாவார். கெம்பேகௌடா அரசர்கள் மாகடியைத் தலைநகரமாகக் கொண்டிருந்தனர். ஆதலால் இவ்வம்ச அரசர்கள் மாகடி கெம்பேகௌடர்கள் என்றழைக்கப்பட்டனர். இரண்டாம் கெம்பேகொளடா, பெங்களூரு நகரத்தின் எல்லைகளை அடையாளங் கண்டு நான்கு காவல் கோபுரங்களைக் கட்டினார். இவர் காலத்தில் பெங்களூரு நெசவுத் தொழிலின் பெரிய மையமாக வளர்ந்தது. தன் தந்தையைப் போலவே இவரும் புதிய கிராமங்கள் கோயில்கள் மற்றும் ஏரிகளை அமைத்தார். பிறகு யலஹங்கா நாட பிரபுக்களின் நாடு மைசூரு நாட்டுடன் இணைந்தது.

7.3 குடகு, கித்தூர், துளுநாடு மற்றும் ஹைதராபாத் - கருநாடகம்

குடகு மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவில் அமைந்துள்ளது. மாவட்டத்தில் வசிக்கும் பெரும்பாலோர் கொடவா மற்றும் அரெமொழியைப் (அரெபாஷே) பேசுகிறார்கள்.

தலகாவேரி

©KTBS NOT TO BE REPUBLISHED

காவேரி நதி கருநாடகத்தின் உயிர்நதியாகும். தலகாவேரி காவிரியின் பிறப்பிடமாகும். பல இலட்சம் பேர் தலகாவேரியை வழிபடுகின்றனர். குடகு வனவளம் நிறைந்தது. நாகரஹொளெ தேசியப் பூங்கா குடகில் உள்ளது.

ஹலேரி அரச வம்சம் : குடகை ஆட்சி புரிந்த ஒரு முக்கியமான அரச வம்சம் ஹலேரியர் ஆவர். இது *17* ஆம் நூற்றாண்டில் **'வீரராஜா'** என்பவரால் நிறுவப்பட்டது. பின்னர் முத்துராஜா, முத்துராஜகேரியை நிறுவி அதைத் தமது தலைநகரமாகக் கொண்டார். முத்துராஜகேரி பிற்காலத்தில் மடிகேரி என்று அழைக்கப்பட்டது.

மடிகேரி கோட்டை

NOT TO BE REPUBLISHED

பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதி ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோரால் ஆளப்பட்டது. அவர்கள் குடகின் அரசரான **வீரராஜாவை** சிறையில் அடைத்தனர். இருப்பினும் அவர் சிறையிலிருந்து தப்பிச் சென்று ஆங்கிலேயரின் உதவியுடன் இழந்த தனது நாட்டை மீட்டெடுத்தார். திப்புவின் மறைவிற்குப் பிறகு குடகு அரசர்களும் ஆங்கிலேயர்களும் நட்புறவுடன் இருந்தனர்.

குடகும் ஆங்கிலேயரும் : வலிமையான படைகளைப் பெற்றிருந்ததால், ஆங்கிலேயர்கள் குடகைக் கைப்பற்றினர். *(1834)*, சிக்க வீர இராஜேந்திரா என்ற அரசரை நாடு கடத்தி

அவர்களே நேரடியாகக் குடகை ஆட்சி புரிந்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் குடகின் ஒரு பகுதியான அமரசுல்லியாவை கனரா மாவட்டத்திடம் கைமாற்றினர்.

அமரசுல்லியா கிளர்ச்சி : அமரசுல்லியாவின் விவசாயிகள், நில வருவாயின் பெருஞ்சுமையை சுமக்க முடியாமல், ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டனர் - குடகிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்ட வேண்டும் என்று உறுதி பூண்டனர். **1837** இல் உருவான கிளர்ச்சி அமரசுல்லியா கிளர்ச்சி என்று அழைக்கப்பட்டது. கிளர்ச்சியாளர்கள் சுல்யா, புத்தூர், காசர்கோட் மற்றும் மங்களூரைப் பதிமூன்று நாட்கள் வரை தன்வயப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியை அடக்குவதில் வெற்றி பெற்றனர் மற்றும் பல கிளர்ச்சியாளர்களைத் தூக்கில் ஏற்றினர். கிளர்ச்சியின் முக்கியத் தலைவர்கள் புட்டபசப்பா, கல்யாண சுவாமி மற்றும் குட்டேமனே அப்பய்யா கௌடா ஆவர்.

குட்டேமனே
அப்பய்யா கௌடா
மடிக்கேரி

NOT TO BE REPUBLISHED ©KTBS

குடகின் இரண்டு சிறந்த கண்மணிகள்: குடகின் சிறப்பை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஃபீல்ட் மார்ஷல் காரியப்பா அவர்கள் முதலிடம் பெறுகிறார். ஆங்கிலேயரின் ஆட்சியின்போது இந்திய இராணுவத்தின் முதல் படைத்தலைவராக அவர் இருந்தார். சுதந்திர இந்தியாவின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் தலைவராகவும் இருந்தார். அவர் நிர்வாக மதிநுட்பம், துணிவு மற்றும் வீரத்திற்குப் பெயர் பெற்றவர். மேலும் ஃபீல்ட் மார்ஷல் என்ற உயர்ந்த பதவியையும் பெற்றவர்.

ஃபீல்ட் மார்ஷல்
கே. எம். காரியப்பா

ஜெனரல் கே.எஸ்.திம்மய்யா

©KTBS NOT TO BE REPUBLISHED

குடகின் மற்றொரு சிறந்த தேசபக்தர் ஜெனரல் (தளபதி) கே.எஸ்.திம்மய்யா ஆவார். இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே நடந்த போரில் இந்தியவிற்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தவர். குடகின் இரண்டு சிறந்த கண்மணிகள் என்ற புகழுக்குரியவர்கள் ஆவர். பொதுவாக குடகு வலிமையான இராணுவ அடையாளங்களால் சிறப்புற்றிருந்தாலும் விளையாட்டு, சாகசம், நாட்டுப்புறக் கதைகள் மற்றும் இயற்கை அழகிற்கும் குடகு புகழ் பெற்றது.

கித்தூர்

கித்தூர், பெளகாவி மாவட்டத்தின் ஒரு சிறிய பகுதியாகும். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, கித்தூர் பிரதேசம் அரசியல் அதிகாரம் மிகுந்ததாகவும், வணிகம், வேளாண்மை மற்றும் நல்ல நிர்வாகதிற்குப் பெயர் பெற்றதாகவும் விளங்கியது.

கித்தூர் இராணி சென்னம்மா

இராணி சென்னம்மா

கித்தூர் இராணி சென்னம்மா, கித்தூரின் இராஜா மல்லசர்ஜா தேசாயியின் இளைய மனைவியாவார். மல்லசர்ஜாவும்

அவருடைய வாரிசுமான அவரது மகனும் இறந்துவிட்டனர். இராணி சென்னம்மா சிவலிங்க சர்ஜாவை மகனாக தத்தெடுத்து கித்தூரை ஆட்சி புரியத் தொடங்கினார். தார்வாட் கலெக்டரான தாகரே இத்தத்தெடுப்பு முறையற்றது என்று எதிர்ப்பு தெரிவித்தார். கித்தூரின் நிர்வாகத்தை ஆங்கிலேய அரசு எடுத்து நடத்த அவர் பரிந்துரைத்தார். இதைக் கேட்டதும் சென்னம்மா மிகவும் கோபமடைந்தார். கித்தூரை ஆட்சியாளும் ஆங்கிலேயர்களின் இக்கொள்கையை எதிர்த்து, தன் நாட்டின் விடுதலைக்காகப் போராட முடிவு செய்தார். 500 படை வீரர்களோடு தாகரே கித்தூரை முற்றுகையிட்டார். ஒரு கடுமையான போர் ஒன்று அங்கு நடந்தது.

சென்னம்மா படையை வழிநடத்தி வீரத்துடன் போர் புரிந்தார். ஆங்கிலேயப் படை சிதறியடிக்கப்பட்டது. தாகரே குண்டடிப்பட்டு போரில் உயிரிழந்தார். ஆங்கிலேயப் படை சிறிது காலத்திற்கு பிறகு கித்தூர் கோட்டையை மீண்டும் முற்றுகையிட்டது. கித்தூர் 6000 சிப்பாய்களை மட்டுமே பெற்றிருந்தாலும், இராணி ஆங்கிலேயர்களை எதிர்த்து மூன்று நாட்கள் போர் புரிந்தார். அதற்கிடையே கித்தூரிலிருந்த சில துரோகிகள் அவருக்கு இரண்டகம் செய்தனர். கித்தூர் தோற்கடிக்கப்பட்டு. சென்னம்மா சிறைபிடிக்கப்பட்டு அவர் பைலஹொங்களில் சிறையில் அடைக்கப்பட்டார். ஐந்து ஆண்டுகள் வரை சிறையில் இருந்தார். சிறையிலிருந்தபடியே அவர் கித்தூர் மக்களுக்கு சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இரகசியமாக வழிகாட்டலையும் ஊக்கத்தையும் அளித்தார்.

‘ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடிய முதல் இந்தியப் பெண்மணி’ என்ற அழியாப் புகழைப் பெற்றவர் இவர். நாட்டுப்புறப் பாடல்களினால் இவ்வீர அரசியை நாம் இன்றும் நினைவு கூறுகிறோம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

சங்கொள்ளி ராயண்ணா : சங்கொள்ளி ராயண்ணா, இராணி சென்னம்மாவின் விசுவாசமான சீடர் ஆவார். துணிச்சலான சுதந்திரப் போராட்ட வீரரான இவர் சாதாரண மக்கள் வரிசையில் இருந்து வந்தவர். சென்னம்மாவின் சிறையிருப்பிறகுப் பிறகு, கித்தூரில் தலைமை வகித்து ஒரு படையையும் ஒருங்கிணைத்தார். ஆங்கிலேயரின் அலுவலகங்களை முற்றுகையிட்டு அவர்களுடைய செல்வங்களைக் கொள்ளையடித்தார். கொரில்லா போரில் திறமை வாய்ந்தவரான இவர் ஆங்கிலேயருக்கு அச்சுறுத்லூட்டும் சிங்கக் கனவாக விளங்கினார். ஆங்லேயர்கள் அவரைத் தோற்கடிக்க முடியாததால் குறுக்கு வழிகளைக் கையாண்டனர். துரோகிகளாக மாறிய சில பேருக்கு இலஞ்சம் கொடுத்தனர். பணத்தாசைக்கு பலியான தேச துரோகிகள் ராயண்ணாவை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தனர். ராயண்ணாவையும் அவருடைய ஆறு கூட்டாளிகளையும் ஆங்கிலேயர்கள் தூக்கிலிட்டனர். தூக்கிலிடப்படுவதற்கு முன்பு கடைசியாகத் தன்னைப் பார்க்க வந்திருந்த தமது தாயார் கென்சவ்வாவின் காலில் ராயண்ணா விழுந்து ஆசி பெற்றார். பின்னர் அவர் சாரக் கட்டுக்கு நடந்து சென்று புன்னகையோடு சாவைக் தழுவினார். அவரது கூட்டாளிகள் அனைவரும் நந்தகடாவில் அடக்கம் செய்யப்பட்டனர். ராயண்ணாவின் சீடர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

சங்கொள்ளி ராயண்ணா

ராயண்ணாவைப் பின்பற்றிய பிச்சுகத்தி சென்னபசப்பா என்பவர் அவருடைய கல்லறையின் மீது ஆலமரக்கன்று ஒன்றை நட்டார். பல வருடக் காலம் வரையிலும் பைராகியாக சென்னபசப்பா அந்த மரத்தடியிலேயே வாழ்ந்தாராம். அந்த ஆலமரம் இன்றும் உள்ளது. ராயண்ணனுக்குப் பிறகு பல இளைஞர்கள் சித்தூரில் கிளர்ச்சியைத் தொடர்ந்தனர் மற்றும் கித்தூர் மக்களுக்கு சுதந்திர ஆசையை ஊட்டினர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

துளுநாடு

பழங்காலத்தில் கருநாடகக் கடலோரப் பகுதியைத் (ஏறக்குறைய தற்போதைய தென் கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டங்கள்) துளுநாடு என்று அழைத்தார்கள். புராணங்களில் மேற்கு கடலோரப் பகுதிகள் பரசுராம க்ஷேத்ரா என்றழைப்பட்டது. துளுநாட்டில் பெரும்பாலோர் துளு மொழியைப் பேசுகின்றனர். இன்னும் பலர் கன்னடம், கொங்கணி மற்றும் பியாரி மொழிகளைப் பேசுகின்றனர்.

வரலாற்று காலத்தில் துளுநாட்டை கதம்ப, அளுப்ப, ஹொய்சள, விஜயநகர மற்றும் இன்ன பிற சிறிய ஆள்குடிகள் ஆட்சி புரித்தனர். அளுப்பர்கள் வெகுகாலம் ஆட்சி புரிந்தனர். உதயவரா (உதயபுரா), மங்களூரு (மங்களபுரா), பரகூரு மற்றும் இதர இடங்கள் துளுநாட்டின் தலைநகரங்களாக இருந்தன.

சௌட்டா அரச குடும்பத்தைச் சார்ந்த அப்பக்கா இராணி (16ஆம் நூற்றாண்டு) போர்ச்சுகீசியர்களை எதிர்த்து போராடி அவர்களைத் தோற்கடித்தார்.

சமயங்கள் : துளுநாட்டு அரசர்களில் பெரும்பாலோர் சமணர்கள். இங்கு பௌத்தம், இந்து, வீரசைவம், நாத பன்த, இஸ்லாம் மற்றும் கிறித்துவ சமயங்களைப் பின்பற்றியவர்களும் வாழ்ந்துள்ளனர். துளுநாட்டின் இரண்டு பிரபலமான வழிபாட்டு முறைகள் நாகா மற்றும் பூதா வழிபாடுகள் ஆகும்.

நாகமண்டலா என்பது ஒரு விரிவான நாகாராதனை சடங்காகும். நாகம் மற்றும் பூத, கோலா மற்றும் நேமா என வழிபடப் படுகிறது.

- துவைத்த தத்துவப் பிரிவை நிறுவிய மத்வாச்சாரியார் துளுநாட்டைச் சேர்த்தவர். மங்களூரில் காத்ரி என்னும் இடத்தில் உள்ள ஸ்ரீ மஞ்சுநாதா கோயில் துளுநாட்டின் பழங்கால கோயிலாகும்.
- கல்வி நிறுவனங்களை நிறுவுவுதன் மூலம், கல்வித் துறைக்கு கிறித்துவர்கள் தமது பங்களிப்பை அளித்துள்ளனர். மங்களூரில் அச்சகம் ஒன்றை நிறுவியவர்களும் இவர்களே. ஃபர்தினந்த் கித்தல் அவர்கள் இயற்றிய கன்னட அகராதி, மங்களூரில் உள்ள பேசல் மிஷன் அச்சகத்தில் அச்சடிக்கப் பட்டதாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

- ஜெர்மனியிலிருந்து வந்த மென்னர் என்பவர் துளு அகராதியை இயற்றினார். துளுநாட்டில் முதன் முதலில் தங்கள் சமயத்தைப் பரப்பியவர்கள் அயல்நாட்டு சமயப்பரப்பாளர்களாவர். பின்னர் அவர்களது பணியை மற்ற இந்திய சமயப்பரப்பாளர்கள் தொடர்ந்தனர். துளுநாட்டில் பல குறிப்பிடத்தக்க ஆலயங்கள் உள்ளன.
- பழங்காலத்திலிருந்தே துளுநாடு ஆரேபியாவுடன் வணிகத் தொடர்புகளைப் பெற்றிருந்தது. அதன் விளைவாக இஸ்லாமிய சமயம் இங்கு பரவத் தொடங்கியது.இஸ்லாமியர்கள் இங்கு பல மசூதிகளைக் கட்டியுள்ளனர்.

கட்டடக் கலையும் சிற்பக் கலையும்: கத்ரி மஞ்சுநாதா தேவாலயத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 'அவலோகிதேஷ்வரா' வெண்கல சிற்பம் உள்ளது. மூடபிதிரியின் ஆயிரம் தூண் பசதி, கார்கலாவிலுள்ள பிரம்மாண்ட கோமடேஷ்வரா சிலை, வேணூர் மற்றும் தர்மஸ்தளா சமண கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது. துளுநாட்டின் புகழ் பெற்ற தெய்வங்களான கோடி சன்னய்யாவின் ஆலயங்கள் கரோடிகள் என்று அழைக்கப்படுகின்றன.

அவலோகிதேஷ்வரா, மங்களூரு

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆயிரம் தூண் பசதி, முடபிதிரி

நாட்டுப்புறவியல் : கம்புளா (கம்பளா) சேவல் சண்டை, சென்னே முதலியவை துளுநாட்டின் சில நாட்டுப்புற விளையாட்டுகளாகும். **யக்ஷகானா மற்றும் தாளமத்தளே** இங்குள்ள சிறந்த பழமையான நாட்டியக்கலைகள் ஆகும்.

ஆங்லேயர் ஆட்சி : கடலோரப் பகுதிகளில் ஆங்கிலேயரின் ஆட்சி 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே ஆரம்பமானது. கடலோரப் பகுதி அப்பொழுது கனரா மாவட்டம் என்றழைக்கப்பட்டது. பிற்காலத்தில் அது வட கனரா (வடப் பகுதி) மற்றும் தென் கனரா (தென் பகுதி) என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

யக்ஷகானா கலைஞர்

சுதந்திரப் போராட்டம் : மகாத்மா காந்தியால் எழுச்சிபெற்ற துளுநாட்டு மக்கள் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு பெற்றனர். சுதந்திரப் போராட்ட வீரர்களில் முதன்மை வகிப்பது கர்னாட் சதாசிவ ராவ் மற்றும் அத்தாவரா எல்லப்பா.

- ‘தேஷபக்தா’ என்று புகழ்பெற்ற கர்னாட் சதாசிவ ராவ் அவர்கள், அரிஜனங்களுக்காக மறக்க முடியாத சேவையை ஆற்றியவர். அவர் தனது வீட்டில் அரிஜன குழந்தைகளுக்கு

© KTBS NOT TO BE REPUBLISHED

உணவு கொடுத்தார். தன்னுடைய தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்தவராவர்.

- இந்தவார எல்லப்பா நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் நிறுவிய ஆசாத் ஹிந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்தனர். நேதாஜியவரின் ஆசாத் ஹிந்த ஃபௌஜ்ஜில் பதினைந்து வருடங்கள் வரை படைத்தலைவராக இருந்தார்.
- அரிஜனரின் மேம்பாட்டிற்காக குத்முல் ரங்காராவ் ஒரு சமூக சீர்த்திருத்த இயக்கத்தை வழிநடத்தினார். அவர் அரிஜன பெண் குழந்தைக் கல்விக்காகவும் தீண்டாமையை ஒழிப்பதற்காவும் தீவிரமாக பணி புரிந்தார். மங்களூரில் இவருடைய சமூகநல நடவடிக்கைகளைக் கண்டு காந்தியடிகள் அவரைப் பாராட்டினார்.

கர்நாட் சதாசிவ ராவ்

அத்தவார எல்லப்பா


குத்முல் ரங்கா ராவ்

NOT TO BE REPUBLISHED

வங்கித் துறையில் துளுநாட்டின் சாதனை குறிப்பிடத்தக்கது. கனரா, கார்பரேஷன், சிண்டிகேட், கர்நாடகா மற்றும் விஜயா வங்கிகள் சுதந்திரம் அடைவதற்கு முன்பே நிறுவப்பட்டவை. தேசத்தில் எத்திசையிலும் பரவியிருக்கும் ஆயிரக்கணக்கான வங்கிக் கிளைகள், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ளன. அவை ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளன.

1956 இல், வட மற்றும் தென் கனரா மாவட்டங்கள் கருநாடக மாநிலத்துடன் இணைக்கப்பட்டன (இதற்கு முன்பு தென் கனரா,

மெட்ராஸ் தலைமையின் கீழ் இருந்தது.) தென் கனாரா மாவட்டம் பிரித்தெடுக்கப்பட்டு உடுப்பி மாவட்டம் ஆனது (பொ.ச. 1997).

ஹைதராபாத் - கருநாடகம்

பேடநாயக்கரின் கிளர்ச்சிகள்: விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, பேடநாயக்க பாளையக்காரர்கள் ஹைதராபாத் - கருநாடகத்தின் (தற்போதைய கல்யாண கருநாடகம்) மீது ஆதிக்கம் செலுத்தினார். அவர்கள் துணிச்சலான போர் வீரர்கள். பொ.ச. 1800க்கு பிறகு ஆங்கிலேயரைப் பலமுறை எதிர்த்துள்ளனர்.

காரணங்கள் :

உள்ளூர் ஜமீன்தார்களின் சுரண்டல். ஆங்கிலேயரின் அடக்குமுறை, ஆயுதச் சட்டம் மற்றும் வனச்சட்டத்தின் நிறைவேற்றம், முதலிய ஆங்கிலேயரின் அடக்கு முறை செயல்பாடுகளால் கோபமடைந்த உள்ளூர் அரசர்கள், பாளையக்காரர்கள் மற்றும் பொது மக்கள் அவர்களை எதிர்த்தனர். பொ.ச. 1800 க்குப் பிறகு இருபத்தைந்திற்கும் அதிகமான கிளர்ச்சிகள் நடைபெற்றன. பெரும்பாலான கிளர்ச்சிகளில் பாளையக்காரர்கள் பெரும் பங்கு வகித்தனர். ஆங்கிலேயரைத் துரத்துவதே கிளர்ச்சிகளின் நோக்கமாக இருந்தது.

ஹலகலி பேதநாயக்கர்களின் கிளர்ச்சி:

பாகல்கோட் மாவட்டத்தின் முதோளா தாலுக்காவிலுள்ள ஒரு கிராமம் ஹலகலி. இன்றளவும் மல்யுத்த வீரர்களினால் நன்கு அறியப்படுகிறது மற்றும் சுதந்திரப் போராட்டத்தின் இயக்கத்தின் போதும் புகழ் பெற்றது. ஹலகலியில் பெரும்பாலான கிராமவாசிகள் பேதநாயக்கர்களாவர் மற்றும் வேட்டையாடுவதற்காகவும். தற்காப்பிற்கும் அவர்கள் ஆயுதங்களை வைத்திருந்தனர்.

ஆங்கிலேயரால் பொ.ச. 1857 இல் நிறைவேற்றப்பட்ட ஆயுதச் சட்டத்தின்படி அரசாங்கத்திடம் அனுமதி பெற்றிருந்தால் மட்டுமே இந்தியர்கள் ஆயுதங்களை வைத்திருக்க முடியும் என்ற நிபந்தனை இருந்தது. தைரியமும், சுய மரியாதையும் கொண்டிருந்த பேதநாயக்கர்களால் இந்த நிபந்தனையை ஒரு

NOT TO BE REPUBLISHED ©KTBS

போதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆங்கிலேயர்கள் கட்டாயப்படுத்தி இந்த நிபந்தனையை அவர்களின் மீது திணித்தனர். ஆங்கிலேயர்களை எதிர்த்து துணிச்சலாக போர் புரித்தவர்கள் ஜடகதர்கள், பாலர்கள், ராமி மற்றும் இதர தலைவர்களாவர். இக்கிளர்ச்சியில் பலர் உயிரிழந்தனர், 290 பேர் சிறைப்படுத்தப்பட்டனர் மற்றும் 19 பேர் தூக்கிலிடப்பட்டனர். இக்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டாலும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றில் இது அழியா இடத்தைப் பிடித்துள்ளது.

ராமி : ராமி என்பவர் இக்கிளர்ச்சியில் பங்குபெற்ற துணிவுள்ள பேதநாயக பெண்மணியாவார். மூன்று ஆங்கிலேய சிப்பாய்களைச் சுட்டுக் கொன்ற தியாகியுமாவார். இக்கிளர்ச்சியில் ராமி வீரமரணம் எய்தினார்.

ஹலகலி கிளர்ச்சியின் மீது பாடப்பட்ட ஒரு
நாட்டுப்பாடல் இவ்வாறு தொடங்குகிறது

ಹಲಗಲಿಯ ಬೇಡರು ಹುಲಿಗಿಂತ ಶೂರರು
ಚಲಿಸದೆ ನಿಂತು ಹೋರಾಡಿ ಮಡಿದವರು
ಕುಲಹಿರಿಮೆ ಮೆರೆಸಿ ಹೋಗ್ಯಾರ ॥

ஹலகலியின் பேடர்கள் புலியை விட வலிமையானவர்கள், பின்வாங்கிச் செல்லாமல் போராடி இறந்தவர்கள், அக்குலத்திற்குப் புகழை சேர்த்து சென்றுள்ளனர்.

சிந்தூர லக்ஷ்மணா :

ஆங்கிலேயரை எதிர்த்து போராடிய ஒரு குறிப்பிடத்தக்க தலைவர் சிந்தூர லக்ஷ்மணா.

லக்ஷ்மணா சாங்க்லி மாவட்டம், ஜத் தாலூக்காவிலுள்ள சிந்தூரா கிராமத்தில் லக்ஷ்மணா பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் பேதர சாபு மற்றும் நரசவ்வா. இவருடைய கல்லறை பீளகியில் உள்ளது.

சிந்தூரா கிராமம், இனாம்தார் (கௌடர்) என்னும் உள்ளூர் வாசிகளின் ஆட்சியின் கீழ் இருந்து தத்தளித்தது. லக்ஷ்மணா அவர்களுக்கு வெளிப்படையாக சவால் விடுத்தார். சடுதியில் அவர் ஆங்கிலேயரின் எதிரியாகி விட்டார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

லக்ஷ்மணா பணக்காரர்களிடமிருந்தும், ஆங்கிலேயர்களின் கருவூலத்திலிருந்தும் பணத்தைக் கொள்ளையடித்து ஏழைகளுக்குக் கொடுத்தார். ஒடுக்கப்பட்டவர்களுக்கும் உதவி செய்து வந்தார். இதற்கிடையில் கிராம சபை, லக்ஷ்மணாவைத் திருடன் என்று குற்றம் சாட்டி, திருட்டைப் பற்றி விசாரித்த போது லக்ஷ்மணனுக்கு அவமானம் ஏற்பட்டது. அவர் அங்கிருத்து தப்பியோடினார். ஒரு போலீஸ் அதிகாரியை அவர் கொன்றதால் ஆங்கிலேயர்கள் அவரைப் பிடிக்க முயன்றனர். அதன்பிறகு அவர் சுட்டுக் கொல்லப் பட்டார். சுதந்திரத்திற்குப் போராடிய புரட்சியாளரான சிந்தூர லஷ்மணா, வரலாற்றின் பக்கங்களில் இன்றும் நிலைத்திருக்கிறார்.

சுரபுரத்தின் நாயக்கர்

யாதகிரி மாவட்டத்தின் சுரபுரம் கிருஷ்ணா மற்றும் பீமா நதிகளுக்கு நடுவில் உள்ளது. பொ.ச. 1636 லிருந்து பொ.ச. 1858வரை பன்னிரெண்டு நாயக்க அரசர்கள் ஆட்சி புரிந்தார்கள். கட்டிபிட்ட நாயக்கர் இந்த வம்சத்தைத் தோற்றுவித்தவர் ஆவார். இவருடைய முன்னோர்கள் விஜயநகர படையில் இருந்தார்கள். விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு வெவ்வேறு இடங்களுக்கு சிதறிய கூட்டங்களில் இவர்களும் ஒருவர். பிறகு பிஜாபுரத்தின் ஆதில் ஷாஹிகளின் கீழ் கப்பம் கட்டும் சிற்றரசர்களாக வாகினகேரியில் ஆட்சியைத் தொடங்கினர். பீதாம்பரி பஹரிபிட்ட நாயகா (பொ.ச. 1687-1726) பொ.ச. 1707இல் சுரபுராவை தோற்றுவித்ததன் மூலம் அதை தலைநகரமாகக் கொண்டார்.



சுரபுரத்தின் நாயக்கர்
வேங்கடப்ப நாயக்கர்

பிறகு ஆங்கிலேயர் மற்றும் ஹைதராபாத் நிஜாமின் ஒப்பந்தத்தின் பேரில் இவருடைய சமஸ்தானம் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ராஜா கிருஷ்ணப்ப நாயக்கருக்குப்

© KTBS NOT TO BE REPUBLISHED

பிறகு அவருடைய மகனான ராஜா நால்வடி வெங்கடப்ப நாயக்கர் (பொ.ச. 1843-1858) அதிகாரத்திற்கு வந்தார். அதே சமயத்தில் வட இந்தியாவில் முதல் சுதந்திரப் போராட்டத்தின் (பொ.ச. 1857) தாக்கம் சுரபுராவில் ஏற்பட்டது. நான்காம் வெங்கடப்ப நாயக்கர் தென்னிந்திய அரசர்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயருக்கு எதிராக போர் புரியத் திட்டமிட்டார். அரப், ரோஹில்லர்களை தனது படையில் சேர்த்துக்கொண்டார். அதுமட்டுமல்லாமல் படை வீரர்களுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கினார். இவ்வெல்லா நிகழ்வுகளையும் கவனித்து வந்த ஆங்கிலேய அதிகாரி தார்ன் ஹில், 24 டிசம்பர் 1857இல் கேப்டன் கேம்பலிற்கு கடிதம் எழுதி துரித நடவடிக்கை எடுக்க கட்டளையிட்டார்.

ஆங்கிலேயரின் படை 1858 இல் சுரபுரத்தைத் தாக்கியது. இரண்டு படைகளுக்கும் நடுவில் குண்டுகள் பாய்ந்தன. வீராவேசம் கொண்ட சுரபுராப் படை ஸ்டூஆர்டின் எலும்பை முறித்தது. நியூபெரி நிலத்தில் சரிந்தார். இங்கு, நான்காம் வெங்கடப்பா நாயக்கர் சிறந்த அராப், ரோஹில் படையை கொண்டுவர ஹைதராபாத்திற்கு பயணம் மேற்கொண்டார். அப்போது ஆங்கிலேயப் படை சுரபுரத்திற்குள் நுழைந்தது. சுரபுரம் தோல்வியைத் தழுவியது. ஹைதராபாதில் சுற்றித்திரிந்த நான்காம் வெங்கடப்ப நாயக்கரைக் கண்ட வனபர்தி, அரசரிடமிருந்து செய்தி அறிந்து ஹைதராபாத்தின் முக்கிய மந்திரி நிஜாம் சாலர்ஜங், ஆங்கிலேயர்களிடமிருந்து தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்கும் என்று விழைந்து அவரை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தான். ஆங்கிலேயர்கள் நால்வடி வெங்கடப்ப நாயக்கரை சிகந்திராபாதில் கைது செய்தனர். பிறகு விசாரணைக்கு உட்படுத்தினர். மரண தண்டனையை விதித்தது போல நாடகம் ஆடினர்.

ஆங்கிலேய மெடோஸ் டேலரின் கோரிக்கையின்படி பேரதிகாரம் உள்ள கவர்னர் ஜெனரல் அரசனின் மரண தண்டனையைக் கைவிட்டு நான்கு வருடம் சாகும்வரை நாடு கடத்தப்பட தண்டனை விதித்தார். அரசனை மதராஸ் அருகிலுள்ள செங்கல்பட்டின் மலைஅவரை இட அழைத்துக்கொண்டு போகும் போது, வழியில் ஓய்வெடுக்க தங்கியபோது நால்வடி வெங்கடப்ப

©KTBS NOT TO BE REPUBLISHED

நாயக்கரை ஆங்கிலேயர் வஞ்சகமாக சுட்டுக் கொன்றார்கள். தற்கொலை செய்துகொண்டார் என்ற பொய் செய்தியையும் பரப்பினார்கள்.

பிறகு சுரபுரத்தை ஆங்கிலேயர் ஹைதராபாத் நிஜாமிற்கு காணிக்கையாக கொடுத்தனர். அடுத்து வந்த சுரபுர வம்சத்து அரசர்கள் நிஜாமின் ஆதிக்கத்தின் கீழ் காலம் கழித்தார்கள். கடைசியில் **1948** செப்டெம்பர் **17** அன்று ஹைதராபாத் நிஜாம், இந்திய கூட்டமைப்பில் நாடு இணைக்கப்பட்ட பிறகு சுரபுராவும் இந்திய கூட்டமைபைச் சேர்ந்தது.

சுரபுர நாயக்கர்களின் அரசியல் வரலாற்றைப் போலவே கலாச்சாரத் துறைக்கும் அவர்கள் தமது பங்களிப்பை அளித்துள்ளனர். மக்கள் நலத் திட்டங்களை அமைத்து செயல்படுத்தி இன்றைக்கும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிந்துள்ளனர். குளம், கிணறு, கோயில்,அரண்மனை மற்றும் கோட்டைகளைக் கட்டுவித்தனர். பலருக்கு இலவசமாக நிலங்களைக் கொடுத்தார்கள். அது மட்டுமல்லாமல் இவர்களின் குலதெய்வமான திருப்பதி வெங்கடரமணா மற்றும் கோபாலசாமி கோயில்களின் தினசரி பூஜைக்கும் உற்சவங்களுக்கும் இலவசமாக நிலங்களை வழங்கியுள்ளனர். இவர்களின் அரசவையில் பல கலைவல்லுனர்கள், பாடகர்கள், ஓவியர்கள், சிற்பிகள், இலக்கியவாதிகள் அடைக்கலம் அடைந்திருந்தார்கள். இக்காலத்தில் பல சிறந்த இலக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன. எல்லா மதத்தின் மீது மதிப்புக் கொண்டிருந்தனர்.

ஓவியக்கலையில் சுரபுர நாயக்க அரச குடும்பத்தினருக்கு முதலிடமிருந்தது. அங்குள்ள ஓவியங்களின் நுட்பம் மற்றும் வடிவமைப்பு உயர்நிலையைப் பெற்றுள்ளன. மைசூரின் சம்பிரதாய ஓவியங்கள், விஜயநகர பாணியின் சித்திரங்கள்,பிஜாபூரின் ஆதில் ஷாஹி வம்சத்திலிருந்து வந்த கலைப்படைப்புகளைவிட சுரபுர அரசர்களின் கலைப் படைப்புகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

லண்டனின் கலை அருங்காட்சியகம், இங்கிலாந்தின் பல நகரங்களில், தில்லி, மும்பை, ஹைதராபாதின் பண்டைக்கால பொருள் அருங்காட்சியகம் மற்றும் சாலர்ஜங் பொருட்காட்சியகங்களில் இவர்களின் கலைப் பொருட்களைக் காணலாம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஹைதராபாத்- கருநாடகத்தின் விடுதலைக்கான போராட்டம்.

ஹைதராபாத் - கருநாடக விடுதலை போராட்டம் அடக்கு முறை ஆட்சியாளர் ஒருவருக்கு எதிராக மக்கள் ஒன்றுபட்ட பெருமைமிக்க வரலாற்றின் ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும் மகத்தான தியாகபலிகளுக்கு அழியாச் சான்றாக உள்ளது.

1947க்கு முன்பு, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் 562 பெரிய மற்றும் சிறிய தேசங்கள் (சமஸ்தானங்கள்) இருந்தன. இத்தேசங்களில் பெரியது ஹைதராபாத்.

போராட்டத்தின் பின்புலம்: ஹைதராபாத் மாநிலத்தில் இந்துக்களின் நிலைமை மிகப் பரிதாபமாக இருந்தது. அவர்கள் தம்முடைய பண்டிகைகளை வெளிப்படையாகக் கொண்டாட முடியவில்லை.

மாநிலத்தில் கல்வி புறக்கணிக்கப்பட்டது, உருது மொழியின் ஆதிக்கம் அதிகமானது. கன்னட மொழிக்கும் இலக்கியத்திற்கும் பேரடி கிடைத்தது. களகாப்தி என்ற 53 விதிகளை நிஜாம் கொண்டு வந்தார். இதனால் மக்களின் அடிப்படை சுதந்திரம் பறிக்கப்பட்டது.

போராட்டத்தின் நிலைமை : ஹைதராபாதில் சுதந்திரப் போராட்ட வீரர்களில் புகழ் பெற்றவர் சுவாமி ரமானந்த தீர்த்தா அவர்கள். அமைதியான சத்தியாகிரகத்தை ஏற்பாடு செய்து ஐதராபாத் மாநிலம் முழுவதும் பயணம் செய்தார். இன்னொரு புகழ்பெற்ற தலைவர் ஹரித்கர் மஞ்சப்பா அவர் கருநாடகத்தின் காந்தி என்று பிரபலமாக அறியப்பட்டவர். அவர் காதி, தீண்டாமையின் ஒழிப்பு மற்றும் அகற்றம் போன்ற ஆக்கப்பூர்வமான திட்டங்களை மேற்கொண்டு அதைப் பிரபலப்படுத்தினார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

சுவாமி ரமானந்த தீர்த்தா



ஹரிக்கர் மஞ்சப்பா

வந்தே மாதரம் இயக்கம்: இதற்கிடையில் வந்தே மாதரம் பாடுவதை அரசு தடை செய்தது. ராமசந்திர ராவ் என்ற ஒரு வீரத் தலைவர், இத்தடைக்கு எதிரான போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார். இவர் 'வந்தே மாதரம் இராமசந்திர ராவ்' என்றே புகழ்பெற்றவர். 'வந்தே மாதரம்' பாடிய பல நூற்றுக் கணக்கான மக்களை சிறையில் அடைத்தார்கள்.

ஹைதராபாத் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது. ஹைராபாத்தை இந்திய யூனியனுடன் இணைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கோரியது. 1947, ஆகஸ்ட் 15 அன்று சுதந்திர இந்தியாவின் கொடியை ஹைதராபாதில் பறக்கவிட்டே தீரவேண்டுமென மக்கள் முடிவு செய்தனர். நிஜாம் அரசாங்கம் மக்களின் மீது அதிகமான கட்டுப்பாடுகளை விதித்தது.

அதே நேரத்தில், ரஜாக்கர்கள் மாநிலத்தில் கொள்ளையடிக்கவும் கொலை செய்யவும் தொடங்கினர். நிஜாமின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. மாநிலத்தின் எத்திசையிலும் வந்தே மாதரம் என்ற முழக்கம் எங்கும் கேட்கத் தொடங்கியது.

NOT TO BE REPUBLISHED @KTBS

சரண கௌடா இனாம்தார் : இளம் தலைவரான சரணகௌடா இனாம்தார் அவர்கள் ஹைதராபாத் விடுதலைப்போரில் இளைஞர்களை ஒருங்கிணைத்து இரகசியமான செயல்பாடுகளை மேற்கொண்டார். ரஜாக்கர்களின் மீது மின்னல் வேகத்தில் தாக்குதல்களை நடத்தினார். இதன் விளைவாக, பல கிராமங்கள் ரஜாக்கர்களின் கொடுமைகளிலிருந்து விடுவிக்கப் பட்டன. மிகுந்த மரியாதையுடன் மக்கள் சரணகவுடரை ‘சர்தார்’ என்றழைத்தார்கள்.

சரண கௌடா இனாம்தார்

ரஜாக்கர்களின்அட்டூழியங்களின் காரணமாக பல இலட்ச மக்கள் ஹைதரபாதை விட்டு அருகிலுள்ள சுதந்திர இந்தியாவிற்கு இடம் பெயர்ந்தனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள், ஹைதராபாத் மாநிலத்தின் எல்லைகளில் முகாம்களை அமைத்து ரஜாக்கர்களுக்கு எதிராக வலிமையோடு போராடினர்.

சர்தார் வல்லபாய் படேல்

பொ.ச. 1947 இல் இந்தியா சுதந்திரம் அடைத்த பிறகும், ஹைதராபாத் இந்தியாவுடன் இணையவில்லை. ரஜாக்கர்களின் தீவிரவாதச் செயல்கள் தொடர்ந்து நடந்துக் கொண்டே இருந்தன. இறுதியாக இந்திய அரசு, ஹைதராபாத் பிரச்சனையைத் தீர்க்க மத்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலுக்கு அதிகாரம் கொடுதத்து. உள்துறை அமைச்சரின் உத்தரவின்படி, இந்திய இராணுவப் பிரிவுகள் செப்டம்பர் 17,1948 அன்று ஹைதராபாதில் நுழைந்தன. நிஜாம் வேறு வழியின்றி ச ரணடைந்தார். உடனே ஹைதராபாத் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது.

@TNTBS NOT TO BE REPUBLISHED

பொ.ச. 1951இல் ஹைதராபாத் மாகாணத்தில் மக்களவைத் தேர்தல் நடந்தது. மக்கள் தமது பிரதிநிதிகளை முதல்முறையாக தேர்ந்தெடுத்து அனுப்பினர். முன்னணி மக்கள் தலைவார இருந்த சுவாமி ராமனந்த தீர்த்தர் கலபுரகி தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காலவரிசை (பொ.ச) :

சிக்க தேவ ராஜ உடையார்	-	1673 - 1704
பெங்களூரு குத்தகைக்கு எடுக்கப்பட்டது	-	1689
தலவாயின் ஆட்சி	-	1704 - 1761
ஹைதர் அலி	-	1761 - 1782
முதலாம் மைசூர் போர்	-	1767 - 1769
இரண்டாம் மைசூர் போர்	-	1780 - 1784
திப்பு சுல்தான்	-	1782 - 1799
மூன்றாம் மைசூர் போர்	-	1790 - 1792
நான்காம் மைசூர் போர்	-	1799
கெளதி நாட்டின் ஆட்சிக் காலம்	-	1499 - 1763
மூத்த வேங்கடப்பா நாயக்கர்	-	1586 - 1629
சிவப்ப நாயக்கர்	-	1645 - 1660
இராணி சென்னம்மாஜி	-	1672 - 1697
ஹைதர் அலியினால் கெளதியின் இணைப்பு	-	1763
ஐந்தாம் மதகரி நாயக்கர்	-	1754 - 1779
முதலாம் கெம்பே கெளடா	-	1510 - 1570
இரண்டாம் கெம்பே கெளடா	-	1585 - 1633
கித்தூர் சென்னம்மா	-	1824
சங்கொள்ளி ராயண்ணா	-	1829
அலுப்பர்களின் ஆட்சிக்காலம்	-	7 - 14 ஆம் நூற்றாண்டு

@KTBS NOT TO BE REPUBLISHED

துளுநாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சி	-	*1801 - 1947*
ஹலகலி பேதநாயக்கரின் மீது ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு ராமியின் கிளர்ச்சி	-	*1857*
சுரபுர நாயக்கரின் ஆட்சிக் காலம்	-	*1636-1858*
பீதாம்பரி பஹரிபிட்ட நாயக்கர்	-	*1687-1726*
நான்காம் வெங்கடப்ப நாயக்கர்	-	*1843-1858*
சுரபுராவின் வீழ்ச்சி	-	பிப்ரவரி *9, 1858*
சுரபுரா நாடு இந்திய கூட்டமைப்பில் இணைந்தது	-	செப்டெம்பர் *17,1948*
சிந்தூர லக்ஷ்மணனை ஆங்கிலேயர் சுட்டுக் கொன்றது	-	ஜூலை *22, 1922*
ஹைதராபாத் நிஜாமின் சரணடைவு மற்றும் ஹைதராபாத் மாநிலத்துடன் இந்திய யூனியனின் இணைப்பு	-	செப்டம்பரர் *17 , 1948*

@KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள் :

1) கந்த பேருந்தா - இரண்டு தலைகளுள்ள கற்பனைப் பறவை.
2) மாண்டலிகா - ஒரு பிரதேசத்தை ஆள்பவர்
3) வரஹா - வராஹா (தொன்மப் பன்றி) முத்திரை பொதிந்த பொற் காசு
4) சீமெ - நாடு.
5) கரோடி - ஆராதனை மையம்.

அறிந்துக் கொள்க :

1. 'அன்செ' என்ற சொல் அன்னப் பறவை (அஞ்செ) என்ற சொல்லிலிருந்து வந்தது. இப்பறவை நளன் மற்றும் தமயந்தியினிடையே கடிதங்களைப் பரிமாரிக் கொள்ள உதவியது.
2. இரண்டாம் கெம்பேகௌடா அவர்களால் அமைக்கப்பட்ட நான்கு காவல் கோபுரங்கள்-வடக்கே-மேக்ரி வட்டத்தில், தெற்கே- லால்பாக்கில், கிழக்கே - ஹலசூரில் மற்றும் மேற்கே- கவி கங்காதரேஷ்வராவில் உள்ளது.

பயிற்சிகள்

I. விடுபட்ட இடங்களை நிரப்புக:

1. குடகை ஆண்ட முக்கிய அரச வம்சம் ....
2. சென்னம்மாவின் விசுவாசமான சீடர் ....
3. துளு நாட்டில் நீண்டகாலமாக ஆட்சி புரிந்த வம்சம் ....
4. உல்லாள அரசி ....
5. கன்னடத்தில் முதல் அகராதியை இயற்றியவர் ....
6. ஆயிரம் தூண் பசதி என்று புகழ்பெற்ற நகரம் ....
7. சுரபுர நாட்டை நிறுவியவர் ....
8. ஹலகலி கிளர்ச்சியில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய வீரப் பெண்மணி ....
9. கருநாடகத்தின் காந்தி என்ற புகழுக்குரியவர் ....
10. வந்தே மாதரம் போராட்டத்தின் வீர நாயகன் ....

II. குழுவில் கலந்துரையாடி விடையளிக்கவும்.

11. சிக்க தேவராஜாவின் மக்கள் சார்பு சீர்த்திருத்தங்கள் யாவை?

@KTBS NOT TO BE REPUBLISHED

12. மூன்றாம் மைசூர் போரின் விளைவுகள் யாவை?

13. மூத்த வேங்கடப்ப நாயக்கரின் சாதனைகள் யாவை?

14. சிஸ்து என்றால் என்ன?

15. கௌதி நாயக்கர்களின் முக்கியமான சாதனைகளைப் பற்றிய ஒரு சிறுகுறிப்பு எழுதுக.

16. மதகரி நாயக்கரைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

17. ஔகே ஔபவ்வாவை நாம் ஏன் இன்றும் நினைக்கிறோம்?

18. முதலாம் கெம்பேகௌண்டரின் முக்கியமான சாதனைகள் யாவை?

19. இரண்டாம் கெம்பேகௌண்டரைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

20. அமரசுல்லியா கிளர்ச்சி ஏன் நடந்தது?

21. கித்தூர் ராணி சென்னம்மா ஆங்கிலேயருடன் ஏன் போராடினார்?

22. கர்னாட் சதாசிவராவை நாம் ஏன் இன்றும் நினைவு கூறுகிறோம்?

23. தலித் மக்களின் எழுச்சிக்காக குத்மல் ரங்கா ராவ் அவர்கள் மேற்கொண்ட சமூகப் பணிகள் யாவை?

24. பேதநாயக்கர்களின் கிளர்ச்சிக்கான காராணம் யாது?

25. சிந்தூர லக்ஷ்மணா யார்?

26. நான்காம் வெங்கடப்ப நாயக்கரின் சாதனை குறித்து தங்கள் கருத்தை எழுதவும்.

27. சுவாமி ரமானந்த தீர்த்தா யார்?

28. ஹைதராபாத் விடுதலைப் போராட்டத்தில் சரண கௌடா இனாம்தாரின் பங்கு யாது ?

@KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடுகள் :

- மைசூர் மாநிலத்தின் வரலாற்று புகழ்மிக்க இடங்களை நிலவரைப்படத்தில் குறிப்பிடுக.
- திப்பு சுல்தான் இந்தியாவில் அயல்நாட்டு ஆட்சி யை முடிவுக்குக் கொண்டுவர முயன்றார். ஆயினும் அவரால் ஏன் வெற்றி பெற முடியவில்லை? கலந்துரையாடி விடை எழுதுக.
- பெங்களூரின் நாட பிரபுக்கள் பெங்களூரிலும் அதைச் சுற்றிலும் பல ஏரிகளை அமைத்தனர். ஆனால் இன்று பல ஏரிகள் மாயமாகி விட்டன? இதற்கான விளைவுகளைக் கலந்தாலோசி த்து எழுதுக. அரசாங்கத்திற்கு அனுப்புவதற்கு ஒரு பொருத்தமான அறிக்கையுடன் கூடிய பரிந்துரைகளைத் தயாரிக்க
- ஃபீல்ட் மார்ஷல் காரியப்பா மற்றும் ஜெனரல் திம்மைய்யா அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க.
- கித்தூர் சென்னம்மாவைப் பற்றி நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்க.
- குத்மல் ரங்கா ராவ் மற்றும் கர்னாட் சதாசிவ ராவ் அவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்க.
- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில், கருநாடகத்தின் கடலோர மாவட்டங்களின் பங்கினைப் பற்றி குறிப்பிடுக. கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கமைத்து ஓர் அறிக்கையையும் தயாரிக்க.
- பேடநாயக்கரின் கிளர்ச்சிகளுக்குத் தொடர்பான நாட்டுக்கதைகளையும் பாடல்களையும் சேகரிக்க.
- இந்திய ஒருமைப்பாட்டில் சர்தார் வல்லாபாய் படேலின் பங்கைப் பற்றிய கருத்தரங்கை ஒழுங்கமைத்து, ஓர் அறிக்கையையும் தயாரிக்கவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 8

பக்தி மார்க்கம் மற்றும் சூஃபி பாரம்பரியம்

(Bhakthi Cult and Sufi Heritage)

D1L4Z1

பாட அறிமுகம்:

தென் மற்றும் வடஇந்தியாவின் ஆழ்வார்கள், அடியார்கள் (தாசர்) மற்றும் வட இந்தியாவின் முனிவர்கள், சூஃபிகள் பக்தி மார்க்கத்தின் மூலமாக சமுதாயத்திற்கு விழிப்பூட்டினர். இந்தப் பாடத்தில் பக்தி மார்க்கத்தின் கொள்கை, பொருள் மற்றும் தன்மைகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவின் ஆண்டாள், அக்கமாதேவி, கனகதாசர், புரந்தரதாசர், சிசுனாளஷரீப் இவர்கள் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே வட இந்தியாவின் கபீர்தாஸ், குருநானக், துளசிதாஸ், மீராபாய், ஸ்ரீசைதன்யா மற்றும் சூஃபி அருட் தொண்டர்களை அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மேலும் பக்தி மார்க்கம் வெவ்வேறு மதங்களுடன் கொண்ட ஒருமைப்பாடு மற்றும் அப்பகுதியைச் சார்ந்த மொழிகளின் வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்புக்கள் விவரிக்கப்பட்டிருக்கிறது.

திறன்கள்:

1. பக்தி மார்க்கத்தின் போதனைகள் சமூக ஒருமைப்பாட்டிற்கு அளித்த பங்களிப்பை புரிந்துக் கொள்ளுதல்.
2. அடியார்கள், தாசர் மற்றும் முனிவர்களின் போதனைகளை அறிந்து உள்வாங்கிக்கொள்ளுதல்.
3. சூஃபிகள் போதித்த சிறப்பான தத்துவங்களை மாணவர்களுக்கு தெரிவித்தல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்தியா பல சமூக கலாச்சாரங்களை உள்ளடக்கிய நாடாகும். மத்திய நூற்றாண்டின் மக்கள் சமூக மற்றும் சமய மாற்றங்கள் தேவை என்று நினைத்ததன் காரணமாக, அந்தத் தருணத்தில் தோன்றிய சில பக்தி மார்க்கங்களும் சூஃபி பரம்பரையின் முனிவர்களும் மதம் மற்றும் சமுதாயத்தை சீர்திருத்த முன்வந்தார்கள்.

அவர்கள் உலக சகோதரத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, பக்தி முக்தி அடைய மேன்மையான வழி என்று கூறினார்கள். இந்த வழிமுறையை பக்தி மார்க்கம் என்றார்கள்.

பக்தி என்கின்ற சொல் புஜ் என்னும் மூலத்தில் இருந்து தோன்றியது. புஜ் என்றால் பெற்று கொள்வது என்று பொருள்.

பக்தி மார்க்கத்தின் மையக் கருத்து:

1. பக்தி மார்க்கம் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டை கண்டித்தது. சமத்துவத்தைப் பரப்பியது.
2. பக்தி மார்க்கத்தின் அடியார்கள் பழமையை எதிர்த்தனர், மற்றும் கண்டித்தனர்.
3. இவர்கள் மக்களின் மனதை ஒருங்கிணைக்கும் வேலையைச் செய்தனர்.
4. சூஃபி அருட் தொண்டர்கள் தர்மம் என்றால் அன்பு மற்றும் மானிட சேவை என்று கூறினர். கடவுள் ஒருவனே, பல கடவுள்கள் கிடையாது என்றும் கூறினார்கள்.

தென் இந்தியாவின் பக்திப் பரம்பரை :

ஆண்டாள்

ஆண்டாள்

தமிழ் நாட்டின் விஷ்ணு பக்தர்களான 12 ஆழ்வார்களில் ஆண்டாள் ஒருவராவார். இவர் விஷ்ணு சித்தரின் வளர்ப்பு மகள். விஷ்ணு சித்தரும் ஓர் ஆழ்வார். இவர் பெரியாழ்வார் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். ஆண்டாளின் மூலப் பெயர் கோதாதேவி. இவர் கிருஷ்ண பக்தர். ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்கும் கிருஷ்ணர் கோவிலுக்கு இவருடைய தகப்பனார் பூமாலை தொடுத்து கடவுளுக்குச் சாத்துவார். ஆண்டாள் கிருஷ்ணனையே காதலித்து, அவனையே தன் கணவன் என்று சொல்லுவார். இவர் திருப்பாவை என்ற நூலை இயற்றி ஆண்டவருக்கு சமர்ப்பித்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தமிழ் நாட்டில் இந்தத் திருப்பாவை விரதம் மிகவும் புகழ் வாய்ந்தது.

ஆழ்வாரைப் பொறுத்தவரை விஷ்ணுபக்தர்கள் எல்லோரும் சமமானவர்கள். அவர்களின் பிறப்பை பற்றி யாரும் கேட்கக்கூடாது. சாதி வேறுபாடு மிகப்பெரிய பாவம் என்று இவர்கள் எண்ணினார்கள்.

அக்கமகாதேவி:

அக்கமகாதேவி

12வது நூற்றாண்டில் வசன போராட்டத்தில் பங்குபெற்ற வீரப் பெண் அக்கமகாதேவி. கன்னட வசன இலக்கியத்திற்கு இவருடைய பங்களிப்பு அதிகமாக உள்ளது. சிவமொக்கா மாவாட்டத்தின் உடுதடியில் அக்கமாகாதேவி பிறந்தார். இவருடைய தந்தை நிர்மல செட்டி. தாய் சுமதி. சிறுவயதிலிருந்தே சிவ பக்தியில் மூழ்கியிருந்தார். அக்கமகாதேவி சென்ன மல்லிகார்ஜுனனே தனது கணவர் என்று சொல்லிக்கொள்வார். இவருடைய பெற்றோர் இவரை வற்புறுத்தி அரசனான கௌசி கனிற்கு மணமுடித்தனர். தன் குரு லிங்க, ஜங்கம சேவைக்கு தடை ஏற்பட்டதால் அக்கமகாதேவி அரண்மனையைத் துறந்தார். பிறகு உடுத்திய ஆடைகளை களைந்துவிட்டு வெளியேறினார். பிறகு கல்யாணுக்கு சென்று பசவண்ணர் தொடங்கிய அனுபவ மண்டபத்தில் சில காலம் தங்கினார். அங்கே ‘‘சென்ன மல்லிகார்ஜுன’’ என்ற புனைப் பெயரில் நிறைய வசனங்களை இயற்றினார். எல்லா சிவனடியார்களுக்கும் அக்கமகாதேவியிடம் மிகுந்த மரியாதை இருந்தது. கடைசி காலத்தில் கல்யாணிலிருந்து ஸ்ரீசைலத்திற்கு புறப்பட்டார். இறுதியில் அங்குள்ள கதளீ வனத்தில் சிவனடி சேர்ந்தார்.

புரந்தர தாசர் (பொ.ச. 1480 1564)

இவர் கன்னட தாச இலக்கியத்தின் முக்கியமான மனிதராவார். புரந்தர தாசர் புரந்தரகடியில் பிறந்தார். இவருடைய பிறவிப் பெயர் ஸ்ரீனிவாச நாயகர். தந்தை வரதப்ப நாயகர் மற்றும் தாய்

NOT TO BE REPUBLISHED ©KTBS

லீலாவதி. இவருடைய மனைவி லஷ்மிபாய் பக்தி நெறி மிகுந்த பெண்ணாக இருந்தார்.

புரந்தர தாசர்

கஞ்சனும், நாஸ்திகரும் ஆன ஸ்ரீனிவாச நாயக்கர் ஆண்டவனின் திருவிளையாடலால் தோல்வியுற்று தனது சொத்தை எல்லாம் மக்களுக்கு தானம் செய்தும் எஞ்சிய நாட்களை பக்தி உடையவராய் வாழ்ந்தார். இவர் கீர்த்தனைகளைப் பாடியவாறு பல ஊர்களைச் சுற்றி கிருஷ்ண தேவராயரின் அரசவையை அடைந்தார். அங்கே வியாச ராயர் இவருக்கு அருள் அளித்து 'புரந்தரா' என்று பெயர் சூட்டினார். இப்படியாக புரந்தர தாசர் ஆனார். புரந்தர தாசரின் வார்த்தைகளில் மனிதநேய சிந்தனைகள் அடங்கியுள்ளன. இவர் தமது கீர்த்தனைகளில் சாதிப்பிரிவுகளைக் கண்டனம் செய்தார். இவருடைய கீர்த்தனைகளில் தத்துவம், நீதி மற்றும் ச ங்கீதம் இணைவதைக் காணலாம். இவரை 'கர்நாடக இசையின் தந்தை' என்று அழைக்கிறார்கள். ''புரந்தர விட்டலா'' என்ற புனைபெயரில் பலகீர்த்தனைகளை இயற்றியுள்ளார். ''தாசர் என்றால் புரந்தர தாசரய்யா'' என்று அவருடைய குருக்களான வியாசராயரிடமிருந்து பாராட்டுப் பெற்றுள்ளார்.

கனகதாசர் (சுமார்.பொ.ச. 1508-1606)

கனகதாசர்

தாச இலக்கியத்தின் ஒரு முக்கியக் கலைஞராக கனகதாசர் பொ.ச. 1508 இல் ஹாவேரி மாவட்டத்தின் பங்காபுரா தாலூக்காவில் பாடா கிராமத்தில் பிறந்தார். இவருடைய இயற் பெயர் திம்மப்பா. பீரப்பா மற்றும் பச்சம்மா இவருடைய பெற்றோராவர். இவர் வீரராகவும் கவிஞராகவும் இருந்தார். பாடா என்ற கிராமத்தை சுற்றியுள்ள 78 கிராமங்களுக்கு ஊர்த்தலைவராகவும் மற்றும் படைத் தலைவராகவும் இருந்தார். பானை நிறைய தங்கம் கிடைத்ததால் கனகநாயகர் என்று அழைக்கப்பட்டார் என்பது மக்களின் நம்பிக்கை. குடும்ப வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு, வியாசராயரின் மாணவரானார். பிறகு கனகதாசர் என்று பெயர் பெற்றார். இவர் பல்வேறு கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

‘‘ஆதிகேசவா’’ இவருடைய புனைப்பெயராக இருந்தது. காகிநெலெயா ஆதிகேசவர் இவருடைய விருப்பக் கடவுள். இவர் தம் பாடல்களில் சமுதாயத்தின் மூடநம்பிக்கைகளை கண்டனம் செய்து ஆண்டவனை அடையும் எளிய வழியை போதித்தார். இவர் தம் கீர்த்தனைகளில் சாதி முறையை எதிர்த்துள்ளார்.

கனகன கிண்டி: (கனகனின் துளை) உடுப்பி கோயிலிற்குள் கனகதாசரை அனுமதிக்க அங்குள்ள புரோகிதர்கள் மறுத்தனர். அப்போது கனகதாசரின் பக்தியை பாராட்டிய ஸ்ரீ கிருஷ்ணன் மேற்கு முகமாகத் திரும்பி துளையின் வழியாக தரிசனம் அளித்தார் என்று புராணக்கதை உள்ளது.

கனகதாசர் ஹரிபக்தி சாரா, நள சரித்ரே, ராம தான்யா சரிதே என்ற எட்டு அடிப் பாடல்களையும் (ஷட்பதி) மோகன தரங்கினி என்ற இசைக்காவியத்தையும் இயற்றியுள்ளார்.

சிசுனாள ஷரீபா:

NOT TO BE REPUBLISHED @KTBS

சிசுனாளா ஷரீப்

சிசுனாள ஷரீபா: சிசுனாள ஷரீபா கன்னடத்தின் முதல் முஸ்லீம் கவிஞர். இவரைக் கர்நாடகக் கபீர் என்று அழைக்கிறார்கள். சிசுனாளா என்ற கிராமத்தில் 1819இல் பிறந்தார். இவருடைய தகப்பனார் இமாம் சாகேப், தாயார் ஹஜ்ஜமா. ஷரீபர் சிறுவனாக இருக்கும் போதே இந்து-முஸ்லீம் இரண்டு மதங்களைப் பற்றி அறிந்துகொண்டிருந்தார். பிறகு முல்கி தேர்வில் வெற்றி பெற்று ஷரீபர் சிலகாலம் ஆசிரியராக சேவை செய்தார். குரு கோவிந்த பட்டரிடமிருந்து அருள் பெற்று நிறைய தத்துவப் பாடல்களை இயற்றினார். இவருடைய பாடல்களில் ரிவாயாத் (மொஹரம் சொல்) இருக்கின்றன. அவைகளில் போர் சொல் சமய நீதிப் என்ற சொல், ஆலாவி சொல் கேள்வி-பதில் சொல் முதலானவை புகழ் வாய்ந்தவை. சிசுனாளத்தில் இவருடைய கல்லறை இருக்கிறது. இந்து-முஸ்லீம்கள் இருவரும் இவரை வழிபடுகிறார்கள். சாதி மற்றும் மதங்களின் எல்லையைத் தாண்டி இவர் மனிதநேய சிந்தனைகளை விதைத்தார்.

வட இந்திய பக்திப் பரம்பரை

கபீர்தாஸ் (பொ.ச. 1398-1518)



கபீர் தாஸ்

பக்தி மார்க்கத்தின் புகழ் வாய்ந்த அருட் தொண்டர் கபீர் ரமானந்தரின் மாணவர். இவர் இந்து முஸ்லீம் மதங்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டை கொண்டுவர முயற்சித்தார். இவர் வாரணாசியில் நெசவாள முஸ்லீம் தம்பதிகளான நீரு மற்றும் நிமார அவர்களின் வளர்ப்பு மகனாவார். சாதி முறை, ஆடம்பர வாழ்க்கை, சாதி உயர்வு, மத ஏற்ற தாழ்வு இவைகளைக் கண்டித்தார். அல்லா மற்றும் ராமா என்பது ஒரே கடவுளின் இரண்டு பெயர்கள். இந்து மற்றும் முஸ்லீம்கள் ஒரே மண்ணால் தயாரிக்கப்பட்ட பானைகள் என்று வர்ணித்தார். கபீர் தாஸ் ராமர் மற்றும் அல்லாவின் மகன் என்று சொல்லிக்கொண்டார். உடலை வருத்திக்கொள்வது, உண்ணாவிரதம், புனிதப் பயணங்கள் (தீர்த்த யாத்திரை) புனித இடங்கள் முதலியவற்றில் கடவுளைக் காணமுடியாது. ஆனால் புனிதமான பக்தி மார்க்கத்தின் வழியாக மட்டும் கடவுளைப் பார்க்க முடியும் என்று கூறினார். கபீர் அவருடைய தத்துவங்களை பாமர மக்களுக்கு புரியும் வண்ணம் ''தோஹா'' (இரண்டு வரிப் பாடல்) என்ற சிறு கவிதைகளாக போதித்தார். இவரைப் பின்பற்றுபவர்கள் கபீர் மார்க்கிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

குருநானக் (பொ.ச. 1469 1539)

குருநானக்

குருநானக் சீக்கிய மதத்தைத் துவக்கியவராவார். இவர் இப்போதைய பாகிஸ்தானில் உள்ள பஞ்சாபின் தளவாண்டி கிராமத்தில் 1469இல் பிறந்தார். மெஹ்தாகௌலா மற்றும் துருப்தா இவருடைய பெற்றோர் ஆவார்கள். அவர் இந்து முஸ்லீம் சமயங்களின் சம அம்சங்களை வலியுறுத்தினார். 'கிரந்த சாஹிப்' என்ற சீக்கிய புனித நூலில் அவருடைய ஜபஜிகள் என்று

அழைக்கப்படும் பாட்டுக்கள் உள்ளன. கடவுள் நாமத்தைப் போற்றுவது மற்றும் நல்ல காரியங்களைச் செய்வதற்கு சீக்கிய மதம் முக்கியத்துவம் அளித்திருக்கிறது. ஆண் பெண்ணின் சமத்துவத்தை அது வலியுறுத்தி உள்ளது. குருநானக் கடவுள் இருக்கின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். உலகத்திற்கு கடவுள் ஒருவனே அவன் உண்மையானவன், நிலையானவன் என்று உரைத்தார். வாழ்க்கையில் ஏமாற்றுதல், வஞ்சனை, திருட்டு, கொடுமை செய்யக்கூடாது. ஆசானிடமிருந்து (குரு) பக்தியையும், பக்தியிலிருந்து முக்தியையும் அடையலாம் என்று கூறினார். சமுதாயக் கேடுகளான உருவ வழிபாடு, சாதி முறை, உடன்கட்டை ஏறுதல் போன்றவைகளை எதிர்த்தார். தமது தேச சுற்றுப் பயணத்தில் நானக் கர்நாடகாத்திற்கும் வந்திருந்தார். அவர் பீதரில் தங்கியிருந்த இடத்தை நானக் ஜரா (இனிப்பு நீரூற்று) என்று அழைக்கிறார்கள்.

துளசிதாசர் (பொ.ச.1532 1623)


துளசி தாசர்

வட இந்தியாவின் பக்தி மார்க்கத்தின் சமய அறிவுரையாளர்களில் துளசிதாசர் முன்னிலையில் உள்ளார். பிராமண குடும்பத்தில் பிறந்தவர். இந்தி இலக்கியத்திற்கு செய்த சேவை அபரிமிதமானது. இவர் ''ராமசரித மானசா'' என்ற நூலை எழுதினார். இது இந்தி இலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்பாக உள்ளது. வடக்கில் இது துளசி ராமாயணம் என்று மக்களால் புகழப்பட்டது. ராம பக்தரான இவர் கடவுள் பக்தி, பரிசுத்தமான வாழ்க்கை, அன்பு, பாசம், பொறுமை, உயர் பண்பு இவைகளை மக்களின் மனதில் விதைத்தார்.

சைதன்யர் (பொ.ச. 1485-1533)

சைதன்யர் மேற்கு வங்காளத்தின் நவத்வீபா (நாடியா) என்ற ஊரில் பொ.ச.1485இல் பிறந்தார். ஜகன்நாத மிஷ்ரா மற்றும் ஸசிதேவி இவரின் பெற்றோர் ஆவர். விஷ்வம்பரா என்பது சைதன்யரின் இயற்பெயர். ஈஷ்வரிபுரி இவருடைய ஆசானாக இருந்தார். சைதன்யர் அவருடைய 25ஆம் வயதில்

NOT TO BE REPUBLISHED @KTBS

குடும்ப வாழ்க்கையைத் துறந்து துறவு வாழ்க்கையை ஏற்றுக்கொண்டார். இவர் சாதி பேதங்களை எதிர்த்தார். முக்திக்கு பக்தி ஒன்றே வழி என்றார். உலக சகோதரத்துவம் கடவுளின் அன்பைப் பெற முதல் அடி என்று போதனை செய்தார். சைதன்யர் இந்தியாவின் எல்லா இடங்களுக்கும் புனிதப்பயணம் மேற்கொண்டு அன்பைப் பரப்பினார். அதனால் அன்பு, சகோதரத்துவம் மற்றும் அறம் செய்தல் இவைகள் அவருடைய போதனையின் சாரமாக இருந்தன. இன்றைய ஹரேகிருஷ்ண மார்க்கம் இவருடைய தாக்கத்தினால் உருவானதுதான். சைதன்யரை ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரம் என்று ஏற்று வங்காள மக்கள் அவரை **'சைதன்ய மகா பிரபு'** என்று அழைக்கிறார்கள்.

சைதன்யா

மீராபாய் (பொ.ச. 1498 -1569)

''கலியுக ராதா '' என்று அழைக்கப்படும் அருட் செல்வி மீராபாய் இந்தியாவின் சிறந்த சங்கீதக்காரராக இருந்தார். இவர் ராஜஸ்தானில் ரஜபூத ராஜ வம்சத்தில் பிறந்தவர். மீராபாய் ராஜா ரதன் சிங்கின் மகளாவார். மேவாடத்தின் இளவரசனை மணந்தார். சிறுவயதிலிருந்தே ஆன்மீகத்தில் ஈடுபாடுகொண்டதால் அவருடைய பொழுதை கடவுள் பூசை, தியானம் மற்றும் கீர்த்தனைகளில் கழித்தார். இவர் கிருஷ்ணனை வழிபடுவதை அத்தை கடுமையாக எதிர்த்தார். இதைப் பொறுக்கமுடியாமல் மீராபாய் அரண்மனையைத் துறந்து ஸ்ரீ கிருஷ்ண வழிபாட்டு தலமான பிருந்தாவனத்திற்குப் சென்றார். அவர் இயற்றிய கீர்த்தனைகளில் பக்தி, அன்பு நிறைந்திருந்தது. ''கிரிதர கோபாலா'' இவருடைய விருப்பமான கடவுள். அவருடைய நூற்றுக்கும் மேற்பட்ட பஜனைகளால் மீராபாய் இன்றைக்கும் மக்களின் மனதில் நிரந்தரமாக நிலைத்து நிற்கிறார்.

மீராபாய்

© KTBS NOT TO BE REPUBLISHED

பக்தி மார்கத்தின் விளைவுகள் :

- பக்தி அருட்தொண்டர்கள் இந்து முஸ்லீம் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட காரணமானார்கள்.
- பக்தி அருட்தொண்டர்கள் மக்கள் பேசும் உள்ளூர் மொழிகளில் இலக்கியத்தை இயற்றினார்கள். இதனால் இந்தியாவின் உள்நாட்டு மொழிகள் வளமடைந்தன.

சூஃபி பரம்பரை

இந்துக்களில் கபீரர், கனகதாசர், ஸ்ரீ சைதன்யர் போன்றோர் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தியதைப் போல, முஸ்லீம் சூபி அருட்தொண்டர்கள் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக பாடுபட்டனர். சூஃபி மார்க்கம் அரேபியாவில் தொடங்கி இந்தியாவில் நுழைந்தது.

சூஃபி என்ற வார்த்தை ''சாஃப்'' என்ற வார்த்தையில் இருந்து வந்தது. சாஃப் என்றால் தெளிவு அல்லது தூய்மை என்று பொருள். சூஃபி முஸ்லீம் அருட்தொண்டர்கள் மிகுந்த பக்தி கொண்டவர்கள். எளிமையான கம்பளித் துணிகளையே அணிந்தார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

சூஃபி மார்க்கத்தின் சாரம்:

1) கடவுள் ஒருவனே, அவன் எல்லா பலமும் பொருந்தியவன். நாம் எல்லாம் அவன் பிள்ளைகள் என்று வலியுறுத்தப்பட்டது.
2) நற்செயல்களுக்கு மகத்துவம் அளித்தது.
3) எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்று பறைசாற்றியது.
4) சாதி முறையை எதிர்த்தது.

காலப் போக்கில் யோகா, வேதாந்தம் மற்றும் புத்த மத சிந்தனைகள் சூஃபிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. தர்மம் என்றால் அன்பு, மானுட சேவை என்பதே சூஃபிகளின் மூலத் தத்துவமாக இருந்தது.

நிஜாமுத்தீன் ஔலியா:

நிஜாமுத்தீன் ஔலியா

இவர் இந்தியாவின் முதல் சூபி அருட் தொண்டர். இவர் தில்லியில் குடியேறி ஏழ்மையான வாழ்க்கையை வாழ்ந்தார். ஓலையால் வேயப்பட்ட மசூதி இவருடைய செயல் பாடுகளின் மையமாக இருந்தது. தில்லியின் சுல்தான் தானமாக அளித்த கிராமம் ஒன்றை இவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். அவரைப் பார்க்க வந்த பக்தர்களுக்கு நற்செயல்கள் மற்றும் கருணையை கடைபிடிக்க வற்புறுத்தினார்.

குவாஜா பந்தே நவாஜ்

பந்தேநவாஜ் பிரபல சிஸ்தி சூஃபி அருட் தொண்டர். இவர் தில்லியின் நசீருத்தீன் அவர்களின் மாணவர். பந்தேநவாஜ் என்றால் 'அடைக்கலம் புகுந்தவரைக் காப்பாற்றுபவர்,' என்று பொருள். இவருக்கு ஜேசுதராஜ் என்று மற்றொரு பெயர் உண்டு. ஜேசுதராஜ் என்றால் 'நீண்ட முடியுடையவன்' என்று பொருள். இவருடைய இயற் பெயர் சையத் மகமத் ஹுசைனி. இவருக்கு சம்ஸ்கிருதம், அரபி, பாரசீகம், தக்கனி (உருது) இப்படி பல மொழிகள் தெரியும். இவர் கலபுரகிக்கு குடிபுகுந்தார். அரசர் பீரோஜ் ஷா இவருக்கு மிகவும் கௌரவம் அளித்தார். இவர் தக்கனி மொழியில் இலக்கியம் இயற்றினார். இதனை இப்போதும் கலபுரகியில் உள்ள இவருடைய தர்காவில் உள்ள இலக்கிய களஞ்சியத்தில் பார்க்கலாம். கலபுரகியில் ஒவ்வொரு வருடமும் இவருடைய உருஸ் நடைபெறும்.

சிஸ்தி மார்க்கம்:

சூஃபி மார்க்கத்தில் சிஸ்தி பிரிவு முக்கியமானது. இதைத் தொடங்கியவர் மொயினுத்தீன் சிஸ்தி. இவர் அஜ்மீரில் வந்து நிலைத்தார். தெய்வ பக்தி, குரு சேவை, அறவழிகளில் நடப்பது சிஸ்திப் பிரிவை பின்பற்றுபவர்களின் தன்மைகள். சிஸ்திகளுக்கு இந்து முஸ்லீம் ஒருமைப்பாட்டைப்பற்றி மிகவும் அக்கறை இருந்தது. இவர்கள் மக்கள் பயன்படுத்தும் தக்கனி (உருது)

© KTBS NOT TO BE REPUBLISHED

மொழியில் நூல்களை எழுதினார்கள். பதேபூர் சிக்ரி என்கின்ற இடத்தில் சலீம் சிஸ்தி புகழ்வாய்ந்தவராக இருந்தார்.

சலீம் சிஸ்தியா கல்லறை, ஆக்ரா

©KTBS NOT TO BE REPUBLISHED

லாகோர் (இன்றைய பாகிஸ்தான்)	:	ஷேக்இஸ்மாயில்
அஜ்மீர்	:	கவாஜா மொயுனுத்தீன் சிஸ்தி
தில்லி	:	நிஜாமுத்தீன் ஔலியா
ஆர்காட்	:	திப்பு மஸ்தார ஔலியா
கலபுர்கி	:	கவாஜ பந்தே நவாஜ்

காலக் கட்டம் (பொ.ச.)

நிஜாமுத்தீன் ஔலியா	*1238 - 1325*
கபீர் தாஸ்	*1440 - 1518*
குருநானக்	*1469 - 1539*
புரந்தர தாசர்	*1480 - 1564*
சைதன்யர்	*1485 - 1533*
மீராபாய்	*1498 - 1569*
கனகதாசர்	*1508 - 1606*
துளசிதாஸர்	*1532 - 1623*

பயிற்சி

I. விடுபட்ட இடங்களை நிரப்புக :

1. அக்கமகாதேவியின் வசனத்தின் புனைப்பெயர் ______ .
2. புரந்தரதாசர் ________________ அரசவையில் இருந்தார்.
3. ''அதிகேசவா'' என்பது ________________ புனைப்பெயர்.
4. கர்நாடகத்து கபீர் என்று ________________ அவரை அழைத்தார்கள்.
5. சைதன்யரின் இயற் பெயர் ________________ .
6. சூஃபி அருட்தொண்டர் குவாஜா பந்தேநவாஜருக்கு இருந்த மற்றொரு பெயர் ________________ .

II. கீழ்க்காணும் கேள்விகளிற்கு ஒரே வாக்கியத்தில் விடை அளிக்கவும் :

7. ஆண்டாளின் இயற்பெயர் என்ன?
8. அக்கமாகதேவி எங்கே பிறந்தார்?
9. கர்நாடக சங்கீதத்தின் தந்தை யார்?
10. கனகதாசரின் தாய் தந்தையரின் பெயரைக் கூறவும்
11. கன்னடத்தின் முதல் முஸ்லீம் கவிஞர் யார்?
12. சீக்கியரின் புனித நூல் எது?
13. கலியுகத்து ராதா என்று யாரை அழைத்தார்கள்?
14. சூஃபி என்ற வார்த்தையின் பொருள் என்ன?
15. இந்தியாவின் சூஃபி அருத்தொண்டர்கள் யாவர்?
16. சிஸ்தி மார்க்கத்தை நிறுவியவர் யார்?

III. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் பதிலளிக்கவும்:

17. கபீர்தாசர் அளித்த செய்திகளை தெரிவிக்கவும்
18. குருநானக்கின் போதனைகள் என்ன?
19. பக்தி மார்க்கத்தின் விளைவுகள் யாவை?
20. சூஃபி மார்க்கத்தின் சாரத்தை தொகுத்து எழுதவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

IV. கீழ்க்காணும் ஏ பட்டியலில் கொடுக்கப்பட்ட அம்சங்களை பி பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்ற அம்சங்களுடன் பொருத்துக :

ஏ	பி
குருநானக்	சூபி அருட் தொண்டர்
சைதன்யா	சீக்கிய மதம்
நிஜாமுத்தீன் ஔலியா	கலியுக ராதா
மீராபாய்	ஹரே கிருஷ்ணா மார்க்கம்

விவாதிக்கவும்:

பக்தி அருட் தொண்டர்களின் போதனைகளின் பொருத்தங்களைக் குறித்து விவாதிக்கவும்.

செயல்பாடு:

1. பக்தி அருட் தொண்டர்களின் படங்களை விவரங்களுடன் சேகரிக்கவும்.
2. ஸ்ரீ சைதன்யா, குருநானக், மீராபாய், துளசிதாசர்,கபீர், சூர்தாஸ் மற்றும் சூஃபி அருட் தொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கவும்.
3. மீரா பஜனைகளை கேட்கவும்.
4. சூஃபி மார்க்கத்தைப் பற்றி இன்னும் சில விவரங்களை சேகரித்து, இந்தியாவின் பல மதங்களின் சமுதாயத்தின் மீது அதன் தாக்கங்களை மற்றும் இன்றைய சூழ்நிலையில் அவை பொருந்தும் செய்தியைக் குறித்து சுருக்கமான குறிப்பை எழுதுக.

☆ ☆ ☆

@KTBS NOT TO BE REPUBLISHED

குடிமையியல்

பாடம் 9

சட்டமன்றம், ஆட்சித்துறை மற்றும் நீதித்துறை வரையறைகளின் அறிமுகம்

Y4A9T8

பாட அறிமுகம் : சட்டங்களை இயற்றும் சட்டமன்றம், அதை செயல்படுத்தும் நிர்வாகத்துறை மற்றும் அரசியல் அமைப்பு முறையின் பாதுகாவலன் என்று அழைக்கப்படும் நீதித்துறையைப் பற்றிய அடிப்படை கருத்துகள் பற்றி சுருக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

திறன்கள்

1. சட்ட மன்றம், நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறையின் பொருள் மற்றும் சிறப்பை பற்றி அறிதல்.
2. சட்டமன்றம், நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறையின் அமைப்பபைப் பற்றி அறிதல்.
3. சட்டமன்றம், நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறையின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகளைப் பற்றி அறிதல்.
4. சட்டமன்றம், நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறையின் வகைகளைக் குறிப்பிடுதல்.
5. நீதித்துறை நிர்வாகிக்கும் செயல்களை அறிந்து போற்றுதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

அறிமுகம் :

சட்டமன்றம் நாட்டின் விருப்பத்தை உருவாக்கும் மற்றும் வெளிப்படுத்தும் முதல் உறுப்பாகும். இது நிர்வாகத்திறை மற்றும் நீதித்துறையின் செயல்பாட்டிற்கும் அடிப்படையாகத் திகழ்கிறது. எனவே சட்டமன்றத்தை பொதுக் கருத்தின் 'பேரோமீட்டர்' (Baro meter) என்று அழைக்கப்படுகிறது.

பொருள் : நீதித்துறை அல்லது பார்லிமென்ட் என்ற சொல் பிரெஞ்சு மொழியின் 'Parler' மற்றும் இலத்தீன் மொழியின் 'Parlamentum' என்ற சொல்லிலிருந்து வந்தது. பேசுக விவாதிக்க என்று இது பொருள்படும்.

ஒரு நாட்டின் மக்கள் பிரநிதிகள் ஒரு இடத்தில் கூடி மக்கள் கருத்தைக் கூறும் மேடையாக இருப்பதனால் சட்டன்றத்தை 'பொது கருத்தின் கண்ணாடி' என்று அழைக்கிறோம். சட்ட மன்றம் ஒரு நாட்டிற்குத் தேவையான புதிய சட்டங்களை அமைக்கும், நடப்பில் உள்ள சட்டங்களை மாற்றும் மற்றும் பயன்பாடில்லாத சட்டங்களை ரத்து செய்யும் முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளது. எனவே சட்டமன்றத்தை ஒரு நாட்டின் சட்டங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை என்றும் அழைக்கலாம்.

வெவ்வேறு நாடுகளின் சட்டமன்றங்களின் பெயர்கள்.

1. இந்தியா - பாராளுமன்றம் (Parliament)
2. மாலத்தீவுகள் - மஜ்லீஸ் (Majlis)
3. ஜெர்மனி - புந்தேஸ்டாக (Bundestag)
4. இஸ்ரவேல் - நெஸ்ஸெட் (Knesset)
5. பிரான்ஸ் - நேஷனல் அஸெம்ப்லி (National Assembly)
6. டென்மார்க் - ஃபொகெடிங்க் (Folketing)

©KTBS NOT TO BE REPUBLISHED

சட்டமன்றத்தின் முக்கியத்துவம் :

அரசின் மூன்று உறுப்புகளில் சட்டமன்றம் முதல் உறுப்பாகும். மக்கள் பிரதிநிதிகளைப் பெற்றுள்ள சட்டமன்றம் நாட்டின் இறையாண்மையின் சின்னமாக விளங்குகிறது.

சட்டமன்றம் தனது சட்டங்களின் மூலம் குடிமக்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் முக்கிய சாதனமாகும்.

சட்டமன்றத்தை குறிப்பிடும் படம் (கருநாடக சட்டமன்றம்)

1. **சட்டங்களின் உருவாக்கும் :** மாநிலத்திற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்கான சர்வாதிகாரம் சட்டமன்றத்திற்கு அரசியலமைப்பின்படி வழங்கப்பட்டுள்ளது.

2. **அரசமைப்பு :** பொதுத் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெற்ற கட்சியானது சட்டமன்றத்தில் தனது பெரும்பான்மையைப் நிரூபிப்பதன் மூலம் ஆட்சியமைக்கிறது.

3. **அரசமைப்பின் திருத்தம் :** சட்டமன்றம் அரசமைப்பின் விதிகளைத் திருத்துகிறது. புதிய சாசனங்களை உருவாக்குதல், புதிய விதிகளை சேர்த்தல் போன்ற நடவடைக்கைகளை மேற்கொள்கிறது.

4. **பொதுமக்களின் குறைபாடுகளுக்கு தீர்வு காணுதல் :** சட்டமன்றம் பொதுமக்களின் குறைபாடுகளை வெளிப்படையாக விவாதிக்கும் ஒரு முக்கிய மன்றமாகத் திகழ்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களின் பிரச்சனைகள் குறித்து விவாதித்து அவையின் கவனத்தை ஈர்க்கின்றனர்.

5. **தேசிய வாழ்க்கையின் கண்ணாடி :** சட்டமன்றமானது மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்குக் தேவையான பொது விதி நியமங்களை அமைப்பதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

மொத்தத்தில் சட்டமன்றம் அரசின் முக்கிய உறுப்பாகும். அதுமட்டுமல்லாமல் நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறையைப் போலவே நாட்டின் வளர்ச்சிக்காக செயல்படுகிறது.

சட்டமன்றத்தின் அமைப்பு

அரசு அமைப்பு முறையில் சட்டமன்றத்திற்கு முக்கிய நிலைப்பாடு உள்ளது. சட்டமன்றத்தின் அமைப்பு இரண்டு முறைமைகளைப் பெற்றுள்ளது.

1. ஒரு சபை சட்டமன்றம் - ஒரு சபை மட்டுமே இருக்கும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

2. இரு சபை சட்டமன்றம் - இரண்டு சபைகள் இருக்கும்.

இரு சபை அமைப்பில் இரண்டு அவைகள் உள்ளன. அவை மேல்சபை (Upper House) கீழ்சபை (Lower House) என்று அழைக்கப்படுகின்றன.

சட்டமன்றத்தின் வகைகள் :

சட்டமன்றத்தை இரு வகைப்படுத்தலாம். அவையாவன

1) ஒரு சபை சட்டமன்றம் - (UNICAMERALISM)

2) இருசபை சட்டமன்றம் - (BICAMERALISM)

1) **ஒருசபை சட்டமன்றம் :** ஒரு சபையை மட்டுமே பெற்றிருக்கும் சட்டமன்றம் ஒரு சபை சட்டமன்றமாகும். மக்கள் விருப்பம் ஒரு சபையில் மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது.

ஒரு சபை சட்டமன்றம், தேவையில்லாமல் தொடர்ந்து நடைபெறும் விவாதங்களை தவிர்க்கிறது. அதுமட்டுமல்லாமல் நாட்டின் நலன் கருதி தனது வரம்பினைப் பாதுகாத்துக் கொள்கிறது.

ஒருசபை சட்டமன்றங்களைப் பெற்றுள்ள நாடுகள் கிரேக்கம், பின்லாந்து, ஸ்வீடன், தென்மார்க், யுகோஸ்லாவிய போர்ச்சுகல், நீயூசிலாந்து முதலியன.

2) **இருசபை சட்டமன்றம் :** இரண்டு சபைகளைப் பெற்றுள்ள சட்டமன்றமே இருசபை சட்டமன்றமாகும். மக்களின் நோக்கீடுகள், இரு சபைகளிலும் விவாதிக்கப்பட்டு சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

இருசபை சட்டமன்ற அமைப்பு ஒரு எதிர்பாராத வரலாற்று நிகழ்வாக இங்கிலாந்தில் பிறந்தது. பல உலக நாடுகள் இந்த அமைப்புமுறையை நடைமுறைப்படுத்திக்கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக இந்தியாவின் சட்டமன்றத்தின் பாராளுமன்றம் இருசபை சட்டமன்றங்களாக உள்ளன. அதன் கீழ்சபையை மக்களவை என்றும் மேல்சபையை மாநிலங்களவை என்றும் அழைக்கப்படுகின்றன. அதேபோல

@KTBS NOT TO BE REPUBLISHED

இங்கிலாந்தின் சட்டமன்றமான பார்லிமென்ட் இருசபை சட்டமன்றமாகும். அதன் கீழ்சபை 'பொதுமக்கள் அவை' மேல்சபை 'பிரபுக்கள் அவை' அல்லது அரசசபை என்றும் அழைக்கப்படுகிறது.

சட்டமன்றத்தின் அதிகாரமும் செயல்பாடுகளும் : சட்டமன்றத்தில் பல விடயங்கள் மற்றும் மசோதாக்களைப் பற்றி நடைபெறும் விவாதங்கள் மக்கள் கருத்துகளை உருவாக்குகின்றன. நிர்வாகத்துறை (ஆட்சித் துறை) அரசாங்கத்தின் வெளிப்புற வடிவமெனில் சட்ட மன்றம் அதன் உட்புற வடிவமாகும். சட்டமன்றம் பரந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

பயிற்சிகள்

I. ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும்.

1. சட்டமன்றத்தின் மூலச் சொல் யாது?
2. சட்டமன்றம் என்றால் என்ன?
3. ஒருசபை சட்டமன்றம் என்றால் என்ன?
4. இருசபை சட்டமன்றம் என்றால் என்ன?

செயல்பாடுகள்

* பள்ளியில் போலி பாராளுமன்றத்தை (Mock Parliament) அமைக்க.
* பாராளுமன்ற அமர்வுகளை (கூட்டங்கள்) ஏற்படுத்தி பள்ளி சார்ந்த விடயங்களைப் பற்றி விவாதிக்க
* சட்டமன்ற சபை கூட்டங்களைத் தொலைக் காட்சியில் கண்டறியச் செய்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆட்சித்துறை

அறிமுகம் :

அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் ஆட்சித்துறை பல்திறன்மிகுந்த உறுப்பாகும். சட்டமன்றத்தினால் உருவாக்கப்பட்ட சாசனங்களை நடைமுறைப்படுத்தும் உறுப்பு ஆட்சித்துறையாகும். நாட்டின் மொத்த நிர்வாகத்தை இது நடத்துகிறது. ஆகவே இது நிர்வாக உறுப்பு என்றே அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் ஆட்சித்துறை செயல் நோக்கங்களுக்காக அரசாங்கத்துடன் அடையாளப்படுத்திக் கொள்கிறது. காரணம் பெரும்பாலான அதிகாரங்கள் ஆட்சித்துறையில் மட்டுமே ஒருமுகப் படுத்தப்படுகின்றன.

பொருள் : ஆட்சித்துறை என்ற சொல்லானது ஆங்கில மொழியின் 'எக்ஸிகியூடிவ்' (Executive) என்ற சொல்லின் உருமாற்றமாகும். இது இடைக்காலத்திய லாடின் மொழியின் எக்ஸிகியூ (Exsequi) என்ற சொல்லில் இருந்து வந்தது. இதன் பொருள் 'செயல்படுத்து' என்பதாகும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமெனில் 'ஆட்சித்துறை' நாட்டின் முக்கிய 'நிறவேற்றுநர்' அல்லது 'ஆலோசகர்' என்று கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் இது குடியரசு மற்றும் அமைச்சரவை எனில் அமெரிக்காவில் இது குடியரசுத் தலைவர் மற்றும் செயலாளர்களை உள்ளடக்கும்.

விரிவாகக் கூறினால் ஆட்சித்துறை என்பது சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்பான அனைத்து அதிகாரிகளின் தொகுப்பாகும். அதாவது நாட்டின் பிரமுகர்கள், அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள், இலாக்கா தலைவர்கள், வரைவாளர்கள் முதலிய அரசு ஊழியர்களை இது உள்ளடக்குகிறது.

வரையறைகள் :

கார்னர் அவர்களின் நோக்கீடு : 'சட்டமன்றம், அரசியலமைப்பு மற்றும் நீதித்துறையின் முடிவுகளின் வழியாக

NOT TO BE REPUBLISHED @TNTB

வெளிப்படுத்தப்படும் நாட்டின் விழைவை நடைமுறைப் படுத்தும் அரசியல் உறுப்பே ஆட்சித்துறை' ஆகும்.

ஆட்சித்துறையைக் குறிப்பிடும் படம் (மக்களவை அலுவலகம் தில்லி)

© KTBS NOT TO BE REPUBLISHED

வில்வோபி அவர்களின் நோக்கீடு : 'நிர்வாக அதிகாரம் அல்லது அதன் செயல்பாடு மொத்த அரசாங்கத்தைக் குறிப்பிடுவதோடு அதன் சட்டங்கள், அதன் பல்வேறு உறுப்புகளின் வேண்டுகோளகள் நிறைவேற்றுப்படுவதைக் கண்காணிப்பதே ஆட்சித்துறை' ஆகும்.

முக்கியத்துவம்

ஒவ்வொரு அரசியல் அமைப்பு முறையிலும் ஆட்சித்துறை நடுவண் நிலையை வகிக்கிறது. அதன் சிறப்புகள் கீழ்வருமாறு.

1. **ஆட்சித்துறையே அரசின் இயந்திரமாகும் :** மூளை இல்லாத ஒரு உடலை நம்மால் எவ்வாறு கற்பனை செய்ய முடியாதோ அவ்வாறே ஆட்சித்துறை இல்லாத ஒரு அரசாங்கத்தையும் நம்மால் கற்பனை செய்ய முடியாது. நாட்டின் முழு நிர்வாகப் பொறுப்பையும் ஆட்சித்துறை ஏற்கிறது. ஆட்சித்துறையின் அமைப்பு முறை மற்றும் செயலாக்கம் முழு அரசாங்கத்தின் அடையாளமாக விளங்குகிறது.

2. **சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் :** ஆட்சித்துறை நிலை பெறவில்லை எனில் சட்டமன்றம் அமைத்த சட்டங்கள்

நடைமுறைப்படுத்தப் படாது. சட்டமன்றம் எத்துணை சிறப்பான சட்டங்களை அமைத்தாலும் அதை சரியாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஆட்சித்துறையுடையது ஆகும்.

3. **பயனுள்ள குடியரசின் சாதனை :** இன்று மக்களாட்சி அரசாங்கத்தின் வடிவமாக மட்டுமே இல்லாமல் அது மக்களின் வாழ்க்கை முறையாகவே உள்ளது. ஒவ்வொரு நிலையிலும் மக்களாட்சி பயனுள்ளதாக அமையப்பெற ஆட்சித்துறை இன்றியமையாததாகும். இந்நோக்கில் திறமையான தலைமைத்துவம் படைத்த ஒரு ஆட்சித்துறை நமக்கு தேவைப்படுகிறது.

4. **நன்னல அரசின் சாதனை :** புதிய மாநிலங்கள் அனைத்தும் நன்னல மாநிலத்தை நிறுவும் இலக்கினைப் பெற்றுள்ளன. மக்கள் மேம்பாட்டிற்காக பெரிய திட்டங்களை செயல்படுத்துவதில் ஆட்சித்துறைக்கு அதிக முக்கியத்துவம் உண்டு.

5. **நாட்டின் கண்ணியத்தின் சின்னம் :** அயல் நாட்டுத் தொடர்புகளுக்கு வழிவகை செய்வதில், ஒப்பந்தங்களை செய்துகொள்வதில், நாட்டு நலம் பேணுவதில் ஆட்சித்துறை பெரும் பங்கு வகிக்கிறது. சமாதானம் மற்றும் சகோதரத்துவம் நோக்கி அயல் நாட்டு நீதியை நடைமுறைப்படுத்தி நாட்டின் சிறப்பை மேம்படுத்துகிறது.

வாக்காளர்கள் அரசாங்கத்தின் மீது சாற்றிய புதிய பொறுப்புகள் மற்றும் அரசாங்கம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு அதிகப்படியான அதிகாரங்கள் அனைத்தும் ஆட்சித்துறையின் முக்கியத்துவத்தை அதிகரிக்க காரணமாகிறது என்று லிப்பமன் அவர்கள் கூறியுள்ளார்.

ஆட்சித்துறையின் வகைகள் :

இவை மட்டுமே ஆட்சித்துறையின் வகைகள் என்று நம்மால் கூற இயலாது. ஏனெனில் ஒரே நாட்டில் இரண்டு அல்லது மூன்று

NOT TO BE REPUBLISHED @KTBS

வகையான ஆட்சித்துறைகளும் சம காலத்தில் நிலைபெறலாம்.

1. **அதன் வகைகள் கீழ்வருமாறு :** நாட்டின் முதல்வரின் பெயரில் அரசாங்கத்தின் முதல்வர் பெயரளவு ஆட்சித்துறை அதிகாரம் செலுத்தும் முறையே பெயரளவு ஆட்சித்துறை ஆகும். இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் பிரிட்டனின் அரசி அல்லது அரசன் பெயரளவில் அதிகாரியாக செயல்பட்டாலும் பிரதமர் உள்பட அமைச்சரவையும் ஆட்சித்துறையாக இருந்து அவரது பெயரில் உண்மையாகவே அதிகாரம் செலுத்துகின்றனர்.

2. **உள்ளபடியான ஆட்சித்துறை :** ஆட்சித்துறையின் முதல்வர் உண்மையில் அதிகாரம் செலுத்தும் முறையே உள்ளபடியான ஆட்சித்துறை ஆகும்.

3. **பாராளுமன்ற ஆட்சித்துறை :** சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் நம்பிக்கையின் பேரில் ஆட்சி த்துறை செயல்படும் முறையே பாராளுமன்ற ஆட்சி த்துறையாகும். சட்ட மன்றத்தின் கீழ்சபையின் நம்பிக்கை நிலைபெறும் வரையிலும் ஆட்சித்துறை அதிகாரத்தில் இருக்கும். இம்முறையில் நாட்டின் முதல்வர் பெயரல் மட்டும் அதிகாரியாக இருப்பார், உண்மையான அதிகாரம் குடியரசுத் தலைவரை உள்ளடக்கிய காபினெட் பெற்றிருக்கும்.

4. **தலைவர் முறை ஆட்சித்துறை :** ஆட்சித்துறையின் முதல்வர் குடிமக்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்ட மன்றத்திலிருந்து தோன்றாமல் மற்றும் சட்டமன்றத்திற்கு பொறுப்பாளராக இல்லாத முறையே தலைவர்முறை ஆட்சி ஆகும். டி.வி. வர்னர் அவர்கள், அரசாங்கத்தின் முதல்வரும் ஒருவரே நாட்டின் முதல்வருமாக இருக்கும் ஆட்சித்துறையே தலைவர் முறை ஆட்சித்துறை என்று கூறியுள்ளார். எ.கா. அமெரிக்கா.

©KTBS NOT TO BE REPUBLISHED

5. **ஒரு நபர் ஆட்சித்துறை :** ஒன்றிய அரசின் கையில் நாட்டின் எல்லா அதிகாரங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ள ஆட்சித்துறையே ஒரு நபர் ஆட்சித்துறையாகும். முனைவர் கார்னர் அவர்கள், ஒரு மையத்தின் உறுப்புகளுக்கு அரசாங்கத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் அரசியலமைப்பிற்கேற்ப கிடைக்கப்பெற்று அதன் மூலம் பிராந்திய அல்லது உள்ளூர் அரசுகள் தமது அதிகாரம் மற்றும் தன்னாட்சி உரிமையுடன் நிலைப்பாடு பெற்றுள்ள ஆட்சித்துறையே ஆட்சித்துறை என்று கூறியுள்ளார். எ.கா. இங்கிலாந்து.

6. **பலநபர் ஆட்சித்துறை :** ஆட்சித்துறையின் அதிகாரங்கள் அனைத்தும் ஒரு நபரிடம் மட்டுமே இல்லாமல், பல நபர்கள் அல்லது பல நிறுவனங்களிடையே பகிரப்பட்டிருக்கும் முறையே பல நபர் ஆட்சித்துறை ஆகும். எ.கா. சுவிட்சர்லாந்து.

7. **அரசியல் ஆட்சிமுறை :** ஒரு குறிப்பிட்ட காலம் வரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சித்துறையை அரசியல் ஆட்சித்துறை என்று அழைக்கிறோம். எ.கா. நாடுகளின் அமைச்சரவை.

8. **நிலையான ஆட்சிமுறை :** ஓய்வு பெறும் வரை அதிகாரத்தில் இருந்து, சட்டங்களை செயல்படுத்தும் அதிகார இன வகையே நிலையான ஆட்சித் துறையாகும். இவர்கள் அரசியல் ஆட்சித்துறையின் கட்டளைகளைப் பின்பற்றும் மற்றும் செயல்முறைப்படுத்தும் பொறுப்புள்ளவர்கள் ஆவர். எந்த கட்சியினர் ஆட்சி அமைத்தாலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை அதிகாரத்தில் இருப்பார்கள். ஆனால் இந்த அதிகார இன வகையினர் நிலையாக இருந்து, நாட்டின் ஆட்சித்துறையின் முதுகெலும்பாகத் திகழ்ந்து செயல்படுவர்.

மொத்தத்தில், நாட்டின் மொத்த நிர்வாகப் பொறுப்பை ஆட்சித் துறையே பெற்றுள்ளது. புத்தியம் மற்றும் அறிவியல்

@KTBS NOT TO BE REPUBLISHED

முறைப் பொதுமை வளர வளர ஆட்சித்துறையின் செயல்பாடும் அதிகமாகிறது. ஆட்சித்துறை நாட்டின் உயிர்நாடியாக உள்ளது. மக்களாட்சியில் கோட்பாட்டளவில் சட்டமன்றம் உயர்ந்த உறுப்பாக இருந்தாலும், நடைமுறையில் ஆட்சித்துறை நாட்டு நிர்வாகம் அனைத்தையும் நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. சட்டங்களை செயல்படுத்தும் உறுப்பு ....
2. புதிய மாநிலங்கள் அனைத்தும் .... மாநிலத்தை நிறுவும் இலக்கினைப் பெற்றுள்ளன.
3. படித்தன முறை .... மூலம் நாட்டு முதல்வரை தேர்ந்தெடுக்கிறது.
4. இந்திய குடியரசுத் தலைவர் .... தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

II. ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும்.

5. ஆட்சித்துறை என்ற சொல் எந்தச் சொல்லிலிருந்து வந்தது?
6. நிர்வாக உறுப்பு என்று எதை அழைக்கிறோம்?
7. ஆட்சித்துறையின் உண்மையான முதல்வர் யார்?
8. நேரடித் தேர்தல் முறை என்றால் என்ன?

III. கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

9. ஆட்சித்துறையின் பொருளைக் குறிப்பிடுக.
10. ஆட்சித்துறையின் ஏதேனும் இரண்டு சிறப்புகளைக் குறிப்பிடுக.
11. ஆட்சித்துறை நிர்வகிக்கும் நான்கு செயல்பாடுகளை எழுதுக.

செயல்பாடுகள்

- ✵ உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அதிகாரியைத் தொடர்பு கொண்டு அவருடைய நிர்வாகப் பணிகளை / செயல்பாடுகளைப் பட்டியலிடுக.
- ✵ ஏதேனும் ஐந்து நாடுகளின் ஆட்சித் துறை முதல்வர்களின் பதவிகளை எழுதி அவர்களுடைய படங்களையும் சேகரிக்க.

நீதித்துறை

அறிமுகம் :

அரசியல் முறையில் நீதித்துறை முதன்மை வாய்ந்ததாகும். சட்டமன்றத்தால் அமைக்கப்பட்ட சட்டங்களை, ஆட்சித்துறையின் கட்டளைகளை வரையறுக்கும் மற்றும் நீதியை நிர்வகிக்கும் அரசாங்கத்தின் மூன்றாவது உறுப்பே நீதித்துறையாகும். இதை நாட்டின் காவலாளி என்றும் அழைப்பர். தீமைக்கான தண்டனை இதன் முக்கிய கடமையாகும். நெறிப்படுத்தப்பட்ட நாட்டை நிறுவுவது நீதித்துறை அமைப்பினால் மட்டுமே சாத்தியம்.

©KTBS NOT TO BE REPUBLISHED

நீதித்துறையைக் குறிப்பிடும் படம்

பொருள் : நீதித்துறை அல்லது Judiciary என்ற சொல் இலத்தின் மொழியின் ஜஸ்டிஷியா (justitia) என்ற சொல்லிலிருந்து வந்தது.

வரையறை : ஜான்ரால்ஸ் அவர்களின்படி ''குடிமக்களின் உரிமைகளைத் தீர்மானித்து, பாதுகாத்து, அபராதிகளைத் தண்டிக்கும், நீதியை எடுத்தியம்பும் மற்றும் குற்றமற்றவர்களை வன்தாக்குத்திலிருந்து பாதுகாக்கும் அரசாங்கத்தின் ஒரு உறுப்பு நீதித்துறை'' ஆகும்.

முக்கியத்துவம் : ''இருட்டிலிருந்து நீதி என்ற ஒளி வெளிப்படும்போது இருளின் செயல்பாடு என்ன என்பது உறுதியாகிறது. வார்ட்பிரைஸ் அவர்களின் அறிக்கை நீதித்துறையின் முக்கியத்துவம் என்ன எனன்பதைக் குறிப்பிடுகிறது. கீழ்காணும் இவ்வம்சங்கள் இதனை உறுதிப்படுத்துகிறது.

1. **சட்டத்தைப் பாதுகாத்தல் :** எத்துணை நல்லவர்களாக இருந்தாலும் சட்டத்திற்கு கட்டுப்படாமல் இருக்கும்போது இயல்பாகவே மனிதர்கள் சட்டங்களுக்கு கீழ்படியாமையை வெளிப்படுத்துகின்றனர். இத்தகைய சூழ்நிலைகளில் சட்டத்தை மீறுகின்ற மனிதர்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலம் மனிதர்கள் தத்தம் வரம்புகளை அறிந்து சமூதாயத்தில் வாழும் வாய்ப்பை நீதித்துறை உருவாக்குகிறது.

2. **உரிமை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் :** அரசாங்கம் மற்றும் மனிதர்களின் ஆக்கிரமிப்புகளிலிருந்து குடிமக்களின் உரிமை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நீதித்துறைக்கு உள்ளது. ஆகவே இது உரிமை மற்றும் சுதந்திரங்களின் பாதுகாவலன் என்றே வர்ணிக்கப் பட்டுள்ளது. அரசாங்கம் தனது அதிகார வரம்பை மீறி செல்லாதவாறு இது பார்த்துக்கொள்கிறது. இதன் மூலம் அரசாங்கத்தின் கொடுங்கோன்மையை கட்டுப்படுத்துகிறது. குடிமக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது.

3. **குடிமை பாதுகாப்பு மற்றும் நலம் :** குடிமக்களின் நலமும் பாதுகாப்பும் ஒரு நாட்டின் நீதித்துறையின் அமைப்பு முறையை சார்ந்துள்ளது. சுதந்திரமாகவும் நடுநிலை தவறாமலும் மக்களின் உயிர், உடமையை பாதுகாக்கும் பொறுப்பு நீதித்துறையுடையது. எங்கு நீதித்துறை சரியாக

©KTBS NOT TO BE REPUBLISHED

செயல்படுகிறதோ அங்கு மக்களில் பாதுகாப்பு உணர்வு எழுகிறது. இது சமுதாய வளர்ச்சிக்கும் பயனுள்ளதாக அமைகிறது.

4. **நாட்டில் ஒழுங்குமுறையின் நிலைநாட்டம் :** நீதித்துறை நாட்டில் சட்டங்களை அமல்படுத்துகிறது மற்றும் சட்டங்களை மீறுபவர்களை தண்டனைக்குள்ளாக்குகிறது. இது குடிமையியல் சட்டம், குற்றிவியல் சட்டம் மற்றும் அரசமைப்பு சட்டத்தைப் பற்றியும் நடவடிகைகை எடுக்கிறது. இதன் மூலம் நாட்டில் சீரமைப்பு நிலவ உதவுகிறது.

5. **பொதுமக்களிடையே நம்பிக்கையை வளர்த்தல் :** அரசியலமைப்பின் திறமை நீதித்துறையின் ஆற்றல் வாய்ந்த செயல்பாட்டை சார்ந்துள்ளது. அரசியலமைப்பில் மக்களுடைய நம்பிக்கையை நிலைநாட்ட வேண்டியது நீதித்துறையின் பொறுப்பாகும். இது சட்டத்தின் கண்ணோட்டத்தில் எல்லோரும் சமம் என்ற கொள்கையை அது உயிரோடு வைத்திருக்கிறது.

   'தேசத்தின் சமுதாய மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வலுவற்றதாகவும் ஏழைகளுக்கு ஆதரவாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதே நீதித்துறையின் விருப்பம்' என்ற ஜஸ்டீஸ் பகவதி அவர்களின் அறிக்கை நீதித்துறையின் முக்கியத்துவத்தை இருமடங்காக்குகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

அமைப்பு முறை

நீதித்துறையின் அமைப்பு ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு வேறுபடுகிறது. ஒவ்வொரு நாடும் தத்தம் அரசியல் முறைக்குப் பொருந்தும் வகையில் நீதித்துறையை அமைத்துக் கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் தனித்துவ நீதித்துறை அமைப்பு முறை இருக்குமெனில், மற்ற சில நாடுகளில் ஒருங்கிணைந்த நீதித்துறை அமைப்பு முறையைக் காணமுடியும்.

தனித்துவ நீதித்துறையின் அமைப்பு முறை :

தனித்துவ நீதித்துறை அமைப்பில் நாட்டிற்குள் இருக்கும் நீதித்துறைகள் அனைத்தும் படிநிலைக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு செயல்படுகின்றன - தனித்துவ நீதித்துறை அமைப்பைப் பெற்றுள்ள நாடுகளில் மையத்திற்குத்

தொடர்பான விவாதங்களை உச்ச நீதி மன்றம் தீர்த்து வைத்தால், மாநிலத்திற்குத் தொடர்பான விவாதங்களை மாநில உயர் நீதி மன்றங்கள், மாவட்டங்களுக்குத் தொடர்பானவற்றை செஷ்ஷன் நீதிமன்றங்கள் தாலுக்கா அளவில் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் என நீதியை முடிவு செய்கின்றன. இவை அனைத்தும் ஒரு கட்டளைக்கு அடிபணிகின்றன. எ.கா. இந்தியா, கனடா.

கீழ்நிலை நீதிமன்றங்கள் நீதி. வழங்கும் நேரங்களில் உச்ச நீதி மன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிகளை மாதிரியாக வைத்துக்கொள்கின்றன. உச்ச நீதிமன்றமே நீதிகளை மாதிரிகளாக வைத்துக்கொண்டுள்ளது. உச்ச நீதிமன்றமே இறுதி மேல்முறையீட்டிற்கான நீதிமன்றமாகும். அனைத்து வகையான வழக்குகளுக்கும் நீதி வழங்கிய பிறகு அவற்றின் மறுபரிசீலனை செய்ய உச்ச நீதி மன்றத்தை அணுகுவது இங்கு கட்டாயமாகும். உச்ச நீதி மன்றம் வழங்கிய நீதிகளின் மறுபரிசீலனை செய்யக்கூடிய மற்ற எந்த நீதிமன்றங்களும் இங்கு இல்லை.

ஒருங்கிணைந்த நீதித்துறையின் அமைப்பு :

ஒருங்கிணைந்த நீதிமன்ற அமைப்பு முறையில் மையத்திலும் மாநிலங்களிலும் தனித்தனியான மற்றும் சுதந்திரமான நீதித்துறை அமைப்பு முறையைப் பெற்றுள்ளது. மாநிலங்களில் உள்ள உயர் நீதி மன்றங்கள் மாநிலங்களுக்குத் தொடர்பான செயல்களை சுதந்திரமாக நிர்வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒருங்கிணைந்த அமெரிக்க நாடுகளின் மையத்தில் உச்ச நீதிமன்றம் உள்ளது. இது அரசியலமைப்பு ரீதியில் அமையப்பெற்றுள்ளது. மாநிலங்களில் உள்ள நீதிமன்றங்கள் மத்திய சட்டமன்ற சபை (காங்கிரஸ்)யின் கட்டளைகளின் படி அமைக்கப்பட்டுள்ளன. இவை மாநிலங்களில் சுதந்திரமாக செயல்படுகின்றன.

சுவிட்சர்லாந்திலும் ஒருங்கிணைந்த நீதித்துறை அமைப்பு உள்ளது. மையம் மற்றும் மாநிலங்கள் இரண்டும் சுதந்திர நீதித்துறை அமைப்பைப் பெற்றுள்ளன. நீதிபதிகளை அங்குள்ள ஃபெடரல் அஸெம்பிலி தேர்ந்தெடுக்கிறது. அரசியலமைப்பு சட்டங்களையும் கையாள்கிறது. இதன்மூலம் நாட்டின் சீரமைப்பை பாதுகாப்பதில் உதவி செய்கிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

நீதித்துறையின் செயல்பாடுகள்

நீதித்துறை அரசாங்க அமைப்பு முறையில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இது நியாயமான பணிகளைச் செய்து சமுதாயத்தின் முழுமையான வளர்ச்சிக்கும் பாடுபடுகிறது. இவற்றின் செயல்பாடுகளாவன.

1. ***சட்டங்களை விளக்குதல் :*** நீதித்துறையும் தெளிவற்ற மற்றும் மிகவும் எளிமையான சட்டங்களைத் தேவைக்கேற்ப விளக்குகிறது. நாமும் அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் உள்ளோம். ஆனால் அரசியலமைப்பு நீதிபதிகள் கூறியது போல .... என்ற ஜஸ்டீஸ் ஹியூக்ஸ் அவர்களின் கூற்று இதை நியாயப்படுத்துகிறது.
2. **நீதியின் முடிவு :** நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி நீதி வழங்க வேண்டியது நீதித்துறையின் முக்கிய செயல்பாடு ஆகும். இது மனிதன் - மனிதர்களிடையே அல்லது மனிதன் - அரசாங்கத்திற்கிடையே அல்லது மாநிலம் - மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை சட்டப்படி தீர்த்துவைக்கும் செயல்பாட்டை மேற்கொள்கிறது.
3. **கட்டளைகளை வெளியிடுகிறது :** குடிமக்களின் உரிமைகளுக்கு பங்கம் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம். அவருடைய உரிமைகளின் பாதுகாப்பிற்காக நீதிமன்றம் கட்டளைகளைப் பிறப்பித்து உரிமைகளைப் பாதுகாக்கிறது. இவற்றை 'ரிட்' கட்டளைகள் என்பர்.
4. ***ஆலோசனை வழங்குதல் :*** இந்தியா போன்ற நாட்டில் சிக்கலான வினாக்கள் எழும்போது நீதிமன்றம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகிறது. ஆயினும் இச்செயல்பாட்டை அரசாங்கம் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. இது அமெரிக்காவிலும் நடைமுறையில் உள்ளது.
5. **நியாயமான விமர்சனம் :** சட்டமன்றத்தினால் அமைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஆட்சித்துறையினால் வெளியிடப்பட்ட கட்டளைகள் அரசியலமைப்பின் நெறிமுறைகளின்படி பரிசோதித்து அவற்றின் செல்லுமை மற்றும் செல்லாத்தன்மையை அறிவிக்கும் அதிகாரமே நியாயமான விமர்சனம் ஆகும். சட்டமன்றம் மற்றும் ஆட்சித்துறை தமது அதிகாரங்களின் தவரான பயன்பாட்டைத் தடுக்க நீதித்துறை

NOT TO BE REPUBLISHED @KTBS

நியாயமாக விமர்சிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. எ.கா : அமெரிக்கா, இந்தியா.

மொத்தத்தில் நீதித்துறையானது ஒட்டுமொத்த சமுதாயத்தின் சமாதானத்தைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் பெற்றுள்ளது. இது சட்டமன்றத்தின் சட்டங்கள், ஆட்சித்துறையின் கட்டளைகளை குடிமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பார்த்துக்கொள்கிறது. ஆகவே சுதந்திரமான, நடுநிலை தவறாத மற்றும் பயமில்லாத நிதித்துறை ஆரோக்கியமான சமுதாயத்தின் விளக்காக திகழ்கிறது.

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. நீதித்துறையின் அடிப்படைச் சொல் ....
2. உரிமைகளின் பாதுகாவலன் என்று .... யை அழைக்கிறோம்.
3. நாம் அரசியலமைப்பின் கீழ் இருக்கிறோம், ஆனால் நீதிபதிகள் கூறியதுபோல என்றுரைத்தவர் ....
4. உச்ச நீதி மன்றத்தின் இன்றைய முக்கிய நீதிபதியவர்கள் ....

II. ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும்.

5. நீதித்துறையின் இரண்டு முக்கியத்துவங்களைப் பட்டியலிடுக.
6. நீதித்துறையின் ஏதேனும் இரண்டு செயல்களைக் குறிப்பிடுக.

செயல்பாடுகள்

* உங்கள் வகுப்பில் போலி நீதிமன்றத்தை அமைத்து விவாதிக்க.
* உங்களுக்கு அருகிலுள்ள நீதிமன்றத்திற்கு சென்று அதன் செயல்பாடுகளைக் காண்க.

©KTBS NOT TO BE REPUBLISHED

குடிமையியல்	
பாடம் 10	ஒன்றிய அரசு (மைய அரசு)

Z8M5Y9

பாட அறிமுகம் : இப்பாடத்தில் சட்டமன்ற மற்றும் மத்திய அரசின் நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இதோடு கூட, பாராளுமன்ற உறுப்பினரின் தகுதிகள் மற்றும் செயற்பாடுகளும், குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமரின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள், அமைச்சரவையின் அமைப்பு மற்றும் செயற்பாடுகளும் விவரிக்கப் பட்டுள்ளன.

திறன்கள்

1. ஒன்றிய அரசின் அமைப்பு முறை மற்றும் செயற்பாடுகளை அறிந்துக் கொள்ளுதல்.
2. சட்ட மன்றம் மற்றும் ஆட்சித்துறை செயலகத்தின் கட்டமைப் புகளை ஆய்ந்தறிந்து அவற்றின் அதிகாரங்களையும் அறிந்துக் கொள்ளுதல்.
3. மக்களவை மற்றும் மாநிலங்களவையின் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் அறிந்து கொள்ளுதல்.
4. குடியரசுத்தலைவர்மற்றும்பிரதமமந்திரியின்அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் தெரிந்து கொள்ளுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்திய ஒன்றியம் : இந்தியா 28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒன்றிய அரசை மத்திய அரசு என்றழைக்கிறோம். மத்திய அரசு மூன்று ஆட்சிப் பிரிவுகளைப் பெற்றுள்ளது.

சட்ட மன்றம்: சட்டங்கள் அல்லது சட்டங்களை உருவாக்கும் உறுப்பு மற்றும் அது நிர்வாகத்தை கட்டுக்குள் வைத்திருக்கவும் செயல்படுகிறது.

ஆட்சித்துறை செயலகம் : இத்துறை நிர்வாகத்தின் மூலம் சட்டங்களை செயல்படுத்துகிறது.

நீதித்துறை : இத்துறை தீர்ப்புகளை வழங்குகிறது.

> நீதித்துறை ஆனது அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்குத் தொடர்பான விளக்கங்களையும் முடிவுகளையும் கொடுக்கிறது. இது சிக்கல்களைத் (சச்சரவுகள்) தீர்க்கிறது (எ.கா தனிமனிதர்களுக்கு இடையே, தனிநபர் மற்றும் மாநிலத்திற்கிடையே, அரசாங்கம் - அரசாங்க்திற்கிடையே முதலியன).

இவ்வுறுப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன? அவற்றின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் என்ன? இதைப் பற்றி அறிந்து கொள்வோம்.

மைய சட்டமன்றம்

ஒன்றிய சட்டமன்றம், 'நாடாளுமன்றம்' அல்லது 'பாராளுமன்றம்' என்றழைக்கப் படுகிறது. இந்திய பாராளுமன்றம் இந்திய குடியரசுத் தலைவரையும் இரண்டு அவைகளையும் கொண்டுள்ளது. இரண்டு அவைகள் மக்களவை (ராஜ்யசபா, லோக் சபா) மற்றும் மாநிலங்களவை ஆகும். மக்களவை தன்னுடைய சபைகளை புதுதில்லியில் உள்ள 'பார்லிமென்ட்பவன்' இல் நடத்துகின்றது. இங்கு மக்களவை உறுப்பினர்கள் வெவ்வேறு பிரச்சனைகளுக்குத் தொடர்பான விவாதங்களை நடத்தி நாடு முழுவதுக்கும் பொருந்தக் கூடிய சட்டங்களை இயற்றுகின்றனர்.

மக்கள் அவை : மக்கள் அவை நாடாளுமன்றத்தின் கீழ்சபை ஆகும். 18 வயது நிரம்பிய குடிமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மக்கள் சபையின் அதிக பட்ச உறுப்பினர் எண்ணிக்கை 552 ஆகும்.

மக்களவை உறுப்பினர்கள் : மக்களவை உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மக்களவை உறுப்பினர் எத்தனை முறை வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம். ஐந்தாண்டுகள் முடிவடைந்ததும் மக்களவையின் பதவிக்காலம் முடிவடைகிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

மக்களவை உறுப்பினர்களின் தகுதிகள்:

1. இந்திய குடிமகனாக இருந்தால் மட்டுமே மக்களவை உறுப்பினராக முடியும்.
2. குறைந்தது 25 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
3. அரசாங்க ஊழியராக இருக்கக்கூடாது.
4. மனநலம் குன்றி இருக்ககூடாது
5. நீதித் துறையின் சட்டத்திற்கு முன் குற்றவாளியாக இருக்கக் கூடாது.
6. அவர் தம் கடன்களைக் தீர்க்க வகையற்றவராக (திவாலாக) இருக்கக்கூடாது.
7. மக்களவை அவ்வப்போது பரந்துரைக்கும் தகுதிகள் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.

மக்களவைத் தலைவர்: மக்களவை உறுப்பினர்கள் தம்மில் ஒருவரை மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். மக்களவைத் தலைவரின் பதவி மரியாதைக்குரியது. அவருடைய கடமைகள் கீழ்வருமாறு - விவாதிக்க வேண்டிய விஷயங்களைத் தீர்மானிப்பது. அமைதியையும், கண்ணியத்தையும் சம்பிரதாயங்களையும் காப்பது மற்றும் சரியான வகையில் விவாதங்களை நடத்தி முடிவுகளை எடுப்பது.

மாநிலங்களவை: மாநிலங்களவையைப் பாராளுமன்றத்தின் 'மேல் சபை' என்று அழைக்கலாம். மாநிலங்களவையின் அதிகபட்ச எண்ணிக்கை 250 ஆகும். இவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இவர்களில் 238 உறுப்பினர்கள் அனைத்து மாநில சட்ட மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மீதமுள்ள 12 உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

மாநிலங்களவை உறுப்பினர்கள் : மாநிலங்களவை உறுப்பினர்கள் குறைந்த பட்சம் 30 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். இந்திய குடியரசுத் துணைத்தலைவர் மாநிலங்களவையின் தலைவராவார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

உறுப்பினர்களின் உரிமைகள் : மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களை எம்.பி (மெம்பர் ஆஃப் பார்லிமென்ட்) என்று அழைப்பார்கள். இவர்களுக்கு அவையில் பேச்சுரிமை உள்ளது. இவர்கள் சபையில் கூறும் கருத்துக்களை எதிர்த்து எந்த நீதி மன்றத்திலும் வினா எழுப்ப முடியாது.

எதிர்கட்சித் தலைவர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள்

எதிர்க்கட்சித் தலைவருக்கு மரியாதைக்குரிய இடமுண்டு. அவருடைய பங்கு மற்றும் செயற்பாடுகளாவன -ஆட்சியிலுள்ள அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவது, அரசு கொள்கைகள் மற்றும் திட்டங்களை மீள்நோக்குவது, அரசாங்கம், மந்திரி சபை மற்றும் நிர்வாகிகளுக்கு ஏற்ற நேரத்தில் அறிவுறுத்தல்களை வழங்குகிறது.

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

பாராளுமன்றத்தின் முக்கியமான அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளாவன -

1. சட்டம் இயற்றும் அதிகாரம்: சட்டம் இயற்றுவதே பாராளுமன்றத்தின் முக்கிய செயலாகும். தேவை பட்டால் பாராளுமன்றம் சட்டங்களைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம். முக்கியமாக மத்திய அமைச்சரகத்தின் (பிரதமர் உட்பட) மீது கட்டுப்பாடு வைத்துள்ளது. ஒரு வேளை கொள்கைகள் அதிருப்திகரமாக இருந்தால், பெரும்பான்மையுடன் மந்திரி சபையை நீக்குவது மன்றத்தின் முக்கிய அதிகாரமாகும்.

2. பொருளாதர அதிகாரம் : நீதிக்குத் தொடர்பான அறிக்கை (பில்) முதலில் மக்களவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி மத்திய அரசு எத்தகைய வரிகளையும் வசூலிக்க முடியாது மற்றும் பணத்தை செலவிடவும் முடியாது. நாட்டின் பொருளாதார அமைப்பின் மீது பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு என்று அர்த்தம்.

3. நிர்வாக அதிகாரம்: பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் வினாக்களுக்கு அமைச்சர்கள் பொறுப்புடன் பதில் அளிக்க வேண்டும். உறுப்பினர்கள் அமைச்சர்களின் நடவடிக்கைகளை கவனித்து, அவர்களுடைய தவறுகளையும் அதிகாரத்தின் தவறான பயன்பாட்டையும் சுட்டிக் காட்டி விமர்சிக்கலாம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

4. அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் : பாராளுமன்றத்திற்கு அரசியல் அமைப்பைத் திருத்தம் செய்யும் அதிகாரம் உண்டு.



©KTBS NOT TO BE REPUBLISHED

ஒன்றிய ஆட்சித்துறை செயலகம் : ஒன்றிய ஆட்சித்துறை செயலகம் குடியரசுத் தலைவர், பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவையைக் கொண்டுள்ளது .

குடியரசுத் தலைவர்

இந்தியக் குடியரசின் உயர்ந்த அதிகாரி இந்திய குடியரசுத் தலைவராவார். இவரே இந்தியாவின் முதல் குடிமகனுமாவார். இவர் அதிகாரப் பூர்வமாக குடியிருக்கும் வீட்டை குடியரசுத்

தலைவர் மாளிகை (Rashtrapathi Bhavan) என்றழைப்பர். அனைத்து பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளின் தேர்ந்த உறுப்பினர்களும், மாநில சட்ட மன்றங்களின் தேர்ந்தெடுக்ககப் பட்ட உருப்பினர்களும் கூடி குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக வேண்டும் என்றால் குறைந்தது 35 வயது நிரம்பியிருக்க வேண்டும்-மேலும் மக்களவை உறுப்பினராவதற்குத் தேவையான அனைத்து தகுதிகளையும் அவர் பெற்றிருக்க வேண்டும். அவருடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

புதிய பாராளுமன்றம், புதுதில்லி

குடியரசுத் தலைவர் மாளிகை, புதுதில்லி

@KTBS NOT TO BE REPUBLISHED

அதிகாரங்கள் :

1) குடியரசுத்தலைவர் மக்களவையின் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரை பிரதம மந்திரியாக நியமிப்பார். பிரதம மத்திரியின் சிபாரிசின்படி மற்ற மந்திரிகள் நியமிக்கப்படுகிறார்கள்.

2) எத்தகைய சாசனமும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே சட்டமாகிறது.

3) தற்காப்பு படைகள் மற்றும் போரை அறிவிக்கும் அதிகாரத்தின் மீது அவருக்கு உச்ச அதிகாரம் உள்ளது.

4) உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும் குடியரசுத் தலைவருக்கு உண்டு.

5) மன்னிப்பு வழங்கவும் தண்டனையை குறைக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு.

துணைக் குடியரசுத் தலைவர் : நாடாளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களும் துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். துணைக் குடியரசுத் தலைவராக, அவருக்குக் குறைந்தது 35 வயது நிறைந்திருக்க வேண்டும் மற்றும் ஒரு குடியரசுக் தலைவருக்கான எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும் - இவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். இவர் மாநிலங்கள் அவையின் தலைவர். குடியரசுத் தலைவர் இல்லாதபோது அவருடைய செயல்களை துணைக் குடியுரசுத் தலைவர் பார்த்துக் கொள்வார்.

பிரதம மந்திரி

பிரதம மந்திரியின் முக்கியத்துவம்: அரசு நாடாளு மன்ற அமைப்பில் மந்திரியின் பங்கு மிக முக்கியமானது. நாட்டின் பாதுகாப்பைப் பராமரிப்பதில் இவருடைய பங்கு மகத்தானது பிரதமர் :

1. அவர் மக்களவையின் தலைவர் ஆவார்.
2. அமைச்சர் அலுவல்துறைகளைப் பகிர்ந்து கொடுக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு.
3. அவர் அரசாங்கத்தின் தலைவருமாவார்.
4. அமைச்சரவையைக் மாற்றியமைக்க அவருக்கு அதிகாரம் உண்டு.
5. வெவ்வேறு துறைகளுக்கு அமைச்சர்களை நியமனம் செய்யுமாறு குடியரசுத் தலைவர் சிபாரிசு செய்வார்.
6. அமைச்சரை நீக்க குடியரசு தலைவரிடம் பரிந்துரைக்கிறார்.

மைய அமைச்சரவை உருவாக்கம் : மக்களால் தேர்வு செய்யப்பட்ட பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை அரச மைக்க குடியாசுத் தலைவர் அழைத்து அவரை பிரதம மந்திரியாக நியமிக்கிறார். பின்னர் பிரதம மந்திரியின் அறிவுறுத்தலின்படி மற்ற மந்திரிகளை நியமிக்கிறார். பிரதம மந்திரியும் மற்ற மத்திரிகளும் மத்திய அமைச்சரவை (Cabinet) யை அமைக்கிறார்கள். இம்முறையில்

©KTBS NOT TO BE REPUBLISHED

அமையப்பெற்ற அமைச்சரவையை ‘பாராளுமன்ற அமைப்பு’ அல்லது (மந்திரி சபை அமைப்பு) என்று அழைக்கிறோம்.

வெவ்வேறு துறைகளின் அரசியல் தலைவர்கள் மந்திரிகளாவர். அமைச்சகப் பொறுப்புகள் அமைச்சரவை அமைப்பின் சாராம்சமாகும். ஒவ்வொரு அமைச்சரும் தனிப்பட்ட முறையில் தன்னுடைய துறையின் சரியான செயல்பாட்டிற்குப் பொறுப்பாளராவார்.

பிரதம மந்திரி, அமைச்சர்களுக்குத் துறைகளைப் பகிர்ந்து கொடுப்பார். சில சமயங்களில் அவர் எந்த அமைச்சரையும் ராஜினாமா செய்யக் கேட்கலாம். பிரதமர் பதவியைத் விலகும்போது அமைச்சரவை கலைக்கப்படும். அமைச்சரவை மக்களவைக்கு கீழ்படிந்துள்ளது. மக்களவையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்தால் அமைச்சரவை டிஸ்மிஸ் செய்யப்படும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

அறிந்துக்கொள்க :

- புதுடில்லியின் பாராளுமன்ற பவன், குடியரசுத் தலைவர் மாளிகை போன்ற பிரம்மாண்ட கட்டடங்கள் ஆங்கிலேய நிர்வாகக் காலத்தில் கட்டப்பட்டவையாகும். குடியரசுத் தலைவர் மாளிகையில் 340 அறைகள் உள்ளன. 1929 ஆம் ஆண்டு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.
- மத்திய விரிவாக்க திட்டத்தின் ஒரு பகுதியாக புதிய பாராளுமன்ற கட்டிடம் கட்டப்பட்டு 28.05.2023 அன்று திறக்கப்பட்டது. இது 888 இருக்கைகள் கொண்ட மக்களவை அரங்கையும் 384 இருக்கைகள் கொண்ட இராஜ்யசபா அரங்கையும் கொண்டு உள்ளது.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் ஊதியமும் மற்றும் பணித்துறை சலுகைகள் பெறுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கைபேசி, தொலைபேசி, அலுவலக செலவுகள், சாலை மைலேஜ் சலுகைகளையும், இலவசமின்சாரம் தண்ணீர் மற்றும்

உள்ளூர் தொலைபேசி அழைப்புகள் போன்ற வசதிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பயிற்சிகள்

I. வெற்றிடங்களை பொருத்தமான வார்த்தையால் நிரப்பவும்.

1. இந்திய குடியரசின் உயர் அதிகாரி ....
2. பாராளு மன்றத்தின் இரு அவைகள் .... மற்றும் ....
3. பாராளு மன்றத்தின் கீழ் சபை .... என்று அழைக்கப்படுகிறது.
4. ராஜ்யசபா உறுப்பினர்களின் பதவிகாலம் .... ஆண்டுகள்.

II. குழுக்களில் கலந்தாய்வு செய்து விடையளிக்க.

5. மைய அரசின் மூன்று ஆட்சிப்பிரிவுகள் யாவை? அவற்றின் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
6. மக்களவை உறுப்பினராவதற்குத் தேவையான தகுதிகள் யாவை?
7. அரசியலமைப்பை திருத்தும் அதிகாரம் யாருக்கு உண்டு?
8. குடியரசு இந்தியாவில் மிக உயர்ந்த பதவி யாருடையது ?
9. பிரதம மந்திரியின் முக்கியத்துவம் என்ன?
10. மத்திய அமைச்சரவை எவ்வாறு உருவாக்கப் பட்டது.

III. கலந்துரையாடுக :

மக்களவை உறுப்பினர்கள் திறம்பட பணி செய்ய நாம் என்ன செய்யலாம் ?

செயல்பாடுகள் :

1. உங்கள் தொகுதி மக்களவை உறுப்பினரை சந்தித்து அவருடைய கடமைகள் மற்றும் செயற்பாடுகளைப் பற்றி மேலும் அறிந்துக்கொள்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

2. உங்கள் பள்ளியில் மாதிரி மக்களவையை ஏற்படுத்தி சபை நடவடிக்கைகளை மக்களவையில் நடைபெறுவது போலவே செய்து விவாதிக்க.

3. இந்திய பிரதம மந்திரிகளின் பட்டியலைத் தயாரித்து பள்ளியில் காட்சிபடுத்துக.

இந்திய ஒன்றியம்.

28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பகுதிகள் (தலைநகரங்கள் அடைப்புக்குள் கொடுக்கப் பட்டுள்ளன)

மாநிலங்கள்

1. ஆந்திரப் பிரதேசம் (அமராவதி)
2. அருணாசலப் பிரதேசம் (இட்டாநகர்)
3. அஸ்ஸாம் (திஸ்பூர்)
4. பீகார் (பாட்னா)
5. கோவா (பணஜி)
6. குஜராத் (காந்திநகர்)
7. ஹரியானா (சண்டிகர்)
8. ஹிமாசலப் பிரதேசம் (சிம்லா)
9. கருநாடகம் (பெங்களூரு)
10. கேரளம் (திருவனந்தபுரம்)
11. மத்தியப் பிரதேசம் (போபால்)
12. மகாராஷ்டிரம் (மும்பை)
13. மணிப்பூர் (இம்பாலா)
14. மேகாலயா (ஷில்லாங்)
15. மிசோராம் (ஐச்வால்)
16. நாகாலாந்து (கோஹிமா)
17. ஒடிஷா (பூபனேஷ்வர்)
18. பஞ்சாப் (சண்டிகர்)
19. ராஜஸ்தான் (ஜெய்பூர்)
20. சிக்கிம் (காங்டாக்)
21. தமிழ்நாடு (சென்னை)
22. திரிபுரா (அகர்தலா)
23. உத்திரப் பிரதேசம் (லக்னோ)
24. மேற்கு வங்காளம் (கொல்கத்தா)
25. சத்தீஸ்கர் (ராய்ப்பூர்)
26. ஜார்கண்ட் (ரான்ச்சி)
27. உத்தரகன்டா (டெஹராடன்)
28. தெலங்காணா (ஹைதராபாத்)

ஒன்றியப் பகுதிகள்

1. ஜம்மு காஷ்மீர் (ஸ்ரீநகர் - கோடைக்காலம், ஜம்மு - குளிர்க்காலம்)
2. லடாக் (லேஹ்)
3. அந்தமான் நிகோபார் தீவுகள் (போர்ட் பிளேர்)
4. சண்டிகர் (சண்டிகர்)
5. தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி தாமன் மற்றும் தியு (சில்வாஸா)
6. லக்ஷத் தீவுகள் (கவரத்தி)
7. புதுச்சேரி (புதுச்சேரி)
8. தில்லி (நாட்டின் தலைநகர, பிரதேசம்).

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 11 மாநில அரசு

F4E7U4

பாட அறிமுகம் : இப்பாடத்தில் மாநில அரசின் ஆட்சிப் பிரிவுகளான சட்ட மன்றம், ஆட்சித்துறை செயலகம் மற்றும் நீதித்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதனுடன் இருசபைமுறை, சட்ட கீழ் சபை மற்றும் மேல்சபையின் முக்கியத்துவம் விளக்கப்பட்டுள்ளன. சட்ட மன்ற உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் செயற் பாடுகள் மற்றும் முக்கிய மந்திரி மற்றும் ஆளுநரின் தகுதிகளும் செயற்பாடுகளும் மற்றும் அதிகாரங்கள் பற்றியும் கூட இங்கு விளக்கப்பட்டுள்ளன.

திறன்கள்:

1. மாநில அரசின் அமைப்பு முறையையும் செயல்பாடுகளையும் அறிதல்.
2. மாநில அரசின் அதிகார வரம்பினை அறிதல்.
3. மாநிலங்களவையை சட்ட மேலவையுடன், மக்களவையை சட்டப் பேரவையுடன் ஒப்பிடுதல் மற்றும் அதன் செயற்பாடுகளைப் புரித்துக் கொள்ளுதல்.
4. ஆளுநரின் தகுதிகள் மற்றும் அதிகாரம் மற்றும் முதல் அமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளையும் அறிந்துக் கொள்ளுதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

கீழ்க்காணும் படங்களைக் கவனிக்க.

சட்ட மன்ற கூட்டத்தொடர்

சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவை சட்டங்களை (சாசனங்களை) இயற்றுகிறது. (சட்டமன்றம்)

விதான சௌதா பெங்களூரு

கருநாடக உயர் நீதி மன்றம் பெங்களூரு

சுவர்ண சௌதா, பெளகாவி

NOT TO BE REPUBLISHED
© KTBS

மாநிலங்களில், மாநில அரசுகள் உள்ளன. இவற்றிற்குரிய அதிகாரங்கள் குறைவு. ஆயினும் அவற்றிற்கே உரிய தனித்துவ தன்னாட்சி உள்ளது. மாநிலங்கள், முக்கியமாக மொழியின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. கருநாடகத்தில் கன்னடம் மாநில மொழியாகும்.

நம்முடைய அரசியலமைப்பு அனைத்து மாநிலங்களிலும் ஒரே வகையான மாநில ஆட்சியை ஏற்படுத்தியுள்ளது. மைய அரசின் மாதிரியில் மாநில அரசுகளும் உள்ளன.

மாநில சட்டமன்றம்

மாநில அரசின் மூன்று ஆட்சிப் பிரிவுகள் சட்ட மன்றம், ஆட்சித்துறை செயலகம் மற்றும் நீதித்துறை ஆகும். ஆளுநரும் மாநில சட்டமன்றமும் (இரண்டு அவைகள்) இணைந்து மாநில அரசை அமைக்கின்றன, சட்டமன்றம் மாநிலத்தின் சட்டங்களை உருவாக்குகிறது.

இந்தியாவில் ஆறு மாநிலங்களில் மட்டுமே சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவை என்ற இரண்டு அவைகள் உள்ளன. இரு அவைகள் இருப்பதால் சட்ட மன்றம் 'இருசபை முறை' என்றழைக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் சட்டப் பேரவை மட்டுமே உள்ளது. இத்தகைய சட்டமன்றம் 'ஓரவை முறை' என்று அழைக்கப்படுகிறது கருநாடக மாநிலத்தில் இரு சபை முறை உள்ளது.

சட்டப் பேரவை (கீழ்சபை)

அமைப்பு : மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் அவையே சட்டப் பேரவை (கீழ்சபை) ஆகும். கருநாடகப் பேரவையில் 224 இடங்கள் உள்ளன.

> சட்ட பேரவைக்கு ஆளுநர் ஆங்கிலோ இந்தியன் சமூகத்தை சேர்ந்த ஒருவரை ஆளுநர் உறுப்பினராக நியமிப்பார்.
>
> இதற்கு முன் சட்ட பேரவைக்கு ஆங்கிலோ இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை உறுப்பினராக நியமிக்க ஆளுநருக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் 2020 இன் 104 வது அரசியலமைப்பு திருத்தத்தின் படி இந்த வாய்ப்பு தொடரவில்லை.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் (MLA) தமக்குள் ஒருவரை சபைத் தலைவராக (சபாநாயகராக) தேர்த்தெடுக்கிறார்கள். சட்டப்பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இது நிரந்தரமான சபையல்ல. சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதிகளாவன -

- இந்திய நாட்டின் குடிமகனாக இருக்க வேண்டும்.
- 25 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- அரசாங்கப் பணியிலோ, அரசாங்க ஊதியம் பெறுபவராகவோ இருக்கக் கூடாது.
- கடன் தீர்க்க வகையற்றவராக இருக்கக்கூடாது.

சட்டப் பேரவை உறுப்பினர்களின் (MLA) பொறுப்புகள்: தத்தம் தொகுதி மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் சிக்கல்களுக்குத்தீர்வு காண்பதே சட்டப் பேரவை உறுப்பினர்களின் தலையாய பொறுப்பாகும். தம்முடைய தொகுதிகளின் நலத்திட்டங்களில் அவர் நல்ல வகையில் கவனம் செலுத்தவும். தடையின்றி நற்பணிகளைச் செய்வதற்கு அவர்களுக்கு மாதச் சம்பளம் மற்றும் சில வசதிகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் சில உரிமைகளும் சலுகைகளும் பெற்றுள்ளனர்.

சட்டப் பேரவையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் :

- சட்டப் பேரவை என்பது உண்மையில் மாநிலத்தின் சட்ட மன்றம் ஆகும்.

NOT TO BE REPUBLISHED © KTBS

- அனைத்து நிதி விவகாரங்களிலும் பேரவையின் முடிவே இறுதியானது.
- முக்கியமாக மந்திரி சபையின் மீது கட்டுப்பாட்டை வைத்துக் கொள்வது அதன் முக்கிய செயல்பாடாகும். மந்திரி சபையின் செயல்/சட்டங்கள் அதிதிகரமாக இருந்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அமைச்சரவையைக் கலைத்து விடலாம்.
- குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பங்கு கொள்வர்.

சட்ட மேலவை

அமைப்பு : சட்ட மேலவை உறுப்பினர்களின் (MLC) எண்ணிக்கை, சட்டப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 1/3க்கு மூன்றில் ஒரு பங்கிற்கும் மேல் இருக்கக்கூடாது. கருநாடக மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 75 ஆகும். சில உறுப்பினர்கள் மாநில ஆளுநரால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்ற உறுப்பினர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களாலும், உள்ளாட்சி அமைப்புகளாலும், பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சட்ட மேலவை உறுப்பினர்களின் (MLC) பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். உறுப்பினர் குறைந்த பட்சம் 30 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

மாநில ஆட்சித்துறை செயலகம்

மாநில ஆட்சித்துறை செயலகம், மாநில ஆளுநர், முதல் அமைச்சர் மற்றும் அவருடைய அமைச்சரவையால் ஆனது. பொதுவாக அதன் அமைப்பும் நிர்வாகமும் மத்திய ஆட்சித்துறை செயலகத்தின் செயற்பாடுகளையே சார்ந்து உள்ளது.

ஆளுநர்

ஆளுநர், மாநில ஆட்சித்துறை செயலகத்தின் அரசமைப்புத் தலைவராக மட்டுமே இருப்பார். ஆனால் முதல் அமைச்சரே முக்கிய நிர்வாக அதிகாரியாவார். ஆளுநர் குடியரசுதலைவரால்

NOT TO BE REPUBLISHED @KTBS

நியமிக்கப் படுதகிறார். ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

ஆளுநரின் தகுதிகள் :

- இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.
- 35 ஆண்டுகள் நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- பாராளுமன்றம் அல்லது மாநில சட்டசபை உறுப்பினராக இருக்கக்கூடாது.

ஆளுநரின் அதிகாரங்கள் :

- ஆளுநர் முதல் அமைச்சரை நியமித்து அவருடைய ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களை நியமிக்கிறார்.
- சட்டப்பேரவையில் நிறைவேற்றப் படும் மசோதா நடைமுறைக்கு, வருவதற்கு ஆளுநரின் ஒப்புதல் தேவை.
- மாநிலத்தில் அரசியலமைப்பு சார்பு நிலையின்மை ஏற்பட்டால் ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அறிக்கையை வழங்கி மாநில அரசைக் கலைக்கலாம்.
- குடியரசு தலைவர் மாநில அரசைக் கலைத்து, மாநிலத்தில், குடியரசு தலைவர் ஆட்சியின் போது ஆளுநர் மாநிலத்தின் நிர்வாக பொறுப்பை அவரே ஏற்றுக் கொள்வார்.

முதல் அமைச்சர்

மைய அரசின் தலைவராக பிரதம மந்திரி இருப்பது போல, மாநில அரசின் தலைவர் முதல் அமைச்சராவார். சட்ட சபை தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழுவின் தலைவரை ஆளுநர் (கவர்னர்) முதல் அமைச்சராக நியமிக்கிறார்.

முதல் அமைச்சரின் அதிகாரங்களும் செயற்பாடுகளும்.

- முதல் அமைச்சரின் ஆலோசனை பெற்று ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- மற்ற அமைச்சர்களுக்குத் இலாகாக்களை ஒதுக்கவும் மாற்றவும் முதலமைச்சருக்கு அதிகாரம் உள்ளது.
- அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரமும் முதல் அமைச்சருக்கு உண்டு.

@KTBS NOT TO BE REPUBLISHED

- மைய அரசுக்கும் மாநிலத்திற்கும் இடையே நல்லுறவைப் பேணுவதில் முதல் அமைச்சர் முக்கியப் பங்கு வகிக்கிறார்.

சுருக்கமாகக் கூறினால், ஒரு மாநிலத்தின் முன்னேற்றம் முதல் அமைச்சரின் நல்லாட்சியைச் சார்ந்துள்ளது.

பயிற்சிகள்

I. வெற்றிடங்ளை பொருத்தமான வார்த்தை நிரப்பவும்.

1. ஆசிரியர்களின் பிரதிநிதிகள் .... சபையின் உறுப்பினர்கள்.
2. சுவர்ண சௌதா .... நகரத்தில் உள்ளது.
3. சட்டமன்ற நடவடிக்கைகள் .... தலைமையில் நடைபெறும்.
4. ஆளுநர் .... என்பவரால் நியமிக்கப்படுகிறார்.
5. கர்நாடக சட்டபேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை ....

II. குழுக்களில் கலத்துரையாடி விடையளிக்க.

6. இரு சபை முறை என்றால் என்ன?
7. உங்கள் தொகுதியின் MLA யார் ?
8. ஆளுநரின் ஏதேனும் மூன்று அதிகாரங்களை எழுதுக.
9. முதல் அமைச்சரின் முக்கியமான அதிகாரங்களும் செயற்பாடுகளும் யாவை?
10. சட்டபேரவையின் (MLA) யின் கடமைகள் யாவை?

NOT TO BE REPUBLISHED @KTBS

செயற்பாடுகள் :

1. சட்டப் பேரவை மற்றும் சட்டமேலவை கூட்டத்தொடரை உங்கள் பெற்றோருடன் விதான சௌதாவிற்கு சென்று காண்க அல்லது தொலைக்காட்சியில் கண்டு அறிந்து கொள்க.
2. உங்கள் தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை சந்தித்து அவர்களுடைய பணிகளைப் பற்றி கேட்டறிக.
3. கருநாடக முதல் அமைச்சர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அதைக் காட்சிப் பலகையின் மீது இடுக.

புவியியல்

பாடம் 12	இந்தியாவின் இயற்கைப் பிரிவுகள்

பாட அறிமுகம் :

இப்பாடத்தில் நமது நாடு இந்தியா (தாய் நாடு) மற்றும் நமது மாநிலம் கருநாடகம் என்பதை தெளிவுப்படுத்துதல், உலகத்தில் இந்தியாவின் இருப்பிடம், அளவு, பரப்பு, அதன் இயற்கை அமைப்பை பற்றி தெரிந்து கொள்ளுதல், நமது மாநிலம் கருநாடகம், அதன் இருப்பிடம், பரப்பு, அண்டை மாநிலங்கள், கருநாடகத்தின் இயற்கைப் பிரிவுகளின் கருக்கமான தகவல் மற்றும் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்.

திறன்கள்

1. இந்தியா மற்றும் கருநாடகத்தின் புவியியல் இருப்பிட பின்னணியை பற்றி புரிந்துக் கொள்ளுதல்.
2. இந்தியா மற்றும் கருநாடக மாநிலத்தின் பல்வேறு இயற்கை பிரிவுகளை அறிந்து கொள்ளுதல்.
3. இந்தியாவின் பாலைவனம் மற்றும் தீவுக் கூட்டங்களைப் பற்றி தெரிந்துகொள்ளுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

1. இந்தியா : இருப்பிடம்

இந்தியா முழுவதுமாக வட அரைகோளத்தில் உள்ளது மற்றும் தென் ஆசியாவின் தீப கற்பமாக அமைந்துள்ளது. இந்தியா பரப்பளவில் 7 வது பெரிய நாடாகும் மற்றும் ஜனத்தொகையில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது. ஆனால் 2022ல் ஐக்கிய நாடுகள் சபை முன் வைத்துள்ள தற்போதைய புள்ளி விவரத்தின் படி உலக அளவில் இந்தியா முதல் இடத்தில் இருப்பதாக விவாதங்கள் எழுந்துள்ளன. வடக்கே, காஷ்மீர் முதல் தெற்கே கன்னியாகுமாரி வரையிலும், மேற்கே (Rann of kuch) கச், கிழக்கே அருணாச்சலப் பிரதேசம் வரையிலும் பரவியுள்ளது. 8°N வட அட்சரேகையிலிருந்து 37°N வட அட்சரேகை வரையிலும், 68°E கிழக்கு 97°E கிழக்கு தீர்கரேகை வரையிலும் பரந்துள்ளது. மத்திய இந்தியாவின் மூலமாக கடகரேகை பாய்ந்து செல்கிறது.

இந்தியாவின் அண்டை நாடுகளாவன வடமேற்கே பாகிஸ்தான மற்றும் ஆப்கானிஸ்தான், வடக்கே நேபாளம் பூடான் மற்றும் சீனா மற்றும் கிழக்கே வங்காளதேசம் மற்றும் மியான்மர் நாடுகள் உள்ளன. தென்கிழக்கே ஸ்ரீலங்கா (இலங்கை) நாடு இருந்து, அதை பாக் ஜலசந்தியும் மன்னார் வளைகுடாவும் இந்தியாவிலிருந்து பிரிக்கின்றன.

இந்தியாவை சுற்றியுள்ள நீர் நிலைகள் கிழக்கே வங்காள விரிகுடா, மேற்கே அரபிக்கடல் மற்றும் தெற்கே இந்துமகா சமுத்திரம் ஆகியவற்றால் இந்தியா சூழப்பட்டுள்ளது. ஆகையால் இந்தியா நீண்ட கடற்கரைகள் மற்றும் தீவுகளைக் கொண்டு உள்ளது.

©KTBS
NOT TO BE REPUBLISHED

இந்தியா 28 மாநிலங்கள், 8 ஒன்றியப் பகுதிகளைப் பெற்றுள்ளது மற்றும் புது தில்லி அதன் தலைநகரமாகும்.

இந்தியாவின் இயற்கைப் பிரிவுகள்: இந்தியா பலதரப்பட்ட இயற்கை அமைப்புகளைப் பெற்றுள்ளது. நில இயல்பின் அடிப்படையில் இந்தியா நான்கு முக்கிய இயற்கைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. வடக்கு மலைத்தொடர்கள்
2. வடக்கு சமவெளிகள்
3. தக்காணப் பீடபூமி
4. கடலோரப் பகுதிகள்.

1. வடக்கு மலைத் தொடர்கள்

இப்பகுதி அதிகமாக இமயமலைப் பகுதிகளை உள்ளடக்குகிறது. தேசத்தின் வடக்கு, வடகிழக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு இமய மலை இயற்கை எல்லையாக அமைத்துள்ளது. இது உலகிலேயே மிக உயரமான மலையாக இருந்து, பனியால் மூடப்பட்டுள்ளது. பல உயர்ந்த சிகரங்கள், ஆழமான பள்ளத்தாக்குகள், கனவாய்கள், பனியாறுகள், உயரமான மலைத் தொடர்களால் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள மௌன்ட் எவரெஸ்ட் சிகரம் (8848 மீ) -உலகத்திலேயே உயரமானது, ஆனால் மௌன்ட் காட்வின் ஆஸ்டின் அல்லது மௌன்ட் K2 (8611மீ) இந்தியாவின் உயரமான சிகரம் ஆகும்.

NOT TO BE REPUBLISHED @TRS

நமது நாட்டின் பொருளாதாரத்தில் இமயமலையின் பங்கு மிக முக்கியமானதாகும். அது இயற்கை எல்லையாக அமைந்து மத்திய ஆசியாவிலிருந்து வீசும் ஈரக்காற்றை தடுக்கின்றது மற்றும் (பருவ) மான்சூன் காற்றை தடுத்து அதிக மழை பொழிவதற்கு காரணமாகிறது. பல நதிகளின் பிறப்பிடமாகவும் பல மலைத்தொடர்களுக்கு நிலையாகவும் விளங்குகிறது.

2. வடக்கு சமவெளிகள்

இவை இமய மலைத்தொடர் மற்றும் தக்காண பீடபூமியின் இடையே அமைந்துள்ளன. இமயமலையில் உற்பத்தியாகி இச்சமவெளியில் பாயும் சட்லெஜ், கங்கா, பிரம்மபுத்திரா மற்றும் அவற்றின் கிளை நதிகளால் படிந்த வண்டல் மண்ணால் கட்டப்பட்டுள்ளன. ஆகையால் இச்சமவெளி செழிப்பான விரிந்த மற்றும் அடர்த்தியான சமவெளியாக உள்ளது. இவை

விவசாயம், தொழிற் சாலைகள், போக்குவரத்து, பட்டினம், நகரம் போன்றவைகளின் முன்னேற்றத்திற்கு ஊக்குவிக்கிறது. இந்த அனைத்து நன்மைகள் காரணமாக இச்சமவெளி அதிக மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.



இந்தியாவின் இயற்கை அமைப்புகள்

3. தக்காண பீடபூமி

இந்திய இயற்கை பிரிவுகளில் இது மிக அகலமானதாகும். வடஇந்தியாவின் சமவெளிகளுக்கு தெற்கே அமைந்து பெரும்பாலும் பழங்கால கடினமான பாறைகளால் ஆனவை. நர்மதா - சோனே பிளவு பள்ளத்தாக்கு இந்தப் பகுதியைப் பிரிக்கிறது. ஆகையால் வடக்கு பாகத்தை மாள்வா பீடபூமி என்றும் தென் பாகத்தை தக்காண பீடபூமி என்றும் அழைக்கின்றனர்.

மாள்வா பீடபூமி, வடக்கில் அராவளி மற்றும் தெற்கில் விந்திய மலைகளால் சூழ்ந்துள்ளது. 1772 மீ உயரமுள்ள குரு சிகரம் அராவளி மலைத் தொடரின் மிக உயரமான சிகரமாகும்.

தக்காணப் பீடபூமியின் வடக்கே சாத்புரா, மைக்கலா, அமரகான்டகா மற்றும் ராஜமஹல் மலைகள் மேற்கில் மேற்கு மலைத்தொடர்கள் மற்றும் கிழக்கில் கிழக்கு மலைத் தொடர் வரையிலும் சூழ்ந்துள்ளது. மேலும் மேற்கு தொடர்ச்சி மலைகள் தெற்கு பாகத்தில் அண்ணாமலை, கார்டமம், பழனி மலை வரையிலும் பரவுகிறது. அண்ணாமலையில் உள்ள ஆனைமுடி (2695 மீ) என்பது தெற்கு இந்தியாவில் மிகப் பெரிய சிகரம் ஆகும். மேற்கு மற்றும் கிழக்கு மலைத்தொடர் நீலகிரி மலையில் சந்திக்கின்றன. இங்கு உதக மண்டலம் என்ற மலைப்பிரதேசம் (Resort) உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலையை விட மேற்கு தொடர்ச்சி மலைகள் உயரமானது. தென்னிந்தியாவின் பல ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.

பீடபூமி வளமான கனிம வளங்களைக் கொண்டுள்ளது. இங்கு பாயும் நதிகள் வேளாண்மைக்கு உதவியாக உள்ளன. மற்றும் அநேக நீர்வீழ்ச்சிகளும் இருந்து. இந்நீர்வீழ்ச்சிகள் மின்சாரம் தயாரிக்க உதவியாக உள்ளது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

4. கடலோரப் பகுதிகள்

தக்காண பீடபூமியின் இரு பக்கமும் கடலோரப் பகுதிகள் அமைந்து உள்ளன. அதனை மேற்கு மலைத் தொடர் என்றும் கிழக்கு மலைத் தொடர் என்றும் பிரிக்கலாம்.

மேற்கு கடற்கரை : அரபிக்கடலுக்கும் மேற்கு மலைத்தொடருக்கும் நடுவே உள்ளது. இது கச் (வடக்கில்) லிருந்து (தெற்கே) கன்னியாகுமாரி பூஷிரா வரை பரவியுள்ளது. இது நேராகவும், குறுகிய பாறை அமைப்புடனும் உள்ளது.

கிழக்கு கடற்கரை: வங்காளவிரிகுடா மற்றும் கிழக்கு மலைத் தொடர்களுக்கு நடுவில், வடக்கில் கங்கா நதிக்கரையில் இருந்து தெற்கே கன்னியாகுமாரி வரை பரவியுள்ளது. இது அகலமானது. மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைகளில் முக்கிய துறைமுகங்கள் உள்ளன.

தீவுக் கூட்டங்கள்

இந்தியாவின் மாகாண நீர்நிலைகளில் 247 தீவுகள் உள்ளன. அவைகளில் 204 தீவுகள் வங்காளவிரிகுடா கடலில் உள்ளன. அவை அந்தமான் - நிக்கோபார் தீவுகள் என்று அழைக்கப்படும். மற்ற 43 தீவுகள் அரபிக்கடலில் உள்ளன. அத்தீவுகளை லட்சத்தீவுகள் என்று அழைப்பர். அந்தமான் நிகோபார் தீவுகள் கடின எரிமலைபாறைகளால் ஆனவை. ஆனால் லட்சத்தீவுகள் ''பவளப் பாறைகளால்'' கட்டப்பட்டவை.

பாலைவனம்

இந்தியாவில் ஒரு பாலைவனம் உள்ளது. இதனை 'தார் பாலைவனம் என்று அழைப்பர்'. இப் பாலைவனம் வட மேற்கு இந்தியாவில் அமைந்துள்ளது. மூன்றில் இரண்டு பகுதியளவு பாலைவனங்கள் இராஜஸ்தானிலும் மற்றவை ஹரியானா, பஞ்சாப் மற்றும் குஜராத்திலும் அமைந்துள்ளன. இப்பாலைவனத்தில் ஒரு சில உப்பு ஏரிகள் உள்ளன. சாதாரண உப்பு தயாரிக்க ஏற்ற ஏரிகள் உள்ளன. (உ-ம்) சாம்பார், திட்வான், சாரகோல் முதலியனவாகும், சாம்பார் ஏரி இந்தியாவின் மிகப் பெரிய உப்பு ஏரியாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

கருநாடகம்-இருப்பிடம்

நமது மாநிலம் கருநாடகம். இந்தியாவின் தென்மேற்கு திசையில் அமைந்துள்ளது. இம்மாநிலம் இந்தியாவில் 8வது பெரிய மாநிலமாகும். இது 11^{0} லிருந்து 18^{0} வட அட்சரேகை வரையிலும், 74^{0} லிருந்து 78^{0} கிழக்கு தீர்க்கரேகைவரையிலும் பரவியுள்ளது.

நமது மாநிலம் நிலம் மற்றும் நீர் எல்லைகளைக் கொண்டுள்ளது. வடக்கில் மகாராஷ்டிரா, கிழக்கில்ஆந்திரா மற்றும் தெலுங்கானா, தென்மேற்கில் கேரளா மற்றும் மேற்கில் அரபிக் கடல் உள்ளது, இந்த மாநிலத்தில் 31 மாவட்டங்கள் மற்றும் 236 தாலுக்காக்கள் உள்ளன.

இந்தியாவில் - கருநாடகம்

©KTBS NOT TO BE REPUBLISHED

கருநாடகம் - இயற்கை அமைப்பு

கருநாடகம் தக்காணப் பீடபூமியின் ஒரு பகுதியாக இருப்பதால் வெவ்வெறு நில அமைப்புகளை கொண்டு உள்ளது, ஆகையால் நில இயல்பின் அடிப்படையில் கர்நாடகத்தை மூன்று இயற்கை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. கடலோரப் பகுதிகள் *2.* மலைப் பிரதேசம்.

3. சமவெளிகள்

1. கடலோரப் பகுதி: இது கருநாடகத்தின் மேற்கு பகுதியாகும், மலைப்பிரதேசம் மற்றும்அரபிக்கடலின் நடுவே இப்பகுதி

அமைந்துள்ளது. இதன் வடக்கே கோவா, கடற்கடையிலிருந்து தெற்கே கேரளா கடற்கரைவரை (324 கீ.மீ) சூழ்ந்துள்ளது. இதில் வடகன்னடா, உடுப்பி மற்றும் தென் கன்னட மாவட்டாங்களின் கடலோரப் பகுதியும் சேர்ந்துள்ளது.



கருநாடக இயற்கை அமைப்பு

@KTBS NOT TO BE REPUBLISHED

மாநிலத்தின் கடற்கரைப் பகுதி வடக்கில் குறுகியும் தெற்கில் அகலமாகவும் உள்ளது. கருநாடக மாநிலத்தில் மேற்கு நோக்கி அநேக நதிகள் பாய்ந்து செல்கின்றன. கடலோரப் பகுதிக்கு அருகில் பல தீவுகள் உள்ளன, உ-ம்: செய்ன்ட் மேரிஸ் தீவு (Coconut Islands) முதலியன இக்கடலோர பகுதியில் இந்தியாவின் முக்கியமான துறைமுகங்களில் ஒன்றான புதிய மங்களூரு

துறைமுகம் ஆகும். இதை ''கருநாடகத்தின் நுழைவாயில்'' (Gateway of Karnataka) என்பர்.

2. மலைப்பிரதேசம்: இது மலைக் காடு பிரதேசமாகும், கடலோரப்பகுதி மற்றும் சமவெளிகளுக்கு இடையே அமைந்துள்ளது. இதனை ''சஹயாத்ரி தொடர்' என்றும் அழைப்பர். இப்பகுதி கருநாடகத்தின் மிக முக்கியமான இயற்கை பகுதியாகும், இங்கு அதிக மழை பொழிவதால் அடர்த்தியான காடுகள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன. இங்கு அநேக நதிகள் உற்பத்தியாகின்றன. அழகான நீர்வீழ்ச்சிகள் (உ-ம்: ஜோக் நீர்வீழ்ச்சி) மற்றும் சுற்றுலா பகுதிகள் உள்ளன. மாநிலத்தில் அதிக மழை பெய்யும் ''ஆகும்பே'' இப்பகுதியில் உள்ளது. பல உயரமான மலைகள் இங்கு உள்ளன. அவைகளில் முள்ளய்யன கிரி (**1913** மீ) மிக உயரமான மலை ஆகும்.

3. சமவெளி பகுதி : இது மலைப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்தள்ளது மற்றும் இப்பிரதேசம் மலைப்பாங்கான மேற்பரப்பை கொண்டுள்ளது. இப்பிரதேசத்தின் மத்திய பாகத்தில் துாங்கபத்ரா நதி பாய்வதால் இப்பிரதேசத்தை வடக்கு சமவெளி மற்றும் தெற்கு சமவெளி என்று இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.

i. வடக்கு சமவெளி பிரதேசம் : தட்டையான மேற்பரப்பை கொண்ட ஒரு பரந்த பீடபூமியாக உள்ளது. ஆங்காங்கே சமமான உச்சிகளைக் கொண்ட மலைகள் உள்ளன. சமவெளியின் ஒரு பகுதி கரிசல் மண்ணால் மூடப்பட்ட பசால்ட் பாறைகளால் ஆனது மற்றும் கிழக்கு நோக்கி சாய்ந்துள்ளது. இதை சார்ந்து கிருஷ்ணா, பீமா நதிகள் பாய்கின்றன. வடக்கு சமவெளி மிகவும் குறைவான மழையைப் பெறுகிறது.

ii. தெற்கு சமவெளிப்பிரதேசம்: இதனை மைசூரு பீடபூமி என்றும்- அழைப்பர். இது போதுமான அலை அலையான மலைத் தொடர்களை கொண்டு உள்ளது. அவைகள் : பிளிகிரிரங்கன மலை, மலேமஹாதேஸ்வர மலை, நந்திமலை, சாமுண்டி மலை முதலியன. வடக்கு சமவெளி போல இதுவும் கிழக்கு நோக்கி சாய்ந்துள்ளது, அதனைச் சார்ந்து காவேரி, நதி பாய்கிறது. இப்பகுதியின் பல பாகங்கள் சிவப்பு மண்ணால் ஆனவை. சமவெளி பகுதியை விட இப்பகுதியில் மழை அதிகமாகப் பொழிகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

புதிய சொற்கள்

பீடபூமி, தீபகற்பம், கடலோரப் பகுதி, இயற்கைப் பிரிவுகள், பவளம், மலைப்பிரதேசம், பசால்ட்(கருங்கல்)

அறிந்துக் கொள்க

- 'இந்தியா' என்ற தேசத்தின் பெயரின் மூலம் அறியப்படும் மகாசமுத்திரம் இந்துமகா சமுத்திரம் (Indian ocean)
- கங்கா நதி இந்திய மக்களின் புனித நதியாகும்.
- நம் நாட்டின் மத்திய பகுதியில் $82\frac{1}{2}^{0}$கிழக்கு அட்சரேகை பாய்ந்து செல்வதால் இந்தியாவின் நிலையான நேரம் (Indian Standard time) நிர்ணயிக்கப்படுகிறது.
- வட கன்னட மாவட்டத்தில் உள்ள யானா மலை இரண்டு பாறை மலைகளால் ஆனது. இம்மலையின் பள்ளத்தாக்குகளில் நீர் ஓடை உள்ளது, இப்பகுதி முழுவதும் காடுகளால் சூழ்ந்து, இது ஒரு சுற்றுலா தலமாக விளங்குகிறது.
- ஆப்பிரிக்காவில் உள்ள பாட்டில் வடிவ ராட்சபயோபாப் மரம் (Baobab tree) மரத் தோப்பு ஹாவேரி மாவட்டத்தில் உள்ள சாவனூரில் உள்ளது. (இதை கோரக்நாத் மரம் என்று அழைப்பர்).
- பிஜாப்பூரில் மற்றும் பாகலகோட்டே மாவட்டத்தில் ''முதோள அவுன்ட்ஸ்'' என்ற வேட்டை நாய் வகைகள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
- பாகல்கோட்டை மாவட்டத்தில் பனஹட்டி கைத்தறி சேலைகள், இட்கல்லின் பட்டுப்புடவை, அதானியின் காலணிகள் மிக சிறப்பு வாய்ந்தவை மற்றும் பெரும் தேவை உள்ளது.
- ராய்ச்சூர் மாவட்டத்தின் மஸ்கி என்ற இடத்தில் மலையொன்று புத்தர் படுத்திருக்கும் வடிவத்தில் உள்ளது.
- பசவகல்யாணா (பீதர்) மூலமாக பாய்ந்து செல்லும் சுளுகி நதி பசவண்ணருக்கு உத்வேகமாக அமைந்தது.
- தாவனகெரெ பருத்தி ஆடைகளுக்குப் புகழ்பெற்றது. ஆகையால் அதனைக் 'கருநாடகத்தின் மான்செஸ்டர்' (Manchester of Karnataka) என்று அழைப்பர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. வெற்றிடங்களை பொருத்தமான வார்த்தையால் நிரப்பவும்.

1. இந்தியா பரப்பளவில் உலகில் .... வது நிலையில் உள்ளது.
2. கருநாடகாவில் .... மாவட்டங்கள் உள்ளன.
3. இந்தியாவில் .... மாநிலங்கள் மற்றும் .... ஒன்றியபகுதிகள் உள்ளன.
4. இந்தியாவின் மிக உயரமான சிகரம் ....
5. கருநாடகாவின் நுழைவாயில் என்று .... அழைக்கப்படுகிறது.
6. கருநாடக மாநிலத்தில் அதிக மழை பெய்யும் பகுதி ....

II. விடையளிக்கவும் :

7. இந்தியா எந்த அட்சரேசை மற்றும் தீர்க்க ரேகைகளுக்கு இடையில் நீண்டுள்ளது? (இதன் புவியியல் இருப்பிடம் என்ன?)
8. கருநாடகத்தின் அண்டை மாநிலங்களைப் பட்டியலிடுக.
9. இந்தியாவின் இயற்கை பிரிவுகளைக் குறிப்பிடுக.
10. கருநாடகத்தின் இயற்கைப்பிரிவுகள் யாவை?
11. கடலோரப் பகுதியில் உள்ள கருநாடகத்தின் மாவட்டங்களைக் குறிப்பிடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

செயல் பாடுகள்

1. இந்தியா மற்றும் கருநாடக வரைப்படத்தில் இயற்கை பிரிவுகளைக் குறிப்பிடுக.
2. இந்தியா மற்றும் கருநாடகத்தில் உள்ள முக்கியமான மலை, பீடபூமி மற்றும் சமவெளிகளை ஆசிரியர் உதவியுடன் வரைப்படத்தில் குறிப்பிடுக.

- நம்மைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கவனித்து அங்குள்ள இயற்கைப் பண்புகள், தாவரங்கள், விளைப்பொருட்களின் பட்டியலைத் தயார் செய்க.

பாடம் 13	வட அமெரிக்கா

U3T5E3

பாட அறிமுகம்

கடந்த வருடம் நீங்கள் ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களின் இயற்கை அமைப்புகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை பற்றி அறிந்து கொண்டீர்கள், இவ்வருடம் நீங்கள் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும்' அண்டார்டிகா கண்டங்களைப் பற்றிய விவரங்களை அறிவீர்கள்,

இப்பாடத்தில் வட அமெரிக்கா கண்டத்தின் இடம், பரப்பு, நில அமைப்பு, இயற்கைப்பிரிவுகள், தட்ப வெப்ப நிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள், வேளாண்மை, முக்கிய கனிமங்கள் மற்றும் தொழிற்சாலைகள், மக்கட் தொகைப் பெருக்கம், பரவல் மற்றும் அடர்த்தி இவற்றைப் பற்றி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திறன்கள்:

1. வட அரிமரிக்காவின் இடம், பரப்பு மற்றும் நில அமைப்புகளைப் பற்றி அறிதல்.
2. வட அமெரிக்காவின் இயற்கை பிரிவுகளின் பன்முகத் தன்மையை ஒபிபிட்டு அறிதல்.
3. வட அமெரிக்காவின் நதிகள் மற்றும் பெரிய ஏரிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
4. வட அமெரிக்காவின் தனிச்சிறப்புமிக்க தட்ப வெப்ப நிலை, இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மீது ஏற்படுத்தும் விளைவுகளை அறிந்து கொள்ளுதல்.
5. வட அமெரிக்காவின் வேளாண் வளர்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
6. முக்கியமான கனிம வளங்களைப் பயன்படுத்தி வட அமெரிக்கா எப்படி தொழிலில் வளர்ச்சியடைந்தது என்பதை அறிந்து கொள்ளுதல்.
7. வட அமெரிக்காவின் மக்கட் தொகையின் மூலம், அடர்த்தி மற்றும் பரவலைப் பற்றி அறிதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

வட அமெரிக்கா சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கண்டம் ஆகும். இக்கண்டத்தில் வாழ்பவர்கள் பலர் ஐரோப்பியர் மற்றும் பிற நாடுகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களாவர். அவைகளில் ஸ்பெயினை சேர்ந்தவர் மெக்ஸிகோவின் தங்கத்தை பயன்படுத்தினர். பிரஞ்சுக்காரர்கள் கெனாடாவில் உரோம வியாபாரத்தை அமோகமாக நடத்தினர். பிரிட்டிஷர்கள், கெனடாவின் அட்லாண்டிக் பகுதி மற்றும் நியூ இங்கிலாந்தில் மீன் பிடித்தொழிலை நடத்தினர். அதுமட்டுமல்லாமல் காடுகளைக் கொள்ளையடித்தனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

வட அமெரிக்கா (அரசியல்)

வட அமெரிக்காவின் ஏராளமான இயற்கை வளங்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடிகோலியது. பரந்த உள்சந்தை, அயல்நாட்டு வியாபாரம், உள்நாட்டு போக்கு வரத்து போன்றவைகளால் வட அமெரிக்கா உலகின் முன்னணி பொருளாதார வளர்ச்சி பெற்ற கண்டமாக விளங்கியது.

இக்கண்டத்தை மாதிரியாக வைத்துகொண்டு மற்ற கண்டங்களுடன் ஒப்பிட்டு அறிந்து கொள்வது அவசியமாகும்.

நிலம், இடம் மற்றும் பரப்பு

வட அமெரிக்கா, முழுமையாக நில நடுக்கோட்டின் வடப் பகுதியில் நிலை பெற்றுள்ளது. அது 7^0வட அட்சரேகையிலிருந்து 84^0, வட அட்சரேகை வரையிலும் பரந்துள்ளது. கடக ரேகை ($231/2^0$ வ,அ) இக்கண்டத்தின் தென் பகுதியில் ($661/2^0$ வ. ஆர்டிக் வட்டம்) வடப்பகுதியிலும் கடந்து செல்கிறது. வட அமெரிக்கா, கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலினாலும், மேற்கே பசுபிக் பெருங்கடலினாலும் வடக்கே ஆர்டிக் பெருங்கடலினாலும் சூழப்பட்டுள்ளது. பேரீங் நீர்கால்வாய் இதை ஆசியா கண்டத்திலிருந்து பிரிக்கிறது. பனாமா கால்வாய் தென்ஆப்பிரிக்காவுடன் இணைக்கிறது. பல சிறுசிறு நீர்பகுதிகளும் இங்கு காணப்படுகின்றன. (எ.டு) மெக்ஸிகோ வளைகுடா, ஹட்சன் விரிகுடா, அலாஸ்கா வளைகுடா காலிபோர்னியா வளைகுடா முதலியன. வெஸ்ட் இண்டிஸ் மற்றும் கியூபா தீவுகளை கரிபியன் சமுத்திரத்தில் காணலாம். கெனடாவில் கிழக்கு கடற்கரைப் பகுதியில் நியூஃபௌன்லேன்ட் பிரதேசமுள்ளது. ஆர்டிக் பெருங்கடலில் அநேக தீவுகள் உள்ளன. அவற்றில் கீரின்லாந்து மிகப் பெரியதாகும். வட அமெரிக்காவின் தென் பகுதியின் விளிம்பு வரையுள்ள நிலப்பகுதி மத்திய அமெரிக்கா என்று அழைக்கப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

வட அமெரிக்கா நிலப்பரப்பில் (16.46%), ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவிற்குப் பிறகு, வட அமெரிக்கா, மூன்றாம் இடத்தில் உள்ளது. இது இந்தியாவை விட சுமார் ஏழு மடங்கு (24.24 மில்லியன் ச.கி.மீ) பெரியதாகும். வட அமெரிக்காவில் 24 நாடுகள் உள்ளன, கெனடா, அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மற்றும் மெக்சிகோ, இந்த மூன்று நாடுகள் அளவில் பெரியன, வட அமெரிக்காவின் இயற்பியல் பரப்பில் கரிபியன் தீவுகளும் சேரும்.

உங்களுக்கு இது தெரியுமா?

நாடுகள்	-	அவற்றின் தனிச்சிறப்பு
மெக்ஸிகோ	-	மாயன் நாகரிகத் தளங்கள்
கெனடா	-	பனி பறவை, பனிக்கரடி
யு.எஸ்.எ	-	கிராண்ட் கென்யான், ஹோம்ஸ், பார் ரிங்கர் கிரேட்டர், வால்கனோஸ்
வெஸ்ட் இன்டீஸ்	-	கிரிக்கெட், தீவுகள்

@KTBS NOT TO BE REPUBLISHED

2. இயற்கைப் பிரிவுகள்

வட அமெரிக்கா கண்டம் நான்கு முக்கிய இயற்கை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை.

1. மேற்கு மலைத்தொடர்கள் அல்லது ராக்கி மலைகள்.
2. மகா மற்றும் மத்திய சமவெளிகள்.
3. கெனடியன் பீடபூமி
4. அபலேஷியன் மேட்டு நிலங்கள்

வட அமெரிக்கா (இயற்கை)

மேற்கு மலைத் தொடர்கள்

இவை இந்தியாவின் இமயமலைத் தொடர்களைப் போலவே மடிப்பு மலைத்தொடர்களாகும். மேற்குமலைத்தொடர்கள் வடக்கே அலாஸ்காவிலிருந்து தெற்கே பனாமா வரையில் பரந்துள்ளது. அவை நிரந்தரமான பீடபூமிகளைப் பெற்றுள்ளன. எ.கா: கொலராடோ, மெக்ஸிகன் யூகட்டன் பீடபூமிகள் ஆகும்.

ராக்கி மலைத் தொடர்கள்

அலாஸ்கா மலைத் தொடர்கள்

மெக்கன்லே மலைகள்

NOT TO BE REPUBLISHED

மேற்கு மலைத்தொடர்களில் ராக்கி மலைகள் மிக முக்கியமான மலைத் தொடர்களாகும். இத்தொடர்களில் மௌன்ட் மெக்கின்லே (6194 மீ) மிக உயர்ந்த சிகரமாகும். மரணப்பள்ளதாக்கு (கடல் மட்டத்திலிருந்து 86மீ வரை தாழ்வான) மிகத் தாழ்ந்த பகுதியாகும், காலிஃபோர்னியாவிலுள்ள வைட்னி மலை மற்றும் ஸ்வேதா மலைகள் தமக்கே உரிய ஏற்ற இறக்கங்களைப் பெற்றுள்ளன. அதன் இயற்கை அழகு குறிப்பிடத்தக்கதாகும். இந்த பீட பூமிகளுக்கு இடையே சில மலைப் பீடபூமிகளைக் காணலாம். கொலம்பியா, கொலராடோ மற்றும் மெக்ஸிகன் பீடபூமிகள் அவற்றில் முக்கியமானவை. கொலராடோ நதியின் அபார மண் அரிப்பினால் கொலராடோ மகா கணவாய் பீடபூமி (கிராண்ட் கென்யன்) அமையப் பெறுவதற்குக் காரணமாகிறது.

ஓல்ட் ஃபேத்ஃபுல் கைசர் : உலகின் புகழ்பெற்ற வெப்ப நீரூற்றாகும். இது ஒருங்கிணைந்த அமெரிக்காவில் உள்ள யல்லோஸ்டோன் தேசிய பூங்காவில் அமைந்துள்ளது.

ஓல்டு ஃபெய்த்ஃபுல் கீஸர்

மகா மற்றும் மத்திய சமவெளிகள்

மத்திய சமவெளிகள், பிரெய்ரீஸ் மகா சமவெளிகள் என்றும் அழைக்கப் படுகின்றன. இவை கிழக்கே அபலேஷியன்கள் மற்றும் மேற்கு மலைத் தொடர்களுக்கிடையே காணப்படுகிறது, இச்சமவெளிகளின் பரப்பளவு அதிகமாக இருந்து வட அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் 3/5 -பாகம் சமதள அம்சங்களிலிருந்து சரிவு அம்சங்கள் வரையிலான நிலப்பகுதியைப் பெற்றுள்ளன. இச்சமவெளிகள் மிசோரி நதிகள் மற்றும் அவற்றின் நதிக்கிளைகளின் மூலம் உருவாயின. உலகிலேயே மிக வளமான சமவெளிகளில் ஒன்றாகும் மற்றும் சிறந்த வேளாண் பகுதியுமாகும். இப்பிரதேசத்தின் வடப்பகுதி பனித்தட்டுகளினால் (பனிநதி) மண் அரிக்கப்பட்டு பல பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன. இப்பள்ளத்தாக்குகள் ஏரிகளால் சூழப்பட்டுள்ளன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

புழுதிக் கிண்ணம் (Dust Bowl) இது தூசியுடன் கூடிய உள்ளூர் சுழல் காற்றுகளினால் உண்டானது, அமெரிக்கா மற்றும் கெனடாவின் ப்ரெய்ரீஸில் வேளாண்மைக்கு அழிவை உண்டாக்குகிறது.

3. கெனடியன் நிலக்கேடயம்

கெனடியன் நிலக்கேடயம் வட அமெரிக்காவின் வடக்கு பகுதியில் ஹட்சன் விரிகுடாவைச் சுற்றிலும் பரவியுள்ளது. இது இந்திய தக்காண பீடபூமியைப் போலவே உலகத்தின் மிகப் பழங்கால கற்களால் அமையப்பெற்றது.

4. அபலேஷியன் மேட்டு நிலங்கள்

கிழக்கு மேட்டு நிலங்களை அபலேஷியன்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை கண்டத்தின் கிழக்கு எல்லை முழுவதும், நியூஃ பௌன்ட்லாண்ட் பகுதியிலிருந்து அலபாமா வரையிலும் பரந்துள்ளது. அபலேஷியன்கள் பழங்கால மடிப்பு மலைகள் ஆனாலும், வண்டல் காரணமாக அவை தற்போதைய உயரத்தை அடைந்துள்ளன.

அபலேஷியன் மடிப்பு மலைகள்

அபலேஷியன் தொடர்களின் கிழக்கு பகுதிகள் பீடபூமி மற்றும் அட்லாண்டிக் கடற்கரையிலும் காணப்படுகிறது. செயின்ட் லாரன்ஸ் பள்ளதாக்கு, லாப்ராடார் பீடபூமியை அபலேஷியன் தொடர்களினால் பிரிக்கப்பட்டுள்ளது, அவை நிலக்கரி, ஈயம், துத்துநாகம், இரும்புதாது, தாமிரம், நீர் ஆற்றல் மற்றும் காடுகளினால் செழுமையாக இருப்பதால் இப்பகுதி வியத்தகு ஜனத்தொகையை பெற்றுள்ளது. அது தென் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியத்துவம் வகிக்கிறது.

நதிகளும் பெரிய ஏரிகளும்

வட அமேரிக்கா சில பெரிய மற்றும் சிறிய நதிகளைப் பெற்றுள்ளது. இக்கணிடத்தின் கெனடியன் நிலக்கேடயத்தில் ஒரே வகையான நிலவியல் அம்சங்களைப் பெற்றுள்ள எண்ணிலடங்கா ஏரிகள் உருவாகியுள்ளன. அவை பனி பாறைகளின் செயல்பாடுகளால் உருவானவை.

1. நதிகள் : மிசிசிபி மற்றும் மிசோரிகள் வட அமெரிக்காவின் மிகப் பெரிய நதிகளாகும். மொத்தமாக 2/3 பாக நிலப் பகுதிக்குள் பாய்கின்றன. மிசிசிபி மிகப் பெரிய நதியாகும் மற்றும் மெக்ஸிகோ வளைகுடாவிற்குள் பாய்கிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

வட அமெரிக்கா நதிகள்

கொலராடோ நதி, கொலராடோ பீடபூமியின் வழியாகப் பாய்ந்து பெரிய பள்ளதாக்குகிளை உருவாக்குகிறது. இது இயற்கை எழில் மிகுந்த சுற்றுலா தலமாகும். கிரான்ட் கென்யான் 'உலகத்தின் இயற்கை அதிசயம்' என்று அழைக்கப்படுகிறது.

மகா கென்யான் (அரிஜோனா யு.எஸ்.எ) ஆழம் - சுமார் 1800மீ. அகலம் - 3 லிருந்து 29 கீ.மீ.

செயின்ட் லாரன்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கெனடாவின் மிகப் புகழ்பெற்ற நதியாகும். இது மகா ஏரிகளின் மூலம் பாய்கிறது. ஒரு வருடத்தில் மூன்று மாதகாலம் வரை இது பனியால் உறைந்திருக்கும்.

ஏரிகள்: வட அமெரிக்கா நன்னீர் மற்றும்' உப்பு நீர் ஏரிகள் பலவற்றைப் பெற்றுள்ளது. அவை கெனடியன் பீடபூமியின் தென் எல்லைப்பகுதியில் நிலைப்பெற்றுள்ளன யூரான், ஒண்டாரியோ, மிச்சிகன், ஐரி மற்றும் சுப்பீரியர்கள் முக்கியமான ஏரிகளாகும்.

சுப்பீரியர் ஏரி

NOT TO BE REPUBLISHED ©KTBS

மொத்தமாக அவற்றை ஹோம்ஸ் (Homes) என்று அழைப்பர். சுபீரியர் ஏரி மகா ஏரிகளில் பெரியதாகும் மற்றும் உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும். சிகாகோ மற்றும் டெட்ராயிட் நகரங்கள் மிச்சிகன், ஏரியின் கரையில் நிலைபெற்றுள்ளன. இவ்வனைத்து ஏரிகளும் முக்கியமான நீர்மார்க்கங்களை அளித்துள்ளன.

தட்ப வெப்ப நிலையும் இயற்கைத் தாவரங்களும்

தட்ப வெப்ப நிலை : வட அமெரிக்கா அதிக நிலப்பரப்பில் வெவ்வெறு மேற்பரப்பு அம்சங்கள் முதலியவற்றினால் தனிச்சிறப்பு வாய்ந்த தட்ப வெப்பத்தைப் பெற்றுள்ளது. அலாஸ்கா மற்றும் கீரீன்லாண்ட் உறையும் வானிலையைப் (துந்திர மாதிரி) பெற்றுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்மேற்கு பாலைவனங்கள் சுட்டெரிக்கும் வெப்பத்தைப் பெற்றுள்ளன. ஃப்ளோரிடாவின் தென்கிழக்குப் பகுதி, கரிபியன் மற்றும் மத்திய அமெரிக்காப் பகுதிகள் வெப்ப மண்டல தட்ப வெப்ப நிலையைப் பெற்றுள்ளது. இக்கண்டத்தின் மத்திய மற்றும் தென் பகுதிகள் ஹரிகேன்ஸ் மற்றும் டொர்னாடோக்கள் போன்ற வலிமையான சுழல் காற்றுகள் வீசும் பிரதேசங்களாக உள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED



ஹரி கேன்ஸ்

டொர்னாடோ

டுவிஸ்டர

NOT TO BE REPUBLISHED ©KTBS

வடஅமெரிக்காவின் - இயற்கைத் தாவரங்கள்

இயற்கைத்தாவரங்கள் :- இயற்கை தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கை அங்குள்ள தட்பவெப்ப நிலை மண் மற்றும் நில அமைப்பு அம்சங்களைச் சார்ந்துள்ளது. வட அமெரிக்கா பெற்றுள்ள தனிச்சிறப்பு மிக்க தட்பவெப்பநிலை மற்றும் நில அமைப்பின் காரணமாக பல துந்திர வகைத் தாவரங்களைப் பெற்றுள்ளது.

இத்தாவர வகைப் பட்டியல்கள் (Beks) முக்கியமாக பிரதேசங்களின் தட்ப வெப்ப நிலையை அனுசரிக்கின்றன, அவை துந்திர மாதிரி தாவரங்கள், வட வட்டத்திற்குள் (ஆர்டிக் வட்டம்) காணப்படுகின்றன. அதிலும் முக்கியமாக கெனடா, அலாஸ்கா மற்றும் கிரீன்லாண்டுகளில் காணப்படுகின்றன, நீண்ட குளிர்காலம் மற்றும் உறைப்பனியும், குறைவான கோடைக்காலமும் கொண்டதாக உள்ளது. பாசி மற்றும் சில வளர்ச்சி குன்றிய பூந்தாவரங்கள் மட்டுமே இங்கு வளர்கின்றன. சில நறுமணப் பூக்கும் தாவரங்கள் கோடைக்காலத்தில் வளரும். இத்தகைய கடின மற்றும் சிக்கலான சூழ்நிலையில் வாழக்கூடிய, விலங்குகள் பனிமான், கரிபோ மற்றும் வெப்பத்தைத் தாங்கக்கூடிய ஊன் உண்ணிகளான பனிக்கரடிகள் மற்றும் நரிகள் இங்கு காணப்படுகின்றன.

சூச்சிபர்ணா காடு

துந்திர பட்டியின் தென் பகுதிகள் மிதமான குளிர்ந்த தட்ப வெப்ப மண்டலமாக இருப்பதால் அங்கு குளிர்ந்த வெப்ப நரிகள் காணப்படுகின்றன. இது உண்மையான ஊசியிலைக் காடுகளின் பட்டியாதலால் அதை 'தைகா' என்று அழைக்கிறார்கள். எப்பொழுதும் பசுமையாகவே தென்படும் மரங்களான பைன், ஃபர், ஸ்புரூஸ், லார்ச் முதலியன இங்குள்ளன. உரோமம் நிறைந்த விலங்குகளை இப்பிரதேசத்தில் காணலாம் எகா: லைனாக்ஸ், சாபல், சில்வர், ஃபாக்ஸ் முதலியன.

பீவர்



கருப்பு குரங்கு

NOT TO BE REPUBLISHED @KTBS

கருப்பு பனிக்கரடி

சில்வர் பாக்ஸ்

சைப்ரஸ்

செஸ்ட் நட்

@KTBS NOT TO BE REPUBLISHED

இலையுதிர் வகைக் காடுகளை செயின்ட் லாரன்ஸ் மற்றும் மகா ஏரிகளின் கிழக்குப் பகுதியில் காணலாம், இப்பிரதேசத்தின் வடப் பகுதியில் குளிரும், தென் பகுதியில் வெதுவெதுப்பான தட்பவெப்ப அறிகுறிகளும் காணப்படுகின்றன. குளிர்காலத்தில் குளிர் அதிகமாகவும், கோடைக்காலம் வெதுவெதுப்பாகவும், மழையும் பெய்கிறது. இங்கு காணப்படும் மரங்கள் குறிப்பிட்ட காலத்தில் இலைகளை உதிர்த்து விடுகின்றன. எ.கா. சைப்ரஸ் ஒக், ஆஷ் மற்றும் செஸ்ட்நட் ஆகும். இங்கு காணப்படும் வனிவிலங்குகள் என்றால் பீவர், கருப்புகரடி, ஹிமாஎலி மற்றும் போர்க்குபைன்கள்.

குளிர்ந்த சீதோஷணப் பகுதி தாவரங்களையும் தட்பவெப்ப நிலையையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பகுதிகளில் காணலாம் ராக்கி மலைகள் மற்றும் மிசிசிபி - மிசோரி மகாநதிகளின் பூமிக்கிடையே பரந்த புல்வெளிப் பிரதேசமுள்ளது, இதை பிரெய்ரீஸ் என்றும் அழைப்பர். இந்த மைதானப் பகுதியில் கோதுமை பயிரிடப்படுகிறது மற்றும் கால்நடை வளர்த்தலுக்கும்

புகழ்பெற்றது. இதை உலகத்தின் 'கோதுமை களஞ்சியம்' அல்லது 'ரொட்டிப் பாத்திரம்' என்றும் அழைப்பர்.

பிரைரீஸ் புல்வெளிகள்

ஊசியிலை மற்றும் இலையுதிர் காடுகளின் மரங்கள் சமசீதோஷணம் கலந்த காடுகளில் காணப்படுகின்றன, கெனடா மற்றும் வட காலிஃபோர்னியா இத்தகைய காடுகளைப் பெற்றுள்ளன. இக்காட்டுப் பகுதிகளில் காணப்படும் முக்கிய மரங்கள் பர்ச், பீச், மேபல், ஓக் முதலியவை

மஹாகனி

மேபல்

கனடா ஏரிகள் நிறைந்த நாடு, குறைவான மக்கள் தொகை மற்றும் அதிகமான தைகா மாதிரி காடுகளைப் பெற்றுள்ளது. உலகின் மிகப் பெரிய மர ஏற்றுமதி இங்கிருந்தாகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

மெக்ஸிகோவின் தென் பகுதி மற்றும் வெஸ்ட் இன்டீஸ் பிரதேசம் வெப்ப மண்டலக் காடுகளுக்கு பெயர் பெற்றவை. இங்கு வலிமை வாய்ந்த மரங்களான மஹாகனி மற்றும் லாக்வுட் இரண்டும் கலந்த கலப்புக் காடுகள் காணப்படுகின்றன.

கலிஃபோர்னியாவின் மேற்கு கடற்கரைப் பகுதி மெடிட்டரேனியன் வகை தட்பவெப்ப நிலையைப் பெற்றுள்ளது. தென் காலிஃபோர்னியா, மெக்ஸிகோ மற்றும் ஆரிசோனாகளில் இக்கண்டத்தின் மேற்குப் பகுதியின் பாலை வனங்களின் (வெப்ப) தட்ப வெப்ப நிலையைக் காணலாம். பல்வேறு வகையான கள்ளிச் செடிகள் மற்றும் முட்புதர்கள் இங்கு காணப்படுகின்றன. பாலைவன இரவுகள் 'பாலைவனத்தின் குளிர்காலம்' என்று அழைக்கப்படுகின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

பாலைவனத் தாவரங்கள் : பல்வேறு கள்ளிச் செடிகள்

வேளாண்மை

வேளாண்மை வட அமெரிக்காவின் ஒரு முக்கியத் தொழிலாகும்.

இக்கண்டத்தின் மத்திய தாழ்நிலப் பகுதிகள் முக்கியமாக கெனடா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதிகபட்ச வேளாண் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளாக உள்ளன. வட அமெரிக்காவின் மொத்த நிலப்பகுதியில் 10% வரையிலான பிரதேசம் மட்டுமே வேளாண்மைக்கு ஏற்றது. ஆயினும் வேளாண் பகுதியிலிருந்து கிடைக்கும் விளைச்சல்கள் அதிகம். ஏனென்றால் பரந்த வேளாண் நிலங்கள், வளமையான மண், தேவையான நீர், இயந்திர விவசாயம், மற்ற வசதிகளுடன் கூடிய மனிதனின் முழுமையான உழைப்பு வட அமெரிக்காவை உலகிலேயே மிகப் பெரிய வேளாண் பிரதேசமாக மாற்றியுள்ளது.

உலகத்தின் உணவுபொருட்களின் உற்பத்தியில் தனிச்சிறப்பு பெற்ற பிரதேசங்கள் **'பயிர்பட்டி'** என்று அழைக்கப்படுகின்றன, எ.கா. கார்ன்பட்டி, கோதுமைப்பட்டி, பருத்திப்பட்டி, புகையிலைப்பட்டி முதலியன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

வட அமெரிக்காவில் அதிலும் விசேஷமாக கனடா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் **கோதுமையை** ஒரு முக்கிய உணவுப்பொருளாக விளைவிக்கிறார்கள். பிரெயர் பிரதேசங்கள் கோதுமையை விளைவிக்கத்தக்க விளைவிக்கதக்க மண்ணைப் பெற்றுள்ளன. இங்குள்ள மக்கட் தொகை குறைவு மற்றும் அதிகளவு விளைச்சல் கிடைப்பதால் அதை ஏற்றுமதி செய்கிறார்கள். **மக்காச்சோளம், 'கார்ன்'** என்று புகழ்பெற்றுள்ளது. அது ஐக்கிய நாடுகள் மற்றும் மெக்ஸிகோவின் பரந்த பிரதேசங்களில் விளைவிக்கப்படுகின்றது. அதிகளவு மக்காச் சோளத்தை பசுக்கள் மற்றும் பன்றிகளுக்கு தீவனமாகப் (Feeds) பயன்படுத்தப்படுகிறது. மெக்ஸிகோவில் இவற்றை இறைச்சிக்காக வளர்க்கிறார்கள், இது ஒரு உணவு தானியம் ஆனால் இன்று மக்காச்சோளம் எரிபொருளுக்கான விளைப் பொருளாக பயிரிடப் படுகிறது.

கோதுமை

மக்காச்சோளம்

பார்லி, ஓட்ஸ் மற்றும் உருளைக்கிழங்கு மற்ற முக்கியப் பயிர்களாகும். பார்லி பீர் (பானம்) தயாரிக்கப் பயன்படுகிறது, ஓட்ஸ் விலங்குத் தீவினமாக பயன்படுத்தப்படுகிறது. இக்கண்டத்தில் உருளைக்கிழங்கும் கூட பயிரிடப்படுகிறது, இது முக்கிய உணவுப் பயிராக உள்ளது.

வட அமெரிக்காவில் பருத்தி மற்றும் புகையிலை வணிகப் பயிராக தென் பகுதிகளில் பயிரிடப்படுகிறது. மிசிசிபி நதி பள்ளத்தாக்கு முழுவதும் பருத்தி விளைவிக்கப் படுகிறது. புகையிலை பயிரிடும் நாடுகளில் சீன நாட்டிற்குப் பிறகு அமெரிக்கா ஐக்கிய நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.

இங்கு பயிரிடப்படும் முக்கியப் பயிர்களில் கரும்பும் ஒன்று. சர்க்கரை உற்பத்தியில் கியூபா உலகில் மூன்றாம் மிகப்பெரிய நாடாடும். எனவே இதை உலகத்தின் **'சர்க்கரைக் களஞ்சியம்'** என்று அழைக்கிறார்கள்

ஆப்பிள் தோட்டம்

திராட்சை

காபி மற்றும் கோக வெப்ப மண்டலத்தின் தோட்டப் பயிர்களாகும். இதை மத்திய அமெரிக்கப் பகுதிகள் மற்றும் வெஸ்ட் இண்டீஸ்களிலும் பயிரிடுகிறார்கள். கலிபோர்னியா, ஃப்ளோரிடா, நியூஜர்ஸி மற்றும் நகர மையங்களின் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் திராட்சை, ஆரஞ்சு எலுமிச்சை, ஆப்பிள், கொய்யா, பீச் முதலிய பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. காலிபோர்னியா வட அமெரிக்காவின் 90% திராட்சையைப் பயன்படுத்தி திராட்சை ரசத்தை உற்பத்தி செய்கிறது. எனவே காலிபோர்னியா **'திராட்சை ரச நாடு'** (வைன் நாடு) என்று அழைக்கப்படுகிறது.

வட அமெரிக்கா கண்டத்தின் வடகிழக்குப் பகுதியின் அட்லாண்டிக் பெருங்கடலின் கரையோரத்தில் கிரான்ட் பேங்க்குகள், நியூ இங்கிலாந்தின் ஜார்ஜஸ் பேங்க்குகள் மற்றும் நியூ ஃபௌன்ட்லான்ட் கடலோரப் பகுதிகளில் ஆழம் குறைந்த கண்டப் பிரதேசங்கள் புகழ்பெற்ற மீன்பிடிப் பிரதேசங்களாக உள்ளன.

முக்கிய கனிமங்களும் தொழிற்சாலைகளும்

@KTBS NOT TO BE REPUBLISHED

வட அமெரிக்கா ஏராளமான இயற்கை வளங்களைப் பெற்றுள்ளது. வெவ்வெறு மண் வகைகள், பரந்த புல்வெளிகள், கனிமங்கள் ஆற்றல் மூலங்கள் மற்றும் காட்டு வளங்கள் வட அமெரிக்காவின் இயற்கை மூலங்களாகும்.

இந்த வட அமெரிக்கா கண்டம் அதிக விலை உயர்ந்த கனிமங்களைக் கொண்டுள்ளது. இங்குள்ள தங்கப்புதையல் மக்களைத் தன்னிடம் ஈர்த்துள்ளது. அதுமட்டுமல்லாமல் இரும்புதாது, தாமிரம், நிக்கல், வெள்ளி மற்றும் ஈயம் மற்ற முக்கிய கனிமப் புதையல்களாகும். இக்கண்டம் போதுமான அளவு நிலக்கரி, கல்லெண்ணெய் (மண்ணெண்ணெய்) மற்றும் இயற்கை எரி வாயுக்களைப் பெற்றுள்ளது.

வட அமெரிக்காவின் முதன்முதல் கனிம சுரங்கம் ஒரு தங்கச் சுரங்கமாகும். காலிபோர்னியா மற்றும் யூகாடன் பள்ளாத்தாக்குகள் தங்க கிணறுகளைப் பெற்றுள்ள முக்கிய பிரதேசங்களாகும், சுபீரியர் ஏரியும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேச ங்கள் அதிகளவு இரும்புத்தாது சுரங்கங்களுக்குப் புகழ்பெற்றது.

நல்ல தரம் வாய்ந்த இரும்புத்தாது, கெனடியன் பீடபூமியிலும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசாங்களிலும் காணலாம். மெக்ஸிகோ உலகத்தின் முக்கியமான வெள்ளி உற்பத்தி செய்யும் நாடாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகத்தின் மிகப்பெரிய செம்பு உற்பத்தி செய்யும் நாடாகும்.

தங்கம்

இரும்பு

எஃகு

நிலக்கரி

தாமிரம்

நிக்கல்

@KTBS NOT TO BE REPUBLISHED

வெள்ளி

துத்தநாகம்

சிகாகோ தொழிற் நகரம்

வட அமெரிக்கவிலுள்ள அப்பலேஷியன் பிரதேசத்தில் அதிகமான மற்றும் உயர்தர நிலக்கரி சுரங்கங்களைப் பெற்றுள்ளது, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகிலேயே அதிகபட்ச நிலக்கரி ஏற்றுமதி செய்யும் நாடாகும். பசுபிக் மகா சமுத்திரத்தின் கடற்கரைப் பிரதேசங்கள் அதிமான இயற்கை எரிவாயுக்களின் புதையல்களைப் பெற்றுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளும் புகழ்பெற்ற பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் நாடாகும் மற்றும் உலகிலேயே அணு சக்தியை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடும் ஆகும்.

NOT TO BE REPUBLISHED

வட அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கெனடா நாடுகள் அதிக தொழில் மயமாக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கும் இரும்புத்தாது, நிலக்கரி, தாமிரம் பாக்ஸைட் போன்ற கச்சா பொருட்கள் பல தொழிற்சாலைகளுக்குப் பயனுள்ளதாக விளங்குகின்றன. ஆற்றல், போக்குவரத்து மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் கிடைக்கப்பெறுவதால் இங்கு பெருமளவு தொழில் மயமாக்காக்கப்பட்டதன் காரணமாகும்.

ஐரி, சுபீரியர் மற்றும் மிச்சிகன் ஏரிப்பகுதிகளில் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் சிறப்பாக வளர்ச்சியடைந்து

உள்ளதைக் காணலாம். இதற்கு இங்குள்ள கச்சா பொருட்கள் மற்றும் நீர்ப் போக்குவரத்து அற்புதமாக உதவி புரிகின்றன. இங்குள்ள பிட்ஸ்பர்க் நகரம் ''எஃகு நகரம்'' என்று அழைக்கப்படுகிறது. இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் அடிப்படை தொழிற் சாலைகள் என்பதால் மற்ற அடிப்படை தொழிற்சாலைகளான ஆடோமொபைல் கப்பல் கட்டுதல், லோகோ மோட்டிவ் கனரக பொறியியல், விமானம் கட்டுதல், உந்துப் பொறி போன்ற தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு உதவிபுரிகின்றன.

பிட்ஸ்பர்கீ எஃகு நகரம்

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மற்றும் கனடாவில் மென்மையான மரங்களை காகிதம், பலகை மற்றும் செய்தித்தாள் தயாரிக்க பயன் படுத்தப் படுகின்றன. கூழ் செயற்கை இழைகள் செய்ய பயன் படுத்தப் படுகிறது. மேலும் கனடா காகித கூழ் மற்றும் செய்தித்தாள் ஏற்று மதியில் முன்னணியில் உள்ளது. வட அமெரிக்காவில் மரம் வெட்டுதல் என்பது நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாகும்.

கெனடாவில் மரம் வெட்டுத் தொழிலைச் சார்ந்துள்ள மக்களை **லம்பர் ஜாக்ஸ்** என்று அழைப்பர். **இரசாயனத் தொழிற்சாலைகள்,** செயற்கை இரப்பர், **பிளாஸ்டிக்,** உரங்கள் மற்றும் மருந்துகள் போன்ற வெவ்வெறு பொருட்களை தயாரிக்கின்றன, தற்போது மரத்திற்கு பதிலாக பிளாஸ்டிக் அதிகமாகப் பயன்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எல்லாப் பகுதிகளிலும் பிளாஸ்டிக் தயாரிக்கப்படுகிறது. சிகாகோ நகரம் பிளாஸ்டிக் தொழிற் சாலைகளுக்குப் புகழ்பெற்றது.

மாமிசத்தை டப்பாக்களில் அடைப்பது, (பதப்படுத்துதல்) முக்கிய தொழில்களில் ஒன்றாகும். பல மையங்களில் முக்கியமாக சிகாகோ, கான்ஸாஸ் நகரம் மற்றும் செயின்ட் லூயிஸ்ஸில் அதிகமாகப் பரந்துள்ளது. **மின்சாரம்** மற்றும் **மின்னணுப் பொருட்களும்** அதிகமாக உற்பத்தி செய்யபடுகின்றன. பல

NOT TO BE REPUBLISHED ©KTBS

தொழிலகப் பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கெனடா நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மக்கட்தொகை

வட அமெரிக்க மக்களில் பலர், யுரோப்பியன் அமெரிக்கன் இன்டியன்ஸ் மற்றும் ஆப்பரிக்க மக்களாக உள்ளனர். அவர்களில் பலர் ஸ்பானிஷ், ஆங்கிலம் பிரெஞ்ச் அல்லது அமெரிக்கன் இந்திய மொழிகளைப் பேசுகிறார்கள்.

வட அமெரிக்கா - மக்கள்தொகை

@KTBS
NOT TO BE REPUBLISHED

வட அமெரிக்காவின் கிழக்கு பகுதிகளில் அதிக மக்கட் தொகை அடர்த்தியை காணலாம் இங்கு நகரமயமாக்கப்பட்டுல்ளது. (எ.கா) நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ முதலியவை. ஆனால் பொதுவாக கண்டத்தின் வடப்பகுதிகளில் பனியால் மூடப்பட்டு வெறுமையாக உள்ளன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நகரங்கள் மற்றும் அதிக தொழிற்பிரதேசங்கள் அதிக மக்களடர்த்தியுள்ள பிரதேசங்களாக உள்ளன. வட அமெரிக்காவின் 98% மக்கட்தொகை நகர மக்கட்தொகை யாகும்.

புதிய சொற்கள் :

பிரெய்ரீஸ், கரீபியன், மலைப் பகுதிகள், ராக்கீஸ், அப்பலேஷயன்ஸ், கெனடியன், மடிப்பு மலைகள், பீடபூமி, பள்ளத்தாக்குகள், ஹோம்ஸ், ஹரிகேன்ஸ், டொர்னாடோ, டுவிஸ்டர், தூந்திரா, பனிமான், காரிபோ, தைகா, பயிர்பட்டி, கார்ன், ஓட்ஸ், புழுதிக்கிண்ணம், கோகிங், உந்துப்பொறி, லம்பர் ஜாக்ஸ்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. வெற்றிடங்களை பொருத்தமான வார்த்தையால் பொருத்தவும்.

1. வட அமெரிக்கா கண்டத்தை .... கண்டம் என்று அழைப்பர்.
2. கனடாவில் மரம் வெட்டும் தொழிலை சார்ந்துள்ள மக்களை .... என்று அழைக்கிறார்கள்.
3. உலகின் கோதுமை களஞ்சியம் என்று .... ஐ அழைப்பர்.
4. ஊசிலைகாடுகளை.............என்று அழைக்கப்படுகிறது.

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்கவும்.

5. வடஅமெரிக்கா கண்டத்தின் இடம் மற்றும் பரப்பளவைக் குறிப்பிடுக.

6. வட அமெரிக்கா கண்டத்தின் முக்கிய நாடுகளைப் பட்டியலிடுக.
7. வட அமெரிக்காவின் கிராண்ட் கென்யான் எப்படி உருவாயின?
8. வட அமெரிக்காவின் முக்கிய தாவரங்கள் மற்றும் விலங்குகளைக் குறிப்பிடுக.
9. வட அமெரிக்கா கண்டத்தின் முக்கிய நதிகளைப் பட்டியலிடுக.
10. வட அமெரிக்காவில் காணப்படும் முக்கிய மக்கள் மற்றும் அவர்களுடைய மொழிகளைக் குறிப்பிடுக.

செயல்பாடுகள்

1. வட அமெரிக்காவின் எல்லைக்கோட்டு வரை படத்தை வரைந்து அதில் அட்லாஸைப் பயன்படுத்தி கண்டத்தின் முக்கிய மலைகள், நதிகள், ஏரிகள், சமவெளிகளைக் குறிப்பிடவும்.
2. வட அமெரிக்கா கண்டத்தில் காணப்படும் முக்கிய தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பட்டியலிட்டு அவற்றின் படங்களைச் சேகரிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 14 தென் அமெரிக்கா

D3P7D7

பாட அறிமுகம்

இப்பாடத்தில் தென் அமெரிக்கா கண்டத்தின் இடம், பரப்பளவு மற்றும் இயற்பியல் அம்சங்கள், நதிகள் மற்றும் ஏரிகள், தட்ப வெப்பநிலை, இயற்கைத் தாவரங்கள், வனவிலங்குகள், வேளாண்மை மற்றும் கால்நடை வளர்த்தல், மக்களடர்த்தி, சமூகப் பங்கீடு மற்றும் அடர்த்தியைப் பற்றிய அறிமுகம் இப்பாடத்தில் உள்ளது.

திறன்கள்

1. தென் அமெரிக்காவின் இடம் (இருப்பிடம்) பரப்பளவு மற்றும் இயற்பியல் பண்புகளைப் பற்றி அறிந்துக் கொள்ளுதல்.
2. தென் அமெரிக்காவின் நதிகள் மற்றும் ஏரிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
3. தென் அமெரிக்காவின் தனிச்சிறப்புமிக்க தட்பவெப்ப நிலை, விலங்கு மற்றும் தாவர வகைகளைப் பற்றி அறிதல்.
4. தென் அமெரிக்காவின் வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பேணுதலிலுள்ள சிறப்பை அறிந்துக் கொள்ளுதல்.
5. தென் அமெரிக்காவின் மக்கட்தொகை, சமூகக்கலவை, பங்கீடு, அடர்த்தி இவற்றை பற்றி அறிந்து கொள்ளுதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

தென் அமெரிக்கா உலகிலேயே நான்காவது மிகப்பெரிய கண்டமாகும். பொ.ச.1498 இல் கிரஸ்டோபர் கொலம்பஸ் இக்கண்டத்தை அடைந்து ‘இந்தியா என்று நினைத்து அங்குள்ள பழுப்பு நிற வாசிகளை ‘ரெட் இண்டியன்ஸ்’ என்று அழைத்தார். பிறகு ஐரோப்பியர் (ஸ்பேனிஷ் மற்றும் போர்ச்சுகீசியர்கள்) இக்கண்டத்திற்கு குடியேறினர்.

தென் அமெரிக்கா ஆன்டிஸ் மலை மற்றும் அமெசான் நதிகளாலான சிறப்பான நிலப்பரப்பாகும். இது உலகிலேயே

அதிகமாக காபியை உற்பத்தி செய்கிறது. இது பொதுவாக ''புல்வெளிகளின் நாடு'' என்று அழைக்கப்படுகிறது.

இருப்பிடம், பரப்பு, மற்றும் இயற்பியல் பண்புகள்

தென் அமெரிக்கா கண்டத்தின் பெரும பகுதி தென் அரைக் கோளத்தில் காணப்படுகிறது. நிலநடுக்கோடு மற்றும் மகர ரேகைகள் இக்கண்டத்தின் மூலமாக பாய்ந்து செல்கிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

தென் அமெரிக்கா - இயற்கை

இது வடக்கே அகலமாகவும், தெற்கே குறுகியும் முக்கோணம் வடிவில் உள்ளது. அதனுடைய அட்சரேகைப் பரப்பு, 12^{0} வட அட்ச ரேகையிலிருந்து 56^{0} தெற்கு அட்சரேகை வரையிலும் தீர்க்க ரேகைப் பரப்பு 35^{0} மேற்கு தீர்க்க ரேகையிலிருந்து 81^{0} மேற்கு தீர்க்க ரேகை வரையிலும் பரந்துள்ளது. தென் அமெரிக்கா கண்டம் மேற்கு அரைக்கோளத்தில் உள்ளது.

தென் அமெரிக்கா கண்டத்தின் வட பகுதிளைத் தவிர மற்ற எல்லாத் திசைகளும் நீரினால் சூழப்பட்டுள்ளது. வடக்கேயுள்ள பனாமாகால்வாய், வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவைப் பிரிக்கிறது. வடக்கே கரிபியன் கடலோரத்திலும் கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதியில் அட்லாண்டிக் பெருங்கடலினாலும், மேற்கே பசுபிக் பெருங்கடலாலும் மற்றும் தெற்கே அன்டார்டிக் பெருங்கடலின் பனி நீராலும் சூழப்பட்டுள்ளது.

தென் அமெரக்காவின் மொத்த நிலப்பகுதி சுமார் 178.4 இலட்சம் ச.கி.மீ. ஆகும் அதாவது இந்தியாவை விட சுமார் 5.4மடங்கு பெரியதாக உள்ளது. இக்கண்டத்தில் மொத்தம் பதிமூன்று நாடுகள் உள்ளன. பிரேசில் மிகப்பெரியது மற்றும் பிரெஞ்ச் கயானா மிகச் சிறிய நாடாகும். பொலிவியா மற்றும் பராகுவேயைத் தவிர எல்லா நாடுகளும் கடற்கரைகளைப் பெற்றுள்ளன. சிலி நாடு நீளமான நாடாகும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

- பனமா கால்வாய் (1912) வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் நடுவிலுள்ள முக்கிய கடல் மார்க்கமாகும்.
- அர்ஜென்டினா மற்றும் பிரேசில் கால்பந்தாட்டத்திற்குப் புகழ் பெற்றது.
- 2020 இல் டோக்கியோ, ஜப்பானில் ஒலிம்பிக் விளையாட்டு நடந்தது.
- வெனிஜுலா நாடு மாடலிங் மற்றும் வடிவமைப்பிற்கு புகழ் பெற்றது.
- சாவோ பவுலோ சிட்டி ஆஃப் ஸ்கைஸ்கேபர் (வானளாவிய கட்டிடங்களின் சஹாரா தொகுப்பு) என்று பெயர் பெற்றுள்ளது.

மேற்பரப்பு அம்சங்கள்

தென் அமெரிக்கா தனிச்சிறப்பு வாய்ந்த வெளித்தோற்ற அம்சங்களைப் பெற்றுள்ளது. அது பனியால் மூடப்பட்ட சிகரங்கள் மற்றும் அடர்ந்த (வெப்ப மண்டலத்தின்) நிலநடுக்கோடு காடுகளை பெற்றுள்ளது. இக்கண்டம் செழிப்பான சமவெளிப் பிரதேசம் மற்றும் பயனற்ற பாலைவனங்களைப் பெற்றுள்ளது. இக்கண்டத்தின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் கீழ்கண்டவாறு:

1. ஆண்டிஸ் மலைகள் 2.கிழக்கு மேட்டு நிலங்கள் 3. மத்திய தாழ்நிலங்கள் 4. மேற்கு கடற்கரை சமவெளிகள்.

1. ஆண்டிஸ் மலைகள்

ஆண்டீஸ் மலைகள்

ஆண்டிஸ் மலைகள் பசுபிக் பெருங்கடலின் கரை யோரத்தில் சுமார் 6,440 கி.மீட்டர் தூரம் வரை பரவியுள்ளது. இது உலகின் மிக நீளமான மலைத் தொடராகும். பசுபிக் பெருங்கடலின் எல்லையில் அக்னிவளையம் இருப்பதால் இப்பகுதியில் பல பூகம்பங்கள் மற்றும் எரிமலைகள் இருப்பதைத் காணலாம். மௌன்ட் அகன்காகுவா (6960.மீ), அர்ஜென்டைனா, சிலி எல்லையிலுள்ள மிக உயரமான சிகரமாகும். ஆன்டீஸ் மலைப் பிரதேசம் தாமிரம் மற்றும் தகரம் போன்ற விலையுயர்ந்த கனிமங்களைப் பெற்றுள்ளன.

2. கிழக்கு மேட்டு நிலங்கள்

ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

இப்பிரதேசம் இரண்டு வகையான மேட்டு நிலங்களைப் பெற்றுள்ளது. (i)வடக்கு கயானா மேட்டு நிலங்கள் (பீடபூமி) மற்றும் (ii) தென் பிரேசில் மேட்டு நிலங்கள் (பீடபூமி). இவை இந்தியாவின் தக்காணப் பீடபூமியைப் போல பழமையான பாறைகளால் ஆனவை. ஓரினோகோ நதியின் கிளை நதியான

‘சூரன்’ உலகத்தின் மிக உயர்ந்த ஏஞ்சல் நீர்வீழ்ச்சியை (974மீ) கயானா பீடபூமியில் உருவாக்கியுள்ளது.

3. மத்திய தாழ்நிலங்கள்

மத்திய தாழ்நிலங்கள் ஆன்டீஸ் மலைகள் மற்றும் கிழக்கு மேட்டு நிலப்பகுதிகளுக்கிடையே காணலாம். இவை பரந்த நதி பள்ளத்தாக்குகளை பெற்றுள்ளது. அவை அமேசான், ஓரினாகோ மற்றும் லால்பிளாட்டா நதி பள்ளத்தாக்குகள் ஆகும். அவற்றுள் அமேசான் நதி பள்ளத்தாக்கு மிகப்பெரியது மற்றும் புகழ் பெற்றதாகும்.

4. மேற்கு கடலோரப் பகுதிகள்

இவை சிறிய சமவெளிகளாக இருந்து பசுபிக் பெருங்கடல் மற்றும் ஆண்டீஸ் மலைத் தொடர்களிடேயே காணப்படுகின்றன. மேற்கு கடலோரப் பகுதிகள் கிட்டத்திட்ட பிளவுள்ள கடலோரப் பகுதிகளாக உள்ளன. ஏனென்றால் கடலோரத்திலிருந்து ஆண்டீஸ் மலைகள் செங்குத்தாக எழுகின்றன. மத்திய சிலி மற்றும் கொலம்பியா மேற்கு கடலோரம் முழுவதிலும் சிறிய கடற்கரை சமவெளிகள் காணப்படுகின்றன. இக்கடற்கரைப் பகுதி பிளவுகளைப் பெற்றுள்ளது. பல பெரிய நகரங்கள் கடற்கரை சமவெளிகளில் உள்ளன. கடற்கரைப் பகுதியின் தென் பகுதியிலும் மற்ற இடங்களிலும் பல தீவுகள் உள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED

நதிகள் மற்றும் ஏரிகள் :

டிடிகாகா குளம்

அமேசான், பரானா புராகுவே மற்றும் ஓரினோகோ, தென் அமெரிக்காவின் முக்கிய நதிகளாகும்.அமேசான் (6450 கி.மீ) நதி ஆண்டிஸ் மலையில் பிறக்கும் தென் அமெரிக்காவின் மிக நீளமான நதியாகும் மற்றும் உலகத்தின் மிகப்பெரிய நதியாகும். அதனுடைய நதிப்பாதை முழுவதும்

நீர்போக்குவரத்துக்கு உகந்தது. ஓரினோகோ இன்னொரு முக்கிய நதியமைப்பாகும். பரானா, பராகுவே மற்றும் உருகுவே நதியமைப்புகளின் இணைப்பே லாபிளாட்டோ ஆகும்.

டிடிகாகா ஏரி (பொலிவியா) உலகிலேயே உயரமான ஏரியாகும் மற்றும் தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நீர் போக்குவரத்துக்கு ஏற்ற ஏரியாகத் திகழ்கிறது.



தென் அமெரிக்கா நதிகள்

➤ அமேசான் - நதி
- அனகொன்டா மற்றும் பிரான்ஹா
- 1000க்கும் மேற்பட்ட கிளைகளைப் பெற்றுள்ள பெரிய நதி.
- 11.5% உலக நிலப்பரப்பு
- நிலத்தடி நதி

தட்ப வெப்ப நிலை.

தென் அமெரிக்கா தனிச்சிறப்புமிக்க தட்ப வெப்ப நிலையைப் பெற்றுள்ளது. இக்கண்டத்தில் நிலவும் தட்பவெப்ப மாற்றங்களுக்கு அங்குள்ள பசுபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களின் அண்மையே காரணமாகும்.

இக்கண்டத்தின் வடப்பகுதியில் நிலநடுக்கோடு கடந்து செல்கிறது மற்றும் இதன் தென் பகுதியில் மகர ரேகையும் கடந்து செல்கிறது. இவ்விரண்டு அட்ச ரேகைகளுக்கும் இடையே காணப்படும் நிலப்பகுதி வெப்ப மண்டலத்தில் காணப்படுகிறது. வடக்கிலுள்ள அகலமான பகுதி வெப்ப மண்டல தாக்கத்திற்குள்ளாகிறது. எனவே இங்கு வெப்பமான மற்றும் ஈரப்பதம் மிகுந்த தட்ப வெப்ப நிலையுள்ளது. நிலநடுக்கோடு இருப்பதால் அமேசான் நதி சமவெளி வெப்பமான மற்றும் ஈரமான நிலநடுக்கோட்டு தட்ப வெப்பம் நிலவுகிறது. இப்பிரதேசம் தினமும் அதிகமாக மழையை பெறுகிறது. இப்பிரதேசத்தில் பெய்யும் கனமழையே அடர்ந்த காடுகள் இருப்பதற்கான காரணமாகும். அமேசான் பள்ளத்தாக்கு அடர்ந்த காடுகளைப் பெற்றுள்ளதால், தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு அடைக்கலம் அளிக்கிறது. ஊர்வன, பறவைகள் மற்றும் குரங்குகள் இப்பிரதேசத்தில் அதிகமாக காணப்படுகின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஒரு நிலப்பகுதியிலுள்ள நீர் காலையிலிருந்தே சூரிய வெப்பத்தினால் ஆவியாகி, மேலேறி மேகமாக அன்றே அதேப்பகுதியில் மழை பெய்வதற்கு ‘பரிசரனை’ (கலவை) மழை என்பர். நிலநடுக் கோட்டுப் பகுதியில் பெய்யும் மழையை, ‘மத்தியான மழை’, ‘தேனீர் இடைவெளி மழை’, ‘4 மணி மழை’ என்று அழைப்பர்.

இக்கண்டத்தின் மேற்கு எல்லை முழுவதும் ஆண்டீஸ் மலைகள் பரந்துள்ளன. கடலோர எல்லைகளில் வீசும் காற்றுகள் மழையைக் கொண்டு வருகின்றன. ஆனால் ஆண்டீஸ் மலையின் கிழக்குப் பகுதி குறைவான மழையைப் பெறுகின்றது. இது மழைச்சார்ந்த பிரதேசமாகும் மற்றும் தென் அமெரிக்காவின் சம சீதோஷ்ண பகுதிகளிலுள்ள பாலைவனங்கள் இங்குள்ளன. அடகாமா பாலைவனம் (சிலி) உலகிலேயே மிகவும் வறண்ட பிரதேசமாகும். கடந்த 200 வருடங்களாக இங்கு மழைப் பொழியவில்லை.

அடகாமா பாலைவனம்

இயற்கைத் தாவரங்கள் :

நிரந்தர பசுங்காடுகள்

செல்வாஸ்

அமேசான் சமவெளியின் நிலநடுக்கோட்டுப் பிரதேசம் அடர்த்தியான வெப்பமண்டல மழைக் காடுகளினால் ஆனது. இது உலகின் மிகப்பெரிய மழைக்காடாகும். அங்குள்ளவர்கள் அதை செல்வாஸ் என்று அழைப்பர். உறுதியான மரங்களைக் கொண்ட நிரந்தரமான பசுங்காடுகள், அடர்த்தியான தட்டையான வடிவத்திலுள்ள மரங்களைக் கொண்டவை. மஹாகனி மற்றும் எபோனிகள் இப்பிரதேசத்திலுள்ள அதிக விலையுயர்ந்த மரங்களாகும். இங்கு காணப்படும் இரப்பர் மரங்களை, 'லாடெக்ஸ் (இரப்பர் பால்) எடுக்கப் பயன்படுத்துகிறார்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

@KTBS NOT TO BE REPUBLISHED

தென் அமெரிக்கா - இயற்கை தாவரங்கள்

நிலநடுக்கோட்டுக் காடுகளின் இரு பக்கங்களிலும் புல்வெளிகள் காணப்படுகின்றன. இவற்றை ஓரினோகோ நதிக்கரைப் பகுதியில் இக்காடுகளை லானோஸ் என்று அழைத்தால் (வெனிஜூலா) பிரேசில்லின் மேட்டு நிலப்பகுதிகளில் அவற்றை காம்பாஸ் என்று அழைக்கின்றனர். பிரேசிலின் தென் கிழக்கு கடலோரப் பகுதிகள் வெப்ப மண்டலத்தின் 'இலையுதிர் காடுகளால் ஆனவை.

 தென் அமெரிக்கா புல்வெளிகளின் நாடு

- வெனிஜுலாவின் லானோஸ் (Lianos)
- பிரேசிலின் காம்பாஸ் (Compos)
- அர்ஜென்டைனாவின் பாம்பாஸ் (Pampos)

கிரான்சாகோ பிரதேசத்தின் தென் பகுதி (அர்ஜென்டைனா மற்றும் உருகுவே) மிகப்பெரிய **மிதமான வெப்ப மண்டலத்தின் புல்வெளிகளால் ஆனது** மற்றும் அது பாம்பாஸ் என்றழைக்கப் படுகிறது.ஆண்டீஸ் மலையின் கிழக்குப் பகுதியில் இருக்கும் படகோனியா பீடபூமி வளர்ச்சி குன்றிய தாவர வகைகள் உள்ள **மிதமான வெப்ப மண்டல வகை பாலைவனங்களைப்** பெற்றுள்ளது. மத்திய பிரதேசங்கள் கலப்பு வகை காடுகளால் ஆனவை.

© KTBS NOT TO BE REPUBLISHED

வன விலங்குகள்

சமசீதோஷ்ண புல்வெளிகள்

தென் அமெரிக்கா பல வகையான வன விலங்குகள் பறவைகள் மற்றும் ஊர்வன வகை விலங்குகளைப் பெற்றுள்ளது. தென் அமெரிக்கா கண்டம் ''பறவைகளின் கண்டம்'', என்று அழைக்கப்படுகிறது. **காண்டர்** உலகத்திலேயே மிகப்பெரிய பறவையாகும். ஆப்பிரிக்காவிலுள்ள ஆஸ்டிரிச்சைப் போல **ரிஹ்யா**வும் பறக்காத ஒரு பெரிய பறவையாகும். **பறக்கும் குரங்கு, அணில் மற்றும் குரங்குகள்** அமேசான் காடுகளில் உள்ள மரங்களில் வாழ்கின்றன. பெரிய பாம்பு **(அனகோன்டா)** இங்குள்ள மழை காடுகளில் வாழும் மிகப்பெரிய ஊர்வன வகை விலங்காகும். **பியூமா** மற்றும் **ஜாக்வார்கள்** பெரிய விலங்குகளாகும். அவை குரங்கு மற்றும் வேறு சிறிய விலங்குகளை உணவாக கொள்கின்றன. **லாமா** மற்றும் **ஆல்பாக்கள்** நீண்ட கழுத்து கொண்ட ஒட்டகம் போன்ற விலங்குகள் ஆகும். இவற்றை அப்பகுதி மக்கள் அன்றாட

வேலைகளில் பயன்படுத்திக் கொள்கின்றனர், கால்பாகோஸ் தீவுகள் ராட்சத ஆமைகளுக்கு புகழ்பெற்றவை. அங்குள்ள ஈக்கள் மற்றும் பூச்சிகளும் தூக்கமின்மையை உண்டுபண்ணுகின்றன. அமேசான் நதி பலவகை மீன்களைப் பெற்றுள்ளன. அவை ஸ்டிங்க்ரே, எலிக்டிரிக் ஃபிஷ் மற்றும் பிரான்ஹா (உலகிலேயே மிக ஆபத்தான மீன்கள் ஆக உள்ளன. நதிகளில் முதலைகளும் உள்ளன.

லாமா

ஜாக்குவார்

கான்டார்

அனகோன்டா

ஆல்பாகா

பியூமா

ஆமை

பிரான்ஹா மீன்

ரியா

@KTBS NOT TO BE REPUBLISHED

வேளாண்மையும், கால்நடை வளர்த்தலும்.

தென் அமெரிக்காவில் வேளாண் நிலங்கள் குறைவாக உள்ளன, இங்கு 10 சதவீத நிலங்களில் மட்டும் பயிரிடுகின்றனர். அர்ஜென்டைனாவின் பாம்பாஸ் மற்றும் உருகுவே பிரேசிலின் மேட்டு நிலப்பகுதிகளில் சிலி மற்றும் மத்திய சிலியின் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் முக்கியமான வேளாண் பிரதேசங்களாகும். மக்காச்சோளம், கோதுமை, நெல், காபி, பருத்தி, கரும்பு முதலியன தென் அமெரிக்காவின் முக்கிய பயிர்களாகும்.

மக்காச்சோளம் தென் அமெரிக்காவின் முக்கிய உணவுப் பயிர் ஆகும் மற்றும் இது மித வெப்ப மண்டல பிரதேசங்களில் முக்கியமான உணவுப் பயிராகவும் உள்ளது. **கோதுமை,** அர்ஜென்டைனா மற்றும் சிலி நாடுகளின் குளிர்ச்சியான மித வெப்ப மண்டலப் பிரதேசங்களில் பயிரிடப்படுகிறது. கோதுமையை அர்ஜென்டைனாவிலிருந்தும் ஏற்றுமதி செய்கின்றனர். உருளைக்கிழங்கை ஆண்டீஸின் பரந்த பிரதேசங்களில் பயிரிடுகிறார்கள். நெல் பிரேசிலின் கடலோர எல்லை முழுவதும் பயிரிடப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

பிரேசில் 'உலகின் காபி பாத்திரம்' என்றுழைக்கப்படுகிறது. ஆப்பிரிக்காவிலுள்ள எதியோபியா நாட்டின் 'காபி' பிரதேசம் காபி விளைச்சலின் மூலமாகும். அதை 'காஃபா' அல்லது 'காஃபி' என்றழைப்பர். பிரேசிலில் பல்லாயிரக் கணக்கான காபி தோட்டங்களுள்ளன. ரியோ டி ஜெனீரோ 'உலகின் காபி துறைமுகம்' என்றழைக்கப்படுகிறது.

உணவு பொருள் அல்லாத காபி மற்றும் கோக்கோ விளைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் தென் அமெரிக்கா முக்கிய இடம் வகிக்கிறது. பிரேசில் உலகிலேயே காபியை அதிகமாக விளைவிக்கும் நாடாகும். கொலம்பியா மற்றும் ஈ.க்வடார் நாடுகளும் காபி பயிர்களை விளைவிப்பதில் முக்கிய இடம் வகிக்கின்றன. பிரேசிலின் கடற்கரை பகுதிகளில் கோக்கோ அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

காபி தோட்டம்

கரும்பு

ஆண்டிஸ் பகுதியின் பருத்தி பயிர் சுஸ்கா நிலச்சரிவு பகுதிகளில் விளைவிக்கப் படுகிறது, மேலும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கரும்பு உற்பத்தி செய்வதில் தென் அமெரிக்காவும் முக்கிய பங்கு வகிக்கிறது. பிரேசில் கரும்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கிய இடம் வகிக்கிறது. இது உலக அளவில் கரும்பு உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

பம்பாஸ் புல்வெளிப்பிரதேசம் கால்நடை வளர்ப்புக்கு ஏற்றதாகும். கால்நடை வளர்ப்பு என்பது ‘குதிரைகள், ஆடு, பன்றிகள் மற்றும் பசுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். ஒரு காலத்தில் அர்ஜென்டினா மாட்டு இறைச்சியை அதிக அளவில் ஏற்றுமதி செய்து வந்த நாடாகும். மாமிசத்திற்காக வளர்க்கப்படும் கால்நடைகளை வளர்க்க பாம்பாஸ் சிறந்த புல்வெளிப் பிரதேசமாக உள்ளது. சிறந்த மற்றும் அடர்த்தியான பசும் புற்களை கொண்ட பகுதிகள் பால் பண்ணையில் வளர்க்கப்படும் விலங்குகளுக்காக ஒதுக்கப்பட்டது. அவ்வாறே குறைந்த அளவில் புற்கள் உள்ள படகோனியா புல்வெளிகள் மற்றும் மலைகள் ஆகியவை ஆடு வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்டது. (கௌசோஸ்) என்றழைக்கப்படும் மேய்ப்பாளர்கள் பசுக்களை வளர்த்து வந்தார்கள்.

ஆடு வளர்ப்பு

பசு வளர்ப்பு

பசுபிக் கடற்கரை பகுதிகளில் மிகச்சிறந்த மீன்பிடித் தொழிற் பிரதேசங்கள் உள்ளன. பெரு மற்றும் சிலி நாட்டில் உள்ள கடற்கரை பகுதிகளில் முக்கியமான மீன்பிடி மையங்கள் அமைந்துள்ளன. ஆனால் இங்குள்ள பெரும்பாலான மீன்களை உணவுக்காக உபயோகப்படுத்துவதை விட தொழிற்சாலை உபயோகத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. டிடிகாகா ஏரி மற்றும் அமேசான் நதிகள் நன்னீர்மீன் பிடி மையங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன.

மீன்பிடித் தொழில்

மக்கள் தொகை

தென் அமெரிக்காவை சேர்ந்தவர்கள் கலப்பு இன குழுக்களைச் சேர்ந்தவர்கள். ஐரோப்பியர்கள் இங்கு தங்கத்தை தேடி வந்து. இங்கேயே நிலைத்து பிறகு இங்குள்ள தோட்டங்களில் வேலை செய்ய ஆப்பிரிக்காவில் இருந்து சில அடிமைகளை அழைத்து வந்தனர். இவர்கள் இடையே திருமண பந்தம் ஏற்பட்டதால் கலப்பு இனம் உருவானது. தென் அமெரிக்காவில் மூன்று முக்கிய சமூகத்தினர் உள்ளனர்.

© KTBS Not to be republished

தென் அமெரிக்கா உலகின் சராசரி (47%) நகரமயமாக்கத்தின் அளவை விட அதிக அளவு நகரமயமாக்கத்தின் அளவை (80%) பெற்றுள்ளது. மிக அதிக மக்கட்தொகை உருகுவேயிலும்(93%) குறைந்த பட்ச மக்கட்தொகை கயானாவிலும் (36%) உள்ளது.

அடர்ந்த காடுகளை கொண்ட அமேசான் மற்றும், ஆண்டியன் மலைகள், அடகாமா பாலைவனம் மற்றும் படகோனியா போன்ற வனப்பகுதிகளில் மிகக் குறைந்த அளவு மக்கள் வசிக்கும் இடங்களாகும். அதிக அளவிலான மக்கள் தொகை மிகப் பெரிய நகரங்களின் துறைமுகங்களான பியூனஸ் ஐரிஸ், ரியோடி ஜெனி ரோ, சாவோ பவுலோ போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன.



@KTBS NOT TO BE REPUBLISHED

தென் அமெரிக்க மக்கள் தொகை

தென் அமெரிக்க கண்டத்தில் முக்கியமாக கடலோரப் பகுதிகளில் அதிக மக்கள் வாழ்கின்றனர். கண்டத்தின் மையப் பகுதி குறைந்த மக்கள் தொகையைப் பெற்றுள்ளது.

எனவே இக்கண்டம் 'உள்ளீடற்ற பூமி' என்றழைக்கப்படுகிறது.

தென் அமெரிக்கா உலகின் சராசரி மக்கள் தொகை அளவுக்கு பிறப்பு விகிதத்தை பதிவு செய்துள்ளது (21/1000), ஆனால் இறப்பு விகிதம் உலக சராசரி (9/1000) விடக் குறைவாகவே (6/1000) உள்ளது. எனவே அமெரிக்காவின் மக்கள்தொகை பெருக்கம் சராசரி அளவை விட அதிகமாக உள்ளது.

புதிய சொற்கள் :

ரெட் இண்டியன்ஸ், ஆண்டீஸ், அக்னி வளையம், நிலநடுக்கோடு கயானா, ஓரினாகோ அமேசான், லாபளாடா, கிரான்சாகோ, காலபாகோஸ், ஹோர்னோஸ், பரானா பராகுவே, உருகுவே, டிடிகாகா, மத்திய தரைக்கடல் தட்ப வெப்ப நிலை, செல்வாஸ், லேடெக்ஸ், காம்பாஸ், பாம்பாஸ், பிரான்ஹா, கவ்சோஸ் படகோனியா, அடகாமா.

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சிகள்

I. வெற்றிடங்களை வார்த்தையால் நிரப்பவும்.

1. தென் அமெரிக்கா கண்டத்தின் பூர்வீக வாசிகளை .... என்று அழைக்கப் படுகிறார்கள்.
2. தென் அமெரிக்காவின் மிகப் பெரிய நாடு ....
3. தென் அமெரிக்காவில் காணப்படும் உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி ....
4. உலகின் மிக உயரமான ஏரி ....
5. தென் அமெரிக்காவில் காணப்படும் புல்வெளி ....

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

6. தென் அமெரிக்காவின் இடம் மற்றும் பரப்பளவைக் குறிப்பிடுக.

7. தென் அமெரிக்காவின் முக்கிய புல்வெளிகளைக் குறிப்பிடுக.

8. தென் அமெரிக்காவின் முக்கிய தாவரம் மற்றும் விலங்குகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

9. தென் அமெரிக்காவில் அதிக மக்கள் தொகை கொண்ட முக்கிய நகரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

செயல்பாடுகள்

1. தென் அமெரிக்காவின் வரைப்படம் வரைந்து அட்லாசின் உதவியால் நாடுகள் மற்றும் அவற்றின் தலைநகரங்கள் முக்கிய மலைகள் நதிகள், ஏரிகள், மற்றும் புல்வெளிகளை வரைப்படத்தில் குறிக்க.
2. தென் அமெரிக்காவில் காணப்படும் முக்கிய தாவரங்கள், விலங்குகள் மற்றும் பறவைகளைப் பட்டியிலிட்டு அவற்றின் படங்களை சேகரிக்க.

@KTBS
NOT TO BE REPUBLISHED